# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

● வைகாசி- 2023



# காற்றுவெளி
## கலை இலக்கிய இதழ்

வைகாசி 2023

படைப்புக்கள் அனுப்ப :
Neythal34@gmail.com
Mahendran54@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : muhammed sajid
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


வணக்கம்,

காற்றுவெளி வைகாசி(2023)மின்னிதழுடன் சந்திக்கிறோம்.

இம் மாதம் முள்ளிவாய்க்கால் வலிகளுடனான மாதம்.நிறைய ஈழக்கனவுகளுடன் வாழ்ந்த மனிதர்கள் மரணிக்கவும்,சரணடையவும் உலகநாடுகள் ஒருமித்த ஆதரவை சிறிலங்கா அரசிற்கு வழங்கி ஒரு பாரிய இன அழிப்பை நடாத்திய வலி சுமந்த மாதம்.

நீண்ட பெருமூச்சுடன் வாழ்வா சாவா என இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் அனைத்து மக்களும் நினைந்துருகி,நினைவேந்தல் செய்கின்ற மாதமும் கூட.

உலகம் மறந்துவிடலாம்...ஒவ்வொரு ஈழத்தமிழனும் மறந்துவிட்டு நகர்ந்துவிடமுடியாது.இத்தனை வருடங்களாகியும் தீர்வொன்று கிட்டாத தமிழ்ச்சமூகம் இன்றும் பலவழிகளில் போராடிக்கொண்டேயிருக்கிறது.இன அழிப்பு பல்வேறு வழிகளிலும் தொடரவேசெய்கிறது.தொல்லியல் ஆய்வு எனும் பெயரில் நமது நிலங்களை புத்தர் சிலைகளை நிறுவி ஆக்கிரமிப்புச் செய்வதுடன்,சைவ வழிபாட்டுத்தலங்களை அழித்து,பௌத்த மத பரவலாக்கத்திற்கு அரசும் துணை நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.யாரிடம் முறையிட்டும் பலன் இதுவரை கிட்டவில்லை என்பதே உண்மை.அரசியல்வாதிகள் தங்களை முன்நிறுத்தவே முனைகிறார்கள்.ஒற்றுமையுடன் யாவரும் தமது சொந்தவிருப்புக்களைக் கடந்து இணைந்தாலே நமக்கான வாசல் திறக்கும்.

காற்றுவெளி தனித்த சிறப்பு இதழைக்கொண்டுவரவே ஆர்வம் காட்டியது.

எனினும், ஒரே இதழாக வெளியிட தீர்மானித்தே இவ்விதழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

படைப்பாளர்களுக்கு எமது நன்றி.சிற்றிதழ்கள் மீதான கரிசனை உள்ளவர்களுக்கு சிற்றிதழ் வெளியிட்டுகல் பற்றியும் அறியவாய்ப்பிருக்கிறது.இன்றும் ஆங்காங்கே பல இதழ்கல் வந்த வண்ணமே உள்ளன.யாவற்றையும் காற்றுவெளி பதிவிடவிரும்புகிறது.அதன் தொடர்ச்சியாக சிற்றிதழ் சிறப்பிதழ்களைக் கொன்டுவந்துள்ளது.அவை போதுமானதாக இல்லை என்பதே நமது கருத்து.விரைவில் இன்னொரு இதழையும் வெளியிடும் எண்ணமுன்டு.

மெளும்,

விரைவில் 'நம்மவர் கதைகளின் சிறப்பிதழ்' ஒன்றையும்,ஈழத்து எழுத்தாளரான அமரர்.செம்பியன் செல்வன் அவர்களின் நினைவுச் சிறப்பிதழ் ஒன்றையும் காற்றுவெளி கொண்டுவரவுள்ளது.படைப்புக்களை படைப்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

தொடர்ந்து நம்பிக்கையுடன் பயணிப்போம்.

நட்புடன், சோபா

# படைப்பாளர்கள்

**கவிதைகள்:**

பிரான்சிஸ் திமோதிஸ்
பாரியன்பன் நாகராஜன்
கவிஞர் சாய்சக்தி சர்வி பொள்ளாச்சி
அ. செல்வராஜ்,
துறையூரான் ( சின்னையா சிவநேசன்)
வேலணையூர் ரஜிந்தன்.
ஈழபாரதி
கமலினிகதிர்
தங்கேஸ்
ரகுநாத் வ
சா.நாகூர் பிச்சை
பாவலர் கருமலைத்தமிழாழன்
ச.ஆனந்தகுமார்
எஸ். ஈஸ்வரானந்தம், கொரடாச்சேரி
வளவ. துரையன்
அய்யனார் ஈடாடி
நேசன் மகதி
வட்டக்கச்சி வினோத்
கவிஞர். மல்லை, மு.இராமநாதன்
அம்பலவன்புவனேந்திரன் (ஜேர்மனி)
ஜே.வஹாப்தீன்
கண்ணன் விஸ்வகாந்தி
DR. ஜலீலா முஸம்மில்
மெய்யன் நடராஜ்
சே கார்கவி கார்த்திக்
ஐ.தர்மசிங்
மலர்மகள்

**கட்டுரைகள்:**

பெரணமல்லூர் சேகரன்
ஐங்கரன் விக்கினேஸ்வரா
பிரேமா இரவிச்சந்திரன்
கவிஜி
செ.புனிதஜோதி

**சிறுகதைகள்:**

சுந்தரிமணியன், புதூர்
சு.கருணாநிதி.
செம்பியன்செல்வன்
இராஜ.அரியரட்ணம்
குரு அரவிந்தன்
கமலினிகதிர் (சுவிற்சர்லாந்து.)
கன்பரா யோகன்
இரா மதிராஜ்
சங்கர சுப்பிரமணியன்.
நௌஷாத் கான்.லி
யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
மிதயா கானவி

# பாரியன்பன் நாகராஜன் – கவிதைகள்

*தலையில் சுடரைச் சுமக்கும்
விளக்குகள் இருளோடு
வெளிச்ச உரையாடலைத் தவிர,
பிரிதொன்றை நிகழ்த்துவதில்லை.*

*உன்னிடம்
ரணங்களை மட்டும்தான்
காண்பித்தேன்.
இன்னும்
வலியை விவரிக்கவில்லை.*

*என் பயணம் நெடுந்தூரம்…
வழியில் சந்தித்த ஒருவன்
அனுமதி கோராமல்
என் பயணத்தில் இணைகிறான்.
அவனுக்காகவும் நீள்கிறது
என் பயணம்.*

*என்னை மென்று தின்று
செரித்து ஏப்பம் எடுத்த
உன் பார்வைகள்
இன்னும் என்னிடம்
எதையோ எதிர்பார்க்கிறது!*

*குடியானவன்
வீட்டுப் பிள்ளைகளின் பசி
கூழ்க்காய்ச்சிக் காய்ந்த
காலிப்பானையைக் கண்களால்
துழாவி நாவால் ருசிக்கும்.*

*தினந்தினம் அழுதவள்
இன்று மொத்தமாய்
அழுது தீர்க்கிறாள்.
மடிந்த குடிகாரக் கணவன்
நாளைச் சவமாய்க் கூட இல்லாமல்
இருக்கப் போ''வதை''எண்ணி…!*

*முதியோர்
இருக்கும் வீட்டில்
இல்லை முட்டாள்.*

*என் கருணை வார்த்தைகள்
உன் பசி தீர்க்கப் போவதில்லை
அது சட்டைப்பையை
நிரப்பப் போவதுமில்லை.
உன் நெஞ்சுக்கு நிச்சயம்
நிம்மதி தரும்.*

*கிளையில் ஆர்ப்பாட்டமின்றி
அமர்ந்திருக்கும் பறவையின்
அமைதியை ஆதரியுங்கள்
அது றெக்கைகளின்
வலியாகவுமிருக்கலாம்.*

*ரத்தசோகையால்
கடவுளின் நாமமென
உன் பெயரை ஜெபிக்கிறேன்
10 கிராமிலிருந்து
12 கிராமிற்கு கூடியது
என் குருதியளவு…!*

*அப்பிக் கிடக்கிறது
நேற்றைய தூறலில்
மண்ணில் பசுமை.*

# குழந்தைகள் வாழும் ஆலயம்


**பெரணமல்லூர் சேகரன்**

“குழந்தைகள் என்றால் தூய்மையான மழைநீர் போல இந்த உலகத்து மாசும் அழுக்கும் படாத தூய்மையான நீர் அது” -மு.வ.

அத்தகைய குழந்தைகள் வாழும் ஆலயம் கல்வி நிறுவனங்கள் எனின் மிகையன்று. எனவேதான்,

“ஒரு நாடு அந்த நாட்டின் கல்வி நிறுவனங்களிலிருந்துதான் உருவாக்கப்படுகிறது” என்றார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

ஆக, ஒரு நாட்டை உருவாக்கும் புனிதமான ஆசிரியர் பணியிலிருந்து கொண்டு தமது கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வுடனும், நேசிப்புடனும் செய்தால் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பதை அனுபவ வாயிலாக உணர்த்தும் உன்னதமான எளிமையான நூலே “குழந்தைகள் வாழும் ஆலயம்.”




தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் மழலையர் பள்ளிகளிலும் ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்நிலை மேனிலைப் பள்ளிகளிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களுள் அரசுப் பள்ளி ஆசிரியர்களாக அதிலும் ஆரம்பப் பள்ளி இடைநிலை ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்கள் பெரும்பாலும் பெண்களே. இது ஒருவகையில் குழந்தைகளுடன் பழகும் தாய் போன்ற அனுபவத்தை அவர்களுக்குத் தருகிறது. இதன்மூலம் அக்குழந்தைகளுக்கு அன்பும் அரவணைப்பும்

ஈர்ப்பும் ஏற்படுகிறது. பொதுவாகவே கல்வி பயிலும் சூழல் நல்ல முறையில் அமைவதைப் பொருத்துத்தான் குழந்தைகளைக் கல்வி இயல்பாய்- எளிதாய்ச் சென்று சேர்கிறது.

அத்தகைய சூழலை சில ஆசிரியர்கள்தான் உருவாக்குகிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவராக குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழ்கிறார் சா. ரஷீனா. தான் கல்வி பெற்ற அனுபவங்களையும், பெற்ற கல்வியை அர்த்த அடர்த்தியுடன் கற்பித்து குழந்தைகளைத் தாயுள்ளத்தோடு அணுகி அவர்களைப் பன்முகத் தன்மை கொண்ட மாணவர்களாக பரிணமிக்கச் செய்யும் பணிகளை எவ்வாறு மேற்கொண்டார் என்பதைச் சுவைபட தன்னனுபவங்களூடே படம் பிடித்துக் காட்டியுள்ள நூலே "குழந்தைகள் வாழும் ஆலயம்".

தான் குழந்தையாய் இருக்கும்போது ஏனைய இஸ்லாமியக் குழந்தைகளைப் போல மதரஸா பள்ளியில் சேர்ந்து அரபுப்பாடங்களில் உள்ள அடிப்படைப் பாடங்களை மட்டும் படித்துவிட்டு வீட்டோடு வளர விரும்பிய அன்னையிடம் அப்பாவின் துணையுடன் போராடி கல்வி கற்று, கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர் கல்வி கற்கிறார் ரஷீனா. அத்தகைய முயற்சியும், போராட்ட குணமும் தந்தையின் திராவிட இயக்கப் பின்னணியால் வலுவாகிறது.

பின்னர் ஆசிரியர் பணியேற்று தனியார் ஆங்கிலப் பள்ளியில் சில ஆண்டுகள் பணியாற்றிய அனுபவங்களோடு அரசுப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக சேர்ந்த பிறகுதான் ரஷீனாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படுகிறது.

ஆரம்பப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணி புரிபவர்தான் அனைத்துக்கும் பொறுப்பு என்றாலும் பிற பள்ளிகளின் இடைநிலை ஆசிரியர் போல 'தானுண்டு தன் வேலையுண்டு' என்று காலம் கழிக்கவில்லை ரஷீனா. தான் சேர்ந்த பள்ளியில் பயிலும் மாணவர்களைத் தன் குழந்தைகளாக எண்ணி அவர்களின் நலனில் அக்கறை கொண்டு அரவணைத்து அவர்களுக்குப் பாசத்தையும் கல்வியையும் ஊட்டிய பாங்கு மகத்தானது.

குழந்தைகள் தன்னை "லாங் ஹேர் மிஸ்", என்றதும், "டீச்சர் நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க" என்றதும், "டீச்சர், உங்க புடவை நல்லாயிருக்கு" என்றதும் ரஷீனா இன்னும் குழந்தைகளை நெருங்க வைத்தது.

"வகுப்பறை என்பது என்னைப் பொறுத்தவரை தவம் மேற்கொள்ளும் இடம். அந்த தவத்தினால் கிடைக்கும் வரங்களைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்ப்பதில் ஒரு மகிழ்ச்சி. வகுப்பைக் கலகலப்போடு நடத்தவேண்டுமென்று முயற்சிப்பவள் நான்." எனக்கூறும் ரஷீனா அப்படியே செய்து காட்டியுள்ளார். மேலும் "வகுப்பறை என்பது குழந்தைகளிடம் கற்றுக்கொள்ளும் இடமாகவே தோன்றியது" என்பதைத் தமது சொந்த அனுபவமாகவே கூறியுள்ளது சிறப்பு.

ஆண்டுவிழாவே நடத்தாத பள்ளியாக இருந்ததை மக்கள் பங்களிப்புடன் ஆண்டுவிழா நடத்தி குழந்தைகளின் திறமைகளை வெளியுலகுக்குக் கொண்டுவந்து பெற்றோர்களின் உள்ளங்களை மகிழ்வித்து அவர்களின் உள்ளங்களில் ரஷீனா இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

பல்லாண்டுகளாக சும்மா கிடந்த பள்ளித் தோட்டத்தை மாணவர்களைக் கொண்டே பண்படுத்தி கீரைகளையும் காய்களையும் பயிர் செய்து சாதனை படைத்ததும் பள்ளித் தோட்டத்தில் குழந்தைகளின் கரங்களாலேயே மரக்கன்றுகள் நட்டதும் சிறப்பு. விதைப்பந்து விநாயகர்களை உருவாக்கி, இஸ்லாமிய ஆசிரியையாக ரஷீனா இருந்தபோதிலும் விநாயகர் சதுர்த்தி கொண்டாடியதும், அவ்விநாயக மண்சிலைகளைக் கரைப்பதன் மூலம் அதன் விதைகள் செடிகளானதும் ரஷீனா மேற்கொண்ட வித்தியாசமான முயற்சி.

நான்கு வயதே ஆனாலும் பெற்றோர் ஆசையை நிராகரிக்காமல் தர்ஷினி என்ற குழந்தையைப் பள்ளியில் அனுமதித்தார் ரஷீனா. அக்குழந்தைக்குப் பயிற்சி கொடுத்துத் தொய்வு ஏற்பட்ட போதெல்லாம் ஊக்கப்படுத்தி பிற்காலத்தில் 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரிடத்திலும், கல்வியமைச்சர் கரங்களாலும் விருது பெற்றது சாதனைதான். மேலும் கொரோனா காலத்தில் பள்ளிக்கு விடுமுறை ஆயினும் குழந்தைகளின் வீடுகளுக்கே சென்று கல்வி கற்பித்த ரஷீனாவை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதன்மூலம் 'திருக்குறள் உலக சாதனைக்காக பயிற்றுனர்' எனும் விருதைப் பெற்றது ரஷீனாவின் இடைவிடாத முயற்சிக்குக் கிடைத்த வெற்றி.

அன்பால் அரவணைத்து கல்லாங்குத்து எனும் கிராமத்தின் அரசுப்பள்ளி மாணவர்களை ஈர்த்து உயரம் கண்ட ரஷீனா "அன்பாசிரியர்" எனும் விருதைக் கல்வி அமைச்சர் மூலமாகப் பெற்றபோது "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" எனும் குறள்படி ரஷீனாவின் தாய், தந்தை, கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் என மகிழ்ந்து பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இடைநிலை ஆசிரியர் நிலையில் தலைமை ஆசிரியரைக்காட்டிலும் இடைவிடாதியங்கிய ரஷீனா தன் பள்ளியை,"ஸ்மார்ட். கிளாஸ்" ஆக்குவதற்குப் பெரு முயற்சி எடுத்து வெற்றியும் பெற்றது சாதாரணமானதன்று. 28.3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவான "ஸ்மார்ட் வகுப்பும் கட்டிடமும்" தலைமை ஆசிரியையைத் தாண்டி ரஷீனா சாதித்தது எனின் மிகையன்று. மாவட்ட ஆட்சியர் அவ்வகுப்பறையைக் காண அப்பள்ளிக்கு வந்ததும் குழந்தைகளைத் தட்டிக்

கொடுத்ததும் குழந்தைகளுக்குப் பசுமரத்தாணி போல் பதிந்தது.

குழந்தைகளுக்குக் கதைகளைச் சொல்லி மனமகிழச் செய்த ரஷீனா 'ஆயிஷா' கதையைச் சொன்னபோது, "ஆயிஷா செத்திருக்கக்கூடாது, படித்துப் பெரிய ஆளாக வந்திருக்க வேண்டும்" என்று குழந்தைகள் ஆதங்கப்பட்டதைப் பதிவு செய்துள்ளார் நூலாசிரியர் ரஷீனா.

பொன்னூரில் நடைபெற்ற திருக்குறள் ஆய்வு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பேராசிரியர் அருணன், அந்நிகழ்வில் பங்கேற்று உலக சாதனை நிகழ்த்திய தனது மாணவி தர்ஷினியையும் பயிற்சி அளித்த தன்னையும் பாராட்டியதைக் குறிப்பிட்டு ரஷீனா மகிழ்ந்துள்ளார் இந்நூலில். தர்ஷினி தனக்குக் கிடைத்த பணத்தைக் கொரோனா நிவாரண நிதியளிக்கும் வகையில் சமூக ஆர்வலராக மாற்றிய பெருமை ரஷீனாவையே சாரும்.

மாணவர்களின் திறமைகளைத் தமது முகநூலில் பகிர்ந்தது, அதன்மூலம் முகநூல் நண்பர்களால் மாணவர்களுக்குப் பரிசுப்பொருட்கள் கிடைத்ததும் அதன்மூலம் சிறுசேமிப்புப் பழக்கத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியதையும் பகிர்ந்து மகிழ்கிறார் ரஷீனா.

மாணவர்களை இன்பச் சுற்றுலா அழைத்துச் சென்றது ஒருபுறம் எனில் மறுபுறம் அவர்களை வாசிப்பாளர்களாக்க புத்தகத் திருவிழாவுக்கு அழைத்துச் சென்றதும் இனிய அனுபவங்கள்தானே.

இத்தகையை சாதனையாளருக்கு மாநில அளவிலான டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது குறுகிய காலத்திலேயே மாநில கல்வி அமைச்சர் மூலமாக வழங்கப்பட்டது விருதுக்குத்தானே சிறப்பு சேர்க்கும்.

இத்தகைய தன்னனுபவங்களை எளிய நடையில் நூலாக்கி வழங்கியுள்ள ரஷீனா அவரது நூலையும் சென்னை புத்தகத் திருவிழாவில் கண்டபோது புல்லரிக்கிறார். இத்தகைய சாதனையாளர் ரஷீனாவின் நூலை வாங்கிப் படிப்பது ஆசிரியப் பெருமக்களுக்கு மட்டுமல்ல வாசிப்புப் பழக்கம் உள்ள அனைவருக்குமே அவசியம் எனின் மிகையன்று.

சா.ரஷீனா
பக்கங்கள் 112
விலை ₹120
அகநி வெளியீடு
3 பாடசாலை வீதி, அம்மையப்பட்டு
வந்தவாசி - 604 408
திருவண்ணாமலை மாவட்டம்.

**அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை.**

# ஹைக்கூ கவிதைகள்

நிலா வெளிச்சம்,
யாருக்கும் தெரியவில்லை,
துன்பத்தில் ஆட்காட்டிப் பறவை.


தூரத்து நிழலில்.
குடத்தில் தண்ணீர்,
மரத்தை வெட்டியவனுக்கு.


கோடை வெயிலை
பொறுத்துக்கொண்டப் பிறகு,
மிக அழகாக தெரிகிறது,
அந்தியில் சிவந்த சூரியன்.

என்னைத் தேடித்தேடி வருகின்றார்கள்,
சாதிமத வேறுபாடுகளின்றி,
மரங்களின் நிழல்.

சென்று திரும்புகையில்,
மனம் கேட்க வில்லை,
நிரம்பி வழியும் குடம்.







**துறையூரான் ( சின்னையா சிவநேசன்)**

**தொரன்ரோ, கனடா**

# நாட்டுப்புறப் பாடல்

**காதலனும் காதலியும் உரையாடல்**

காதலன்: வெண்டிக்காய் நல்லாய்
காய்த்திருக்கு வெள்ளையம்மா
வெட்டிக்கொண்டு நான் வரவா
விடியமுன்னே உன் வீட்டை

காதலி: நுனியை நல்லாய் முறிச்சுப் பார்த்து
முற்றாத வெண்டியெல்லாம்
முடிச்சிலே கொண்டு வாங்கோ
கார குழம்பு வைத்து நானும்
களிப்போடு செய்துதாறேன்

காதலன்; அத்திப் பூ பூத்திருக்கு
அடுத்த விட்டு வேலியிலே
சத்தகக் கம்பாலே
சத்தமின்றி வெட்டி வரவா

காதலி ; அத்திப்பூ வறை வறுக்க
அத்தானுக்கு விருப்பம் என்றால்
அடுத்த வீட்டார் அறியாமல்
அறுத்து வாங்கோ அத்தனையும்

காதலன்; கத்தரிக்காய் கனக்க நல்லாய்
காய்த்து இருக்குத் தோட்டத்திலே
கடகத்தில் பறித்து கொண்டாரேன்
காத்திருப்பாய் கண்ணம்மா
கனநேரஞ் செல்லாது

காதலி ; காத்திருக்க நேரமில்லை அத்தானே
கனக்க வேலையுண்டு செய்வதற்கு
கத்தரியை வெய்யிலில் காயவைத்து
வற்றல் போட்டு வையுங்கோ மாரிக்கு

காதலன்; வற்றல் போட நேரமில்லை
பச்சையாய் சமைத்தால் தான்
பச்சைப் பிள்ளை உந்தனுக்கு
பயனுண்டு நல்ல பலமுமுண்டு

காதலி ; நான் சமைஞ்சு நாள் ஆச்சு
நாள் முழுக்க கத்தரியை- நானுண்டு
நாக்கும் மரத்துப் போச்சு
நாளைக்கு கொண்டுபோய்
சந்தையிலே வித்துப் போட்டுக் - காசை
என் கைக்கு கொண்டு வாங்கோ

காதலன் ; முற்றத்தில் மாமரமும் நல்லா
காய்த்திருக்கு
முற்றிய மாங்காய் கொண்டரவா--
முத்தம்மா
முழுப் பழமாய்க் கொண்டரவா

காதலி ; முற்றிய மாங்காய் தேவை
முழுகாமல் இருக்கும்போது- இப்போது
முழு பழங்கள் கொண்டு வாங்கோ
பிழிந்து ரசமாக்கி பருகிடலாம்
இருவருமே

காதலி ; காயும் பழமும் என்று மாமா
காத்திருக்க வைக்கிறீங்க
கலியாணம் கட்டிடாமல்
காலம் வீணே கழியுதெல்லோ

காதலன் ; கையிலே காசு சேர்த்து
கணக்கான வீடுகட்டி
கலியாணம் கட்டிக்கலாம்- கண்ணம்மா
கன காலம் செல்லாது
காத்திருப்பாய் என் கண்ணே

காதலி; கணக்கான வீடுகட்டி
கையிலே காசு சேர்க்க
கன்னி நான் கெதியாய்
கிழவியாய் போயிடுவேன்
கிழவி ஆன பின்னே
குழந்தை குட்டி பெற்று
வளர்த்து வர முடியாதே
நல்லாய் யோசியுங்கோ

காதலன்; கிழவியாய் நீ போவதற்கு முன்னாலே
கல்யாணம் நடக்கும் பிள்ள
கவலை விடு கட்டாயம்
செய்திடுவேன் கல்யாணம்
தடல் புடலாய் நாடறிய

காதலி; கத்தரிக்காய் விற்றுக் காசு சேர்த்து
கணக்கான வீடுகட்டி
கல்யாணம் செய்வதற்கு
கனகாலம் செல்லுமெல்லோ
காத்திருக்க முடியாது மேலும்
வீட்டிலே நெருக்கிறார்கள்,
பார்த்துவிட்டார் மாப்பிள்ளையும்
கட்டிக்க விருப்பம் எண்டால்
காத்திருக்க வைக்காமல்
கல்யாணம் செய்திடுங்கோ
காலங் க டத்தாமல்..

காதலன்; நினைத்தவுடன் கல்யாணம்
செய்யச் சொல்லி நீ சொன்னால்
நான் எங்கே போவது காசுக்கு
நாலாறு வாரம் நாள் போனால்
நான் உழைத்துச் சேர்த்திடலாம்
காத்திருப்பாய் என் கண்ணே......

கமலினிகதிர், சுவிற்சர்லாந்து

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

எம் அக்கினிக் குஞ்சுகள்
மண்மீட்புப்போராட்ட நெருப்பில்ஆகுதியாகியும்
காணாமல் ஆக்கப்பட்டு சிறைகளில் வாடியும்
துன்ப ஓலங்களுக்குள் துடிதுடிக்கும் உங்களை
இன்றுவரை கைதூக்கி விடாது முள்ளிவாய்க்கால்
நினைவேந்தல் ஆண்டுக்கொருமுறை வந்துபோக
மாவீரர் உங்களுக்காய் ஏற்றிடும் மெழுகுவர்த்தி
தீர்த்திடுமா உங்கள் வாரிசுகளின் தேவைகளை
ஓர் நிமிடம் யோசிப்பீர் தீர்வுகள் செய்திடுவீர்.
ஈழவிடுதலைப் போராட்ட நெருப்பில்
விழுந்து சுவாலைகளாய் மறைந்த
நெருப்போவியங்கள் எம் மாவீரர்கள்
நெஞ்சங்களில் கனவுகளைச் சுமந்து
காற்றோடு காற்றாய் கரைந்தவர்களை
வயிற்றில் சுமந்த எத்தனை தாய்மார்
வயிற்றுக்கு உணவின்றி வாழுமவர்கள்
வயிறுகள் காய்வது தகுமோ?சொல்வீர்.
மண்மீட்புப் போராட்டத்தில் கணவர்களை
மண்ணிலும் கடலிலும் பறிகொடுத்துவிட்டு
கண்ணீர் வற்றிட வாழும் கைம்பெண்கள்
கவலை போக்கிட அவர்கள் குடும்பம்
நம் குடும்பமாய் நாம் இருக்கிறோம்
உங்களுக்காய் கரம் கொடுக்க என்று
அங்குள்ளோர் துயர் துடைத்தால்
ஏங்குமவர் பிள்ளைகள் வாழ்வார் ஏற்றமுடன்.

மரணபூமியில் தொலைந்ததுஉயிர்கள் மட்டுமா
சீரழியும் குடும்ப உறவுகளும் ஒழுக்கக்கேடுகளும்
சீரமைக்க தமிழினம் ஒன்றுபட வேண்டாமோ
வெந்து தணிந்த நம்பூமி மீண்டெழ வேண்டாமோ
நெருப்புச் சுவாலையில் கருகிப்போன மாவீரர்
ஆத்மாக்கள் சாந்தி பெற வேண்டாமோ
அந்த அக்கினிக் குஞ்சுகள் மனம் குளிர
அந்த மண்ணை வளமாக்க உறுதி பெறுவோமே.

வேலணையூர் ரஜிந்தன்

# அந்த இரவுகளுக்கு எத்தனை வண்ணங்கள்

இதேபோலொரு பின்னிரவுக்குப்
பொன்முலாம் பூசிய
நிலாவொளி வனப்பினில் தான்

அண்டத்தின் பேரன்பையும்
பேரன்பின் ஆகாயத்தையும்
ஆகாயத்தின் அரவணைப்பையும்
அரவணைப்பின் முழுமையையும்
முழுமையின் நிறைவையும்
நிறைவின் நீள்தலையும்
நீளும் முடிவிலியாய்
ஒற்றைக் குளையல் உணர்த்திவிடும்

உண்மை வார்த்தைகளும்
உதிராப் புன்னகையும்
பரிவுப் பார்வைகளும்
உணர்வின் கரிசனையாய்த்
தெய்வத்தின் காப்பரண் கண்முன்

முற்றத்தில் அமர்ந்து
அன்னத்தை அமிர்தமாக்கி
ஆறுதலாய் உருளையாக்கி
உள்ளங்கையில் தரும்
அம்மாவின் அந்த
முதற் குளையலோடே
தகித்தெரியும் நிலவுக்கும்
பெரும்பசி தீர்ந்து போகும்

ஆம், உண்மைதான்
அன்று அந்த இரவுகளுக்கெல்லாம்
எத்தனை எத்தனை வண்ணங்கள்.



தங்கேஸ்

# தங்கேஸ் கவிதைகள்

பச்சை தவளை
ஒரு வார்த்தை பச்சை தவளை
கண்களை உருட்டிக்கொண்டு
விழிக்கிறது நமக்கிடையில்
அது சாத்தானுடையது என்றால்
நீ நம்ப மறுக்கிறாய்
கண்ணாடியில் எறியப்பட்ட கல்
புத்தனைப் போல
சாந்தமாக கிடக்கிறது
விரிசல் விழுந்த கண்ணாடிக்குள் தான்
விம்மல் சப்தம்
ஒரு சின்னஞ்சிறிய நிலவு தான்
இந்த வானத்தையே
மறக்கடிக்கின்றதென்றால்
அது எத்தனை வசீகரம் கொண்டதாக
இருக்க வேண்டும்
மறந்து போன வானத்தை
உனக்கு ஞாபகப்படுத்துகிறேன்
என்கிறதா அது?
எல்லாவற்றிற்கும் காரணம்
அந்தப் பச்சை தவளைதான்
வா அதைப் பிடித்துப்போய்
குளத்தில் வீசுவோம்
அது இன்று நீர் பாம்புக்கு இரையாகட்டும்

வெண்புறாவின் சிறகில் மனது
பொழிவதற்கு ஆயத்தமாய் இருக்கும்
சூல் மேகத்தின் அடிவயிற்றில்
ஒளிந்திருக்கிறேன்
ஒரு புனல் துளியாக
ஒரு மலரினை முத்தமிடுவேனோ
ஒரு சிறகினில் ஈரப்பொட்டிடுவேனோ
அல்லது தகித்திருக்கும் செம்மண்ணில்
ஒரு நதியின் விதையாகி புதைவேனோ
யாருக்குத் தெரியும்?
சற்று நேரத்தில் மொழியப்படும்
ஒரு இரகசிய கவியின்
ஒரு ஒற்றைச்சொல்லுக்குள்
பனிக்குடத்திற்குள் தழும்பும் சிசுவாக
காத்திருக்கிறேன் பிரசவத்திற்கு
எந்த தேசத்தில் பிறப்பெடுப்பேனோ
யார் கண்டது
பார்த்த கணம் ஒரு வெண்புறாவின் சிறகில்
தொற்றிக்கொண்டு பறந்து போகும்
ஒரு மனதை வைத்துக்கொண்டு
நான் என்ன செய்வது
நீயே சொல் சகி

பிணைந்து கிடக்கும் சொற்களுக்குள்
உன் மூச்சுக்காற்றையே
அனுமதிக்க மறுக்கிறது மனது
பின்னிப் பின்னி இழையோட்டி
நெய்து முடிக்கப்பட்ட கவிதை
உன்னுடையதுதான் என்றாலும்
அதன் தாய்மை என்னிடம் தானே?
விரல் பிடித்து நடந்த காலங்களை நினைக்கையில்
ஒரு முழுவட்டமடித்து
இன்று பறக்கப்பழகிய பட்டாம் பூச்சியாய்
என் உள்ளங்கையில் உட்கார்ந்து கொண்டு
படபடக்கிறது பிரபஞ்சம்
காலம் மிகச்சிறிய நாய்க்குட்டியாகி
நானழைக்காமலே என் பின்னே
ஓடிவந்து கொண்டிருக்கிறது
இரைச்சலற்ற அருவியிலிருந்து மேலெழும்
நீராவிப்புகை வெளியெங்கும்
சித்திரம் தீட்டிக்கொண்டே மறைந்து போகும்
நேரம்
சட்டென்று கண்களை மூடிக்கொள்கிறேன்

**ரகுநாத் வ, மதுரை**

மெல்லிசையிடையே
புள்ளிகளிடும் புல்லாங்குழல்
கிழிபட்ட மனதினை
தையலிட்டிணைக்கும்
நூலாகிறது!

கண்ணாடிச் சாளரம்
வழியே வெளிச்சம்
ஊற்றுகிறது அதிகாலை வெயில்.

அயர்ந்து உறங்கும்
சிறுமிக்கு
சுழன்று நின்ற
பம்பரத்தின் சாயல்.

'ப்ளாட்டின்'
அனைத்து குழாய்களிலும்
நீரில்லை
புகார் புத்தகத்தின்
முகவரியில் கடைசிவரி
'தாமரைக்குளம்!'

எத்தனை முறை
முயற்சித்தும்
மழையால் பிடிக்க
இயலவில்லை
காற்றின் துளியை.

இலையில் சொட்டு வைத்து
வேரில் புகும் மழைத்துளி
வானின் கருவறைக்குச்
சொந்தம்!

உனது DPயிலிருந்து
வந்துவிழுகின்ற
முதல் குறுந்தகவல்
நான் அடையவேண்டிய
வெற்றி இலக்கின்
கடைசி ரன்!

ஏதுமற்றிருப்பதால்
சரிசமமாகவே
இருக்கின்றன
வறுமைத்தராசுகள்!

அங்குசத்தால்
யானையினைத்
தீண்டும் பாகனை
கடித்துக்கொண்டே இருக்கிறது
பிள்ளையார் எறும்பு!

சிட்டுக்குருவி கூடுகட்டிய
பிறகு சிவக்கவேயில்லை கொல்லைப்புற
மருதாணி!



சா.நாகூர் பிச்சை, திண்டுக்கல்

காலம் அற்புதமானது
இசையையும் இரைச்சலையும்
பிரித்தெடுக்கும் காதுகளுக்கு
சப்தத்தின் பலம்.
வெயிலையும் நிலவையும்
பிரித்தெடுக்கும் கண்களுக்கோ
ஒளியின் பலம்.
வாழ்வில் ஒவ்வொன்றும்
ஒற்றைப் புள்ளியில்
இணைந்தாலும்..
நெருங்கவும்
விலகவும் வைப்பதில்
கை தேர்ந்து விடுகிறது காலம்.

கவிஞர் சாய்சக்தி சர்வி பொள்ளாச்சி

# உதிரும் வினாடிகள்

நடுநிசியை பற்றியிருந்த அறையின் நடுவே
கவிழ்ந்து கிடந்தன உதிர்ந்த வினாடிகள்
பார்க்க முயலும் எனை இழுத்து சென்ற மாய சுழலில்
ஆங்காங்கே படிந்திருந்த
கண்ணீர் துளிகளையும்
வறுமையின் ரேகைகளையும்
கிழிந்த கூரையின் பொத்தல்களையும்
சுமந்து செல்கிறேன்
ஆழத்தில் மூழ்கிகொண்டிருக்கும் ஒருவனை
விடுவிக்க மன்றாடும்
எனை
நிராகரித்துச் சென்ற வினாடியின் சுவடுகளில்
ததும்பியது
எஞ்சிய நாளிற்கான கருணை

ச.ஆனந்தகுமார்

# இசை

உச்சஸ்தாயில் இழைகையில்
பனிச்சறுக்கில்
வழுக்கி இலகுவாய்
பயணிக்கிறேன்

விஸ்தாரமாய் சங்கதிகளுக்குள்
அமர்கிற இனிமை
இசைக்குறிப்புக்கள் எழும்பி
எனை மிதக்க வைக்கின்றன..

ஆலாபனை துவங்குகிறபோது
வார்த்தைகளுக்குள்
சிக்காத வசந்தத்தில் சிக்குகிறேன்..

ஸ்வரங்களின் கூட்டமைப்பில்
தொலைந்த என்னைத் தேடி
கண்டுபிடிப்பது எனக்கே கடினமானது

ஒரு இசைத்துணுக்கு தவறி
தற்கொலை செய்கிற நொடி..

எல்லாம் கணக்குகள் எனப்புலப்பட
சிலிர்ப்பின் உச்சியில் இருந்து
தள்ளிவிடப்படுகிறேன..

இப்போதெல்லாம்
எந்தப்பாடல் கேட்டாலும்
கணித சமன்பாடுகள மனதினுள்
ஓடுகின்றன..

பாவலர் கருமலைத்தமிழாழன்

# முள்ளிவாய்க்கால் சுவடுகள்

முள்வேலி சிறையென்னும் முள்ளி வாய்க்கால்
முள்ளாகத் தைத்துளது இன்னும் நெஞ்சுள்
வெள்ளைநிறக் கொடியேந்தி வந்த போதும்
வெறியோடு பிஞ்சென்றும் பார்த்தி டாமல்
அள்ளிவந்தே அடைப்புக்குள் அடைத்து வைத்தும்
ஆண்களுடன் பெண்களினைக் கட்டி வைத்தும்
உள்ளுக்குள் இலட்சமாகத் தமிழர் தம்மை
உருகுலையக் கொன்றழித்தான் இராச பக்சே !

பட்டினியில் குழந்தையழத் துடிக்கும் தாயின்
பால்முலையை அறுத்தெறிந்தார் காடை யர்கள்
நட்டநடுக் கூட்டத்துள் தமிழப் பெண்ணை
நாய்கள்போல் வன்புணர்ச்சி செய்து கொன்றார் !
மொட்டவிழா சிறுமியர்தாம் என்ற றிந்தும்
மொய்த்திட்டார் வெல்லத்தில் ஈக்கள் போல
கட்டவிழ்த்த வன்முறையில் சிங்க ளர்தாம்
கணக்கின்றி இளைஞரினைக் கொன்று போட்டார் !

ஆண்களில்லா குடிசைகள்தாம் முல்லைத் தீவில்
அல்லலுறும் வறுமையில்தான் குடும்ப மெல்லாம்
காண்கின்ற கிளிநொச்சி வவுனி தம்மில்
கல்வெட்டாய் உள்ளதின்னும் போரின் காட்சி !
மாண்புவரும் தமிழரெல்லாம் உரிமை யோடு
மகிழ்ச்சிபொங்க வாழ்வரென்ற உறுதி யெல்லாம்
தீண்டாமை போல்கனவில் ; நனவி லில்லை
தீய்க்கின்ற சுவடுகளோ மாற வில்லை !



# போர்க்கால செய்திகளின் ஆதர்சக் குரல் ! வாழ்நாள் ஊடகர் பொன். மாணிக்கவாசகம்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

*ஈழத்தின் போர்க்கால நாட்களில் இரவு 9.15மணிக்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் பலரும் உறங்கமாட்டார்கள்.*

இடர்மிகு காலத்தின் குரல் :

நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசமெங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்திவந்த, ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த பொன்னையா மாணிக்கவாசகம் இன்று 12/4/2023 இன்னுயிர் ஈந்தார்.

யுத்த காலத்தில் எழுத்தாயுதத்தை துணிவுடன் பயன் படுத்தியவரும், பத்திரிகைத் தர்மத்தைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு சிறந்த ஊடகவியலாளராகச் சேவையாற்றிய திரு.பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளராக என்றும் விளங்குகிறார்.

போர்க்காலத்தில் வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல் என்ன என்பதை காதுகொடுத்துக் கேட்க காத்திருந்த உலகத் தமிழ் மக்கள் அவரை என்றும் மறக்கமாட்டார்கள்.

வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல்கள் அக்காலகட்டத்தில் அவரது செய்திகளை மாத்திரமே நம்பக்கூடியதாக இருந்தது. பொ மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகயாளராக ஆற்றியசேவையும், அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாதுஆற்றிய பணிமறக்க முடியாதவை. கல்வி, சுகாதாரம், அரசியல் களங்களில் உண்மை நேர்மை துலங்கும் வகை செய்திகள் தந்த மாண்பு மகத்தானவை.

வாழ்நாள் சாதனையாளர் விருது :

கடந்த வருடம் 13/12/2023இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விருது விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வீரகேசரியிலும், பி.பி.சி.யிலும் நீண்டகாலம் ஆபத்தான ஒரு யுத்தப் பகுதியிலிருந்து செய்தி சேகரிப்புப் பணியை துணிச்சலுடன் - திறம்படச் செய்துவந்தவர். அதனைவிட வேறு சில சர்வதேச ஊடகங்களிலும் அவர் பணியாற்றியிருக்கின்றார்.

அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பொன்னையா மாணிக்கவாசகம் அவர்கள் ''கால அதிர்வுகள்'', ''வாழத்துடிக்கும் வன்னி'', ''மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்'' என்னும் நூல்களை எழுதியுள்ளார்.

மறைந்த வாழ்நாள் சாதனையாளர் பொன்னையா மாணிக்கவாசகம்

தான் கடந்துவந்த கரடு முரடான பத்திரிகைத்துறை அனுபவங்களையும் தொகுத்து அடுத்த நூலையும் விரைவில் வெளியிட உத்தேசித்திருந்தார்.

இந்த நூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் யாவும் வீரகேசரி நாளிதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்புகள் என்பது வீரகேசரிக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர்:

தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையான ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர், அந்தப் பதவியின் மூலமாகச் செய்த பணிகளும் முக்கியமானவை.

ஒரு முழு நேர ஊடகவியலாளராக - சுயாதீனமாகப் பணியாற்றிய அவர், தனது அனுபவங்களின் அடிப்படையில் சில நூல்களையும் எழுதியிருக்கின்றார். அவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

பொ மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகயாளராக ஆற்றியசேவை. அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாதுஆற்றிய பணிமறக்க முடியாதவை.

'வென்மேரி' விருது கௌரவம் :

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 18/8/22 நடைபெற்ற 'வென்மேரி விருதுகள்'' விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் அவர்கள் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

''வென்மேரி அறக்கட்டளை''யின் முதலாவது விருதுவிழாவான நிகழ்வு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் விழா என்ற மகுடத்துடன் நடைபெற்ற இந்த விழாவில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தார்கள். மூத்த ஆளுமைகள், வாழ்நாள் சாதனையாளர்கள், இளம் முயற்சியாளர்கள் என பலதரப்பட்ட ஆளுமைகள் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த மாணிக்கவாசகம் கௌரவிக்கப்பட்டமை முக்கியமானதாகும்.

எஸ். ஈஸ்வரானந்தம், கொரடாச்சேரி.

# நிகழ்வுகளுக்காக தூவும் மழை.

சாலை அமைக்கப்படுகிறது.
வேகமாக வழுக்கி விழுவாய்
மெதுவாக செல்லென
செம்மண் புழுதியை
அதட்டி அடித்து அமுக்கும்
சப்தமாய் தூவும் மழை.


எத்தனை மழைத்துளி
மண்ணில் விழுகிறதோ
அத்தனை நெல்மணிகள்தான்
நிலத்தில் முளைக்குமென
குழந்தையின் சொல்லுக்கு
அர்த்தங்களாய் தூவும் மழை.

சுற்றுசுவரின் வெண்நிற
வர்ணபூச்சில் ஒளிர்ந்து
விழும் துளிகளை
தனக்கான இரையென
என்னி வான்பார்த்து
வாய் பிளக்கும்
தெப்பக்குளத்து மீன்களின்
நிராசைக்காய் தூவும் மழை.

தோட்டத்து வாழையிலைகளில்
படப்படவென குண்டுகளாய்
பொழிந்து தெறித்து சிதர
உற்சாகத்தோடு தத்தி தாவி
தவலையை தடுமாறி
ஓட செய்வதற்காய் தூவும் மழை.

மலை பாறையிடுக்கில் கொக்கொன்று
மீனுக்கு தன்னலகின் குரூரத்தை
காட்ட கூர்தீட்டி கொண்டிருக்கையில்,
மலையுச்சியில் சிறுகூழாங்கல் மீது
நீர்த்துளியொன்று பட்டு உருண்டு
கொக்கருகினில் விழ,
பட்டென்று கருமேகம்பார்த்து கூடடைய
சிறகு விரிப்பதற்க்காய் தூவும் மழை.

ஒவ்வொரு துளியிலும்
ஒவ்வொரு நிகழ்வை
அடைத்து பூமியில்
நிகழ்வுகள் நிறைய
நடத்துவதற்காய் இயற்கைக்காக
இயற்கையாய் தூவும் மழை.



# போந்தாக்கோழி

**சுந்தரிமணியன், புதூர்**

பக்கத்து டேபிளில் இருந்த சுமதி

“இந்த போந்தாக்கோழி பண்ற டார்ச்சர் தாங்கமுடியலைடி”

என்றாள். “என்னாச்சு” என்ற சுதாவிற்கு வயது முப்பது இருக்கும். சுருட்டை முடியுடன் சிவப்பாக இருந்தாள்.

“சென்னையில் நடக்கின்ற மீட்டிங்கிற்கு என்னைப் போகச் சொல்றாங்க. நாம எதுக்குப் போகனும்? நாம டெம்ப்ரவரி ஸ்டாப்தானே. இதைத்தானே அந்தப் போந்தாக்கோழி எப்பப் பார்த்தாலும் சொல்லி நம்மை மட்டம் தட்டும். இதுக்கு மட்டும் அந்தப் போந்தாக் கோழிக்கு டெம்ப்ரவரி ஸ்டாப்புன்னு தெரியலையாமா”

“சரி விடு. போக முடியலைனா சூப்ரெண்ட் கிட்ட சொல்லி வேற யாரையாவது அனுப்பச் சொல்லுவோம்.” என்றாள் சுதா.

“அடிப் போடி இவளே. நீ சொன்னவுடன் அந்தக் கொக்கு நோக்காடு வந்த கோழி உடனே அது போகப்போகுது. இல்ல வேற யாராயாச்சும் அனுப்பிட்டுத்தான் மறுவேலை பார்க்கும் பாரு” என்று முகத்தைச் சுளித்தாள் சுமதி.

“நீ சொல்வதும் சரிதான். இங்க வேலை பார்க்க மட்டும்தான் நாம வேணும். அதிகாரம் பூரா அவங்க கையில. இந்த வேலை பார்க்கிறதுக்கு நான் காலேஸ்லயே இருந்திருக்கலாம்” என்றாள்.

”இதைத் தானே நான் முன்னாடியே சொன்னேன்” என்றாள் சுமதி. சுதா கல்லூரியில் தட்டச்சராகப் பணியாற்றியவள். அரசு வேலை என்றவுடன் வீட்டில்

சொன்னார்கள் என இந்த டெம்ப்ரவரி வேலையில் வந்து சேர்ந்தாள். வேலையை நிரந்தரம் செய்வார்கள் என எதிர்பார்த்தாள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. நாட்கள் போனதுதான் மிச்சம். இருந்த வேலையையும் விட்டாயிற்று. வேறு வழியில்லாமல் வேலைக்கு வந்து கொண்டிருந்தாள்.

போந்தாக்கோழி என்று எங்களால் திருநாமம் சூட்டப்பட்ட உஷா அக்காவிற்கு வயது ஐம்பது இருக்கும். இளம்வயதிலேயே விதவை ஆனவர். அவரது நிலைகருதியே அவரின் மேல் எனக்குப் பரிதாபமும் அன்பும் ஏற்பட்டது. ஆனால் உஷா அக்காவிற்கு யாராவது ஆபிசில் நல்ல சேலை கட்டினாலோ, நகை புதிதாகப் போட்டிருந்தாலோ பொறுக்கமுடியாது அவர்களுக்குக் கெடுதல் செய்யும் குணம் இருந்தது. தன்னைத் தவிர யாராவது சம்பள உயர்வு பெற்றார்கள் என்றால் தாங்கமுடியாது. தனக்குக் கீழ் வேலைபார்க்கும் டெம்ப்ரவரி ஆட்களுக்கு எதுவும் கிடைத்துவிட்டால் தன்னை மதிக்கமாட்டார்கள் என்ற எண்ணமிருந்தது. இதனால்தான் சுமதிக்கும் எனக்கும் உஷா அக்காவைப் பார்த்தால் பிடிப்பதில்லை. ஆபிசில் வேலையே பார்க்காமல் ஊதிப் போயிருக்கும் அவளது உடம்பினைப் பார்த்து சுமதி போந்தாக்கோழி எனப் பெயர் வைத்தாள். அது அவரது செயலுக்குப் பொருத்தமாகவும் இருந்தது.

இருபத்தெட்டு வயதிலேயே விதவையான உஷா அக்காவிற்கு தன்னைப் போல மற்றவர்கள் துன்பப்படக்கூடாது என்ற எண்ணம்தானே வரவேண்டும். ஆனால் இவர் மட்டும் எப்படி மற்றவர்கள் துன்பப்படுவதைப் பார்த்து ரசிக்கிறார் என்று நான் யோசிப்பதும் உண்டு. அதற்கான காரணத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆபிசில் இருக்கும் சூப்ரெண்டு அதற்கு மேல். ஒரு விசயத்தைச் சொல்ல வந்தால் அனாவில் தொடங்கி அஃகனாவரை இழுத்து வளவளவென்று பேசுகிற ரகம். ஏதாவது கேட்கப் போனால் எனக்கும் சுமதிக்கும் போதும் போதும் என்றாகிவிடும்.

"இந்தக் காரியத்தை இவர்களிடம் கேட்பதற்கு நாமே செய்திருக்கலாம்" என்பாள் சுமதி.

அன்றொரு நாள் ஆபிசில் இருந்த பைல் ஒன்று தொலைந்து போனது. சூப்ரெண்டு சொன்னார்கள் என்பதற்காக நானும் சுமதியும் போய்த் தேடுகிறோம். காலையில் தேட ஆரம்பித்து மதியம் தொடங்கிவிட்டது. நாங்கள் அலுத்துப் போய் சாப்பிட இரண்டு மணிக்கு லன்ச் டேபிளில் அமர்ந்துவிட்டோம். அங்கு வந்த ஜூனியர் அஸிஸ்டெண்ட் தமிழரசன் என்னை வம்பிழுத்தார்.

"என்ன பைல் கிடைத்ததா?" என்றார்.

"இல்லண்ணே. நாங்களும் காலையிலிருந்து தேடுறோம். பைல் எங்க போச்சுன்னே தெரியல" என்றேன் நான்.

"பைல் ரெக்ககட்டிப் பறந்து போயிருக்கும் பாரு. நீங்க ஒழுங்காத் தேடியிருக்க மாட்டிங்க" என்றார். உடனே சுமதி,

"ஒரு பைல ஒழுங்கா வச்சுக்க முடியல. இதுல பேச்சு வேறயா" என்றாள் கிண்டலாக.

"பைல பெருச்சாளி தூக்கிட்டுப் போயிருச்சோ என்னவோ" என்றார் மெதுவாக.

"ஏது உங்க அறையில உள்ள குண்டுப்பெருச்சாளியா" என்றாள் சுமதி. உடனே கொல்லென்று எல்லோர் முகத்திலும் சிரிப்பலை அரும்பியது. சிரித்து முடித்தவுடன்,

"இருக்கலாம்" என்றார் தமிழரசன். அப்போதே எனக்கும் சுமதிக்கும் யார் செய்த வேலையென்பது புரிந்தது.

" என்ன உள்குத்தா" என்றேன் நான்.

"ஆமா" என்றார் தமிழரசன்.

அவரவர் இடத்துக்குச் சென்றவுடன் சுமதி என் காதில் வந்து "இந்த போந்தாக்கோழி ஏன் இந்த வேலையெல்லாம் செய்யுது. அதுக்கு வேற வேலையில்லையா" என்றாள்.

"பிடிக்கலைனா அப்புறம் எப்படிப் பழிவாங்குறது" என்றேன் நான்.

"டிடி வந்தா சூப்ரெண்டல்ல வைவாரு. பாவம்பா சூப்ரெண்டு" என்றாள் சுமதி.

"ஆமாம் நாம என்ன செய்யுறது. உஷா அக்கா இருக்கும்போது அது பீரோல்ல தேடவும் முடியாது. அதுவா பைல எடுத்துக்குடுத்தாத்தான் உண்டு. இல்ல அது இல்லாதப்ப சூப்ரெண்டு சுதாரிச்சு எடுக்கனும்" என்றேன் நான்.

எங்களது வேலையை முடித்துக் கொண்டு நானும் சுமதியும் வீட்டிற்குக் கிளம்பினோம். மறுநாள் காலையில் சுமதி அவசரமாக வந்து காதைக்கடித்தாள்.

"விசயம் கேள்விப்பட்டியா. பைலத் தொலைச்சிட்டாங்கன்னு சூப்ரெண்டுக்கு டிடி மெமோ கொடுத்துட்டாராம். பாவம். எல்லாம் இந்தப் போந்தாக்கோழி செய்த வேலை. அத ஒரு நாளைக்கு வச்சுக்கிறேன்" என்று பல்லைக் கடித்தாள் சுமதி.

"விடு அத திருத்தமுடியாது. அது செய்ற தவறுக்குத்தான் இப்படிக் கடவுள் தண்டிச்சிருக்காரு. நாம எதுவும் சொல்லவேண்டாம். அதுவா ஒரு நாளைக்குத் திருந்தும்" என்றேன் நான்.

அய்யனார் ஈடாடி

# முள்ளிவாய்க்கால் நினைவாக:


பீய்ச்சி அடிக்கப்பட்ட
இரத்தத்தின் திட்டுக்களோடு
கருவாடுகளாய்
அப்பிக் கிடக்கும்
பிணக்குவியல்களுக்கிடையில்
ஓலத்தின் குரல்
ஓய்ந்த பாடில்லை
ஓங்காரமாய் விடாமல் ஒலிக்கிறது.
குரல்வளை நெறித்தவனை
குழிக்குள் போட்டிறக்கி
நீளக் கம்பூன்றி
கொடி உயர்த்தி
வீசிப் பறக்கும்
தமிழ்த்தாயின்
கொடியினை
எப்போது காண்பது...

உதிரம் நிறம் மாறா
தொலைவு நீளும் பாதையில்
தலைநீளும் படுகொலைகள்
சிதறிய வடுக்களாக
நதியைப் பின் தொடரும்
மிதப்புக் கதிராய்
இன்னுமொரு
தலைமுறையாய்
நகர்கின்றன
இனங்களின் எச்சத்தில்...

மேம்பாலத்தில்
யாருமற்று
இரத்தப் பிசுபிசுப்புகளோடு
ஓடவண்டுகள் மொய்க்க
சிதைந்து கிடக்கிறது
பொன் மேனி
இனம்பிரித்து
பதம்பார்க்கும்
கொடுவாக்களுக்கு
மானுடனென்று தெரியுமா
மரமென்று தெரியுமா
குளம் வற்றி
குலம் பெருகிவிட்டது
குடி ஆதிக்க
பிரபஞ்சத்தில்...

மேம்பாலத்தைத் தொட்டுச்சென்றன
காட்டாற்று வெள்ளநீர்
இறுக்கப் பற்றிக் கொண்டு
ஊர்ந்தன மரவட்டைகள்
தொங்கிக் கொண்டிருந்தன
அடித்துவரப்பட்ட ஆலங்குச்சிகள்
மேம்பாலத்தில் படிந்திருந்த
இரத்தக் கறைகள் மட்டும்
யாரோ சிந்திச் சென்றது
குழந்தையா
பாவியா
என்று தெரியவில்லை
மீண்டுமொருமுறை மட்டும்
அவர்களைச் சந்தித்து
ஒரு துளி இரத்தத்தை
பெற்றுவிட்டு
கேட்க விரும்புகிறது
மன்னிப்பு

நாளை குலைதள்ளப்
போயிருந்த மலவாழையை
சூறைக்காற்றாய் ஒடித்தது
இன்றைய மாலை
ஆக்கி வைத்த
அரிசிச் சோறு
அனாதையாகக் கிடந்தது
கூட்டிவைத்த
பூசணிச் சாம்பார்
நொதிச்சுப் போய்க் கிடந்தது
கட்டி வைத்த
கரைகளெல்லாம்
கலைந்து போய்க் கிடந்தது
சீறிநின்ற சம்பையெல்லாம்
சிரங்கு பத்தி கிடந்தது
சினுங்கி நின்ற சவுக்கெல்லாம்
சிறுக்கி மகளா சாஞ்சது
சோகத்தில் விடிந்தது
சாம்பலாய் போகும்
இரத்தவாடை பிடிக்கும்
இனவெறியின்
சூழ்ச்சியால்...




# பார்ட்டி

சு.கருணாநிதி

வேலையால் வந்தமகன் கால்முகங் கழுவிவிட்டு செற்றியில் வந்தமர்ந்தான்.முகநூலினுள் மூழ்கியிருந்த அப்பாவை வெளியே இழுத்தெடுத்து,

*"அப்பா வெஎயர் எடுக்கிறதெண்டா தண்ணியடிக்கிறதுதான"*

மகன் அப்பாவிடம் கேட்டதற்கு "கிளாஸ் எடுக்கிறதெண்டுறது. வெறுங்கிளாஸ்சும் எடுக்கலாம்" கேலியானதோறணையில் பதில் சொன்னார்."அப்பா நான் இலக்கணதத்தக்கேக்கயில்ல கருத்தக்கேட்டனான்" "ஓம்மகன் கிட்டத்தட்ட அப்பிடித்தான், ஏதாவதுகுடிப்பம் எண்டுறத்தத்தான் அப்பிடிச்சொல்லுறது. எதுவும் குடிக்கலாம் குடிச்சு முடிய சிலவேளை சாப்பிடுவினம்" மகனினதும் அப்பாவினதும் உரையாடலிடையே சின்னத்திரையில் மூழ்கி கோமாநிலையிலிருந்த தாய் தண்ணியடிக்கிறதென்ற வார்த்தையால் திடுக்குற்று சுயநினைவிற்கு வந்து வில்லியானார். "என்னடா பொடியளோட தண்ணியடிக்கப்போறியா... எடுபட்டவங்களோட போகப்போறியா" எகிறினார். அம்மா ரென்சன் படாதீங்க நீங்க போய் நாடகத்தப்பாத்து முடிச்சிட்டு வாங்க பிறகுசொல்லுறன்.

இந்த அப்பா அம்மாவுக்கு குளலினிதாய் யாழினிதாய் இருபிள்ளைகள். பிரான்சுமண்ணில் பிறந்து வளர்ந்து இளவல்களாகிவிட்டவர்கள். மூத்தது மகன். அண்மையில்த்தான் வேலைக்கு சேர்ந்திருந்தான். வேலையால் வந்தவுடன் சகபணியாளர்களின் குணாம்சங்கள் அவர்களின் குறை குற்றங்கள், அதுசாப்பிட்டம், இதுசாப்பிட்டம், அவர் இப்படி, இவர் அப்படியென அந்த நாளின் அனுபவங்களை, நடந்தசம்பவங்களை பெற்றோருடன் பகிர்ந்துகொள்வது வழமை.வருகிற வெள்ளிக்கிழமை வாரஇறுதிநாளாகையால் வேலைமுடிய பணியாளர்கள் சேர்ந்து இரவு உணவகத்திற்கு செல்வதற்கான சம்மதம் கேட்டு பணிக்குழாமிற்கு செய்தியனுப்பியிருந்தனர்.

வதிவிடச்சூழலும் வேலையிடச்சூழலும் ஒருகுடும்பம்மாதிரி.நட்புறவுடனான அணுகுமுறை, அனுசரிப்பு,நேசிப்பு, புரிதல், இணக்கப்பாடென ஒற்றுமையான இயங்குநிலை பேணப்படவேண்டும். ஏதாவதொரு சந்தர்பத்தில் சலசலப்பு ஏற்படுமாயின் எங்கோவோரிடத்தில் ஏதோவொன்று சேதாரமாகிவிடும். அலுவலக பணியிடத்தில் சகபணியாளர்களுடன் சேர்ந்து உணவகத்திற்கு செல்வது ஒருவகையில் தேவையுங்கூட.. கலந்துபேசி, உரையாடி மகிழ்ந்து கருத்துகளைப்பகிர்ந்து ஒருவரையொருவர் புரியவும், அறியவும் ஏற்படுகின்ற வாய்ப்பு.வேலையின் தாற்பரியங்களை நுணுக்கங்களை அறியவும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளலாம். ஒன்றுபட்ட கூட்டுழைப்பிற்கு ஒற்றுமை முக்கியம். விட்டுவிலகிப்போய் தனித்தோடிப்போதல் சாத்தியப்படா.

மகன்தனக்குள் முடிவெடுத்துவிட்டு ஒப்புக்காகவே பெற்றோரிடத்தில் அங்கீகாரம் கேட்டிருந்தான் என்பது அப்பாவிற்கு புரிந்திருந்தது. அம்மாவிற்கும் புரிந்தாலும் எப்போபோதும் அங்கபோகாத இங்கபோகாத, அப்பிடிச்செய்யாத இப்பிடிச்செய்யாதஎன்று எல்லாவற்றையும் கண்டித்துக்கொண்டிருப்பதும் மறுத்துக்கொண்டுமிருப்பதும் அவரதுசுபாவம்.இது அம்மாக்களின் வரைவிலக்கணமென்றுகூடச்சொல்ல லாம்.

மகன் நண்பர்களோடு வெளியே போய்வந்தாலோ தாமதமாகி வந்தாலோ குடித்துவிட்டு வருவதாக எண்ணி தாய்மகனின் கண்ணைப்பார்த்து முகத்தைப்பார்த்து முகர்ந்துபார்த்து சோதனைநடாத்துவார். மகனும் மறுத்து கதைத்து போராட்டம் நடத்தி சந்தேகத்தை தீர்த்துவைப்பான்.

"அம்மா குடிக்கிறதும் குடிக்காமல் விடுவதும் என்ரவிருப்பம் மற்றவையால என்னக்குடிக்கவைக்க ஏலாது. உங்களாலும் தடுக்க ஏலாது. குடிக்கிறதெண்டா என்ரவாயால நான்தான் குடிக்கவேணும்"

ஆணித்தரமாக சுயாதீனமான தன்முடிவை தன்நம்பிக்கையோடு எடுத்தியம்பி தாய் தந்தையரை வசப்படுத்தி வசீகரித்தான். தன்னாளுகையை தன்னெறியை தானே கையிலெடுத்திருந்தான். பெற்றோரின் மனங்கள் உள்ளுக்குள் புளகாங்கிதமடைந்தன.தாய் மகனை அணைத்து முத்தங்கொடுத்துவிட்டு தேனீர் தயாரிக்க குசினிக்குள் சென்றாள்.

மகன் தந்தையின் அருகமர்ந்து தோழிற்கைபோட்டு "அப்பா... அம்மா திருந்திறாவேயில்ல நெடுக சந்தேகம்" தந்தையும் மகனை அணைத்து அவவின்ர அப்பாவின் இறப்பிற்கும் குடிதான் மூலகாரணம். அதாலதான் குடிக்கிறத வெறுக்கிறா எங்கட இலங்கைமண்டை இப்பிடித்தானிருக்கும்.அதுக்கென்ன மகன் சமாளிச்சுக்கொண்டு போவம். இதெல்லாத்தையும் பெரிசாத்தூக்கிப்பிடிக்காத "

தமிழ்க்குடிமக்களுக்கு குடியென்றால் வெறியேறி "நிதானமடிச்சாலும் தண்ணிதப்பமாட்டன்" என்று தன்னிலைவிளக்கிசொல்லுங்குரல் ஓங்கி நிதானமிழக்கும் வரையும் குடிச்சால்த்தான் பத்தியப்படும் அப்பதான் குடிச்சமாதிரி இருக்குமாம்..ஐரோப்பியர்களைப்போல் அளவாகக்குடிச்சால் எல்லோரிடத்திலும் மரியாதைகிடைக்கும் அங்கீகாரமும் கிடைக்கும்.

அகதிக்குடிமக்களைப்போலல்ல இங்கு பிறந்துவளர்கின்ற எம்தலைமுறையினர் என்பதையுணர்ந்து எம்பெற்றோர் அவர்களுக்கு இடைஞ்சல் விளைவிக்காமலிருந்தாலே போதும்.இலங்கையில் ஒருகாலத்தில் பெற்றோரே பிள்ளைகளை வழிநடத்திக்கொண்டிருந்தனர். இன்று அங்கும் அப்படியில்லை. அப்படியிருக்கையில் இங்கு

புகலிடங்களில் பிள்ளைகளை வழிநடத்தக்கூடிய போதுமான மொழியறிவு, பொது அறிவு, நிர்வாக நடைமுறைத்தகவல்கள்,ஆற்றல்கள் இல்லையென்பதை ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.எமது அறுபதுவயது கிடுகுவேலி ஆலோசனைகள் இலங்கைப் புத்திமதிகள் இங்கு செல்லுபடியாகா. வடிவங்களுக்குள் அடைபட்டு மாற்றங்களை மறுத்து, வாழ்வதாய் பாசாங்குபண்ணிக்கொண்டிருக்கின்றோம்.

பிள்ளைகளின் தோழில்கைபோட்டு நடவுங்கள். நட்பாயிருங்கள் அவர்களிடமிருந்து நடப்புலகத்தை புறஅறிவை கற்றுக்கொள்ளுங்கள். பிள்ளைகளின் பின்னின்று அவர்களை இழுத்து பழமைக்குள் வீழ்த்த முயலாதிருக்கவேண்டும்.பெற்றோர்பாதை பிள்ளைகட்கும் பொருந்திவரா. பிள்ளைகள்பாதை பெற்றோற்கு பொருந்திவராது. எனினும் பொருத்தப்பாட்டிற்குள் வந்துதானாகவேண்டும்..அவர்கள் காணும் புதியவுலகை காண முயலுங்கள் அவ்வுலகு விசாலமானது நாமறியாதது. அறிவதில் ஆர்வங்காட்டுங்கள். சோத்துப்பானைக்குள்ளே கிடந்து சண் ரீவியையும் வியய் ரீவியையும் பார்த்து பேயாய் கணங்களா\ய் பல்மிருகமாகி வல்ல அசுரராகி தொலைந்துபோவோரால் எந்த அறிவுலகை எங்ஙனம் கண்டடையமுடியும்.

தாய் தேனீரையும் பிஸ்கற்றையும் கொண்டுவந்து கொடுக்க மகன் வாங்கிக்கொண்டேகுழைந்து பவ்வியமாக அருகமர்ந்து செல்லத்தொனியில் "எல்லாரும் போறாங்களம்மா நான்போகாமல் விடுறது பிழையம்மா. அவங்களவிட்டு ஒதுங்கிப்போக ஏலாது நானும் போறன் அவையோட. "சரி போயிற்றுவா இரவு பத்துமணிக்குமுதல் வந்திடு" எத்தினமணிக்கு முடியுமெண்டு சொல்ல ஏலாதம்மா. அவங்களெல்லாம் பழைய ஆக்கள். நான்தான் புதுஆள்... போறத்தால எனக்குத்தான் லாபம் அம்மா. முடியும்வரை நிண்டுவாறது நல்லது.

"அம்மா யூனியில படிக்கேக்க எத்தின பொடியள் பெட்டையள் குடிக்கச்சொல்லி வில்லங்கப்படுத்தினாங்கள், கட்ட அடிக்கக்கூட கேட்டவங்கள், எனக்கு விருப்பமில்ல நான் மாட்டன் எண்டுட்டன். என்ன மற்றவையால மாத்த ஏலாது. நான் நினைச்சால்த்தான் என்ன மாத்தலாம்" தத்துவங்களை கொட்டினான்.

யூனியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் திறந்தவெளி பூங்காவில் நிகழ்ந்த பிறந்தநாள் பார்ட்டியின்போது மாணவ மாணவிகள் பியர்அருந்தியிருக்கின்றார்கள்.அவ்விடத்தில் ஒருமாணவன் குடிக்கமறுத்தவேளை ஒருவெள்ளை பெட்டை அவனது கால்ச்சட்டையைத்தொட்டுப்பார்த்து உனக்கு இருக்காவெனக்கேட்டு ஓஓ...இருக்குது கெக்கலித்து சிரித்தார்களாம். நல்லவேளை தமிழ்ப்படத்தில வாறவசனம் மாதிரி வா இருக்கா இல்லையாவ்ண்டு நிரூபிச்சுக்காட்டுறன் என்று அநாகரீகமாக் கேட்கவில்லை. இவையெல்லாம் இங்கு சாதாரண பகிடியாகிப்போகும் சம்பவங்கள். இதையும் நினைவிற்கொண்டுவந்த தாய் மகனுக்கு சம்மதம் தெரிவித்தாள்.

"குடிக்கச்சொல்லி கேட்டால் குடிக்குமாப்ப நடி."

தந்தை மனதிற்குள் மகிழ்ந்து பெருமைகொண்டார். இவர்களின் கல்விமுறையும் சுதந்திரமும் சுயஆளுமையை ஊக்குவிக்கும் பண்பும் இப்படி வளர்த்துவிடுகிறது. நாம் ஏற்றுக்கொண்டு வழிவிடுதலே நமது பணி. பிள்ளைகளின் தமிழ்ச்சூழலுக்கு வெளியிலான ஒன்றுகூடல்கள் சந்திப்புகள் அவர்தம் ஆற்றலை அறிவை வளர்க ஏதுவாக அமையும்,சில சாதக பாதகங்களை பகுத்தறியும் பக்குவமும் அறிவும் அவர்களுக்குண்டு. அவற்றை வளர்த்தெடுக்கும் ஊக்கியாயிருக்கவேண்டும். பெற்றோர் இவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பாராகில் அவை பிள்ளைகளின் மனதைப்பாதிக்கும் என்பதை கவனங்கொள்ளவேண்டும். தனிமரம் தோப்பாகாது. எல்லாவிடயங்களிலும் விலகிநிற்கவியலாது.

பெற்றோர்கள்தம் தலைக்குள் இருப்பதை பிரதியெடுத்து அப்படியே பிள்ளைகளின் தலைக்குள் புகுத்திவிட நினையாதிருத்தல் நல்லது.பாதையைக்காட்டிவிடலாம் பயணம் அவர்கட்கானது. சொல்லிக்கொடுக்கலாம்.அது திணிப்பதாகவிருத்தலாகா.இவ்வுலகு அவர்களுக்கானது. இருப்பு அவர்களுக்குரியது.தீர்மானிப்பது அவர்கள். பிள்ளைகள் பெற்றோர்களின் உடமைப்பொருள்களல்ல. இந்நாடுகளில் பிள்ளைகளே பெற்றோற்கு ஆசான்கள்.

"சரி உன்ன நம்பிறன் ஏதோ உன்ரவிருப்பம்... குடிக்கமாட்டயெண்டுதெரியுது போயிற்றுவா. நேரத்துக்குவரப்பார்.

அம்மாவும் விசாவழங்கிவிட்டா.மகன் மகிழ்வுடன்

"அம்மா நான் ஒரு நல்ல பிள்ளையெண்டதாலதான் உங்களிட்ட வந்து இதெல்லாத்தையும் சொல்லுறன். கேக்கிறன். இதப்புரிஞ்சுகொள்ளுறத்துக்கு இவ்வளவு நேரமெடுத்திருக்கிறீங்க. இனிநெடுக பார்ட்டிகள் நடக்கும். எல்லாத்திலும் கலந்துகொள்ளத்தான் வேணும் அப்பதான் நம்மையும் மதிப்பாங்கள் நாமளும் நாலுவிசயங்கள அறியலாம்.ஆனால்க்குடிக்கிறதும் குடிக்காமல் விடுகிறதும் என்ரவிருப்பம் நான்தான் முடிவெடுக்கிறது"

"இரவுக்கு என்ன சாப்பாடம்மா"

"அப்பாவக்கேள் சமைச்சுத்தருவார் நான் இன்னும் ரெண்டுநாடகம் பாத்துமுடிக்க வேணும்...இந்தமனுசன் வேலையால வந்தநேரத்தியிருந்து பேஸ்புக்க நோண்டிக்கொண்டிருக்குது "

நேசன் மகதி

# விரல்களில் சிக்கிக்கொண்ட இதயம்...!

பூக்களில் கோலமிடும் மரம்
ஒரு முழுநீள இருக்கை
இருவரும் மிக அருகில்
உனது சுண்டு விரலுக்கும்
எனது சுண்டு விரலுக்குமான
இடைவெளியின் அகலம்
ஐந்து கட்டைவிரல்கள்
தொடு
தொடுவென
அடித்துக்கொள்ளும்
நீயும் அதையே நினைக்க
ரசித்துக் கிடக்கும் அகம்
நீ தொடுவாய் என நானும்
நான் தொடுவேன் என நீயும் மனசுக்குள்ளே
தொட்டுக்கொண்டோம்
கண்டுபிடித்து விளையாடும் பிள்ளைகள்
தலையை மெல்ல வெளியே நீட்டி
சட்டென்று இழுத்துக்கொள்ளுவதாய்
இருவரும் மாறி மாறி
நகர்த்திக்கொண்டோம்
சிறிது நொடிகளில் ஒரேநேர்க்கோட்டிற்கு
வந்துவிட்ட விரல்கள் சட்டென்று
கோர்த்துக்கொள்ள
நீயும் நானும் வேறு எங்கோ
பார்த்துக்கொண்டோம்
இரு கைவிரல்களும் ஐந்தாகி ஏதேதோ
பேசிக்கொண்டன...

வளவ. துரையன்

# பேச்சு

தலைவர் மேடையில்
பேசிக்கொண்டிருக்கிறார்.
கீழே தொண்டர்கள்
உட்கார்ந்து கேட்கிறார்கள்.
கீழே இருப்பதால்
இவர்கள் தொண்டர்கள்.
தலைவர் எப்பொழுதும்
மேலேதானே.
தலைவருக்குத் தெரியும்
தன் பேச்சை அவர்கள்
கேட்பதில்லையென்று
அவர்களுக்கும் தெரியும்
தமக்காக நம் தலைவர்
பேசவில்லையென்று
அவர்கள் தம்மை விட்டுப்
போய்விடக் கூடாதென்று
அவர் பேசிக் கொண்டிருக்கிறார்.
அவர் இன்னும்
பேசவேண்டுமென்று
அவர்கள் சும்மா இருக்கிறார்கள்.
ஒவ்வொருவர்க்கும்
புலிவாலைப் பிடித்தகதைதான்.
அதோ அவர்
இன்னும் பேசிக் கொண்டிருக்கிறார்.

உருவகக் கதை

# பன்றிக்குட்டிகளும் தாமரைகளும்

**செம்பியன்செல்வன்**

**சா**க்கடைத்தேங்கல் ஒன்று குளமாகிக் காட்சி அளித்தது.

யாரோ எப்போதோ அங்கு தாமரை மணிகளையும் அல்லி வித்துக்களையும் விட்டெறிந்திருக்கவேண்டும்.

அந்த விதைகள் தாமரைத் தீபங்களாக,அல்லிச் சுடர்களாக மாற மாற சாக்கடை தடாகமாகிவிட்டது. அதன் முன் புறத்தே ஆலயம் ஒன்று நெடிதுயர்ந்து நின்றது.அதன் மறுபுறத்தே சேரிக்குடிசைகள் நிரையமைத்துக் காணப்பட்டன.பன்றிக்குட்டிகளும்,தாமரை மலர்களும் சேரிக்குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாயின.

இரண்டிற்கும் சேரியில் இறங்கியேயாக வேண்டும்.

அர்ச்சகர் தாமரைகளையும்,அல்லிகளையும் சகதியில் இறங்காமல் துறட்டிக்கம்பினால் கரையிலிருந்தே பூசைக்காகப் பறித்துச் செல்வார்.எல்லாரும் கடவுள் பிரசாதமாகக் கண்ணில் ஒற்றி தலையில் சூடி...

பன்றிக்குட்டிகளைக் கண்டு அருவருத்து ஓரமாக விலகி...

“பார்த்தாயா,..என் பெருமையை..எல்லோரும் என்னைக் கண்ணில் ஒற்றி..தலையில் சூடி... ஆனால் உன்னைக் கண்டு விலகி ஓடி..”

- தாமரை பெருமை பேசியது.

சாக்கடையில் சுகம் கண்டுகொண்டிருந்த பன்றிக்குட்டி கூறியது “அதோ அந்தக் குடிசையின் பக்கம் பார்!..”

தாமரை விழிகளைத் திருப்பியது.அதிர்ந்துபோய்விட்டது.

அங்கு பன்றி ஒன்று இரத்தவெள்ளத்தில்...

“பார்த்தாயா?..நாங்கள் அந்தச் சேரி வாழ் மக்களின் உணவு.அதனால்தெய்வத்தையும்விட உயர்ந்தவர்கள்...” என்றபோது ஏதோவொன்று பன்றிக்குப் பக்கலில் வந்து விழுந்தது.

அது-

நேற்றைய பூசைமலர்க்குப்பை..

தாமரை மலர்களை பன்றி ஆறுதலாக அசை போடத்தொடங்கியது

**நன்றி:அமிர்தகங்கை இதழ்**

வட்டக்கச்சி வினோத்

# முள்ளிவாய்க்கால் நினைவாக:



தமிழரசியின் புத்தகப்பை
வெள்ளை ஆடையில்
சின்ன மயில் தூக்கிச்சென்ற புத்தகப்பை
கன்னக்குழி சிரிப்போடு
முதுகில் குலுங்கித் திரிந்த புத்தகப்பை
அவளுக்காக உணவையும்
அவள் பருக நீரையும்
அவள் படிக்க பொத்தகத்தையும்
பொத்திப் பொத்தி சுமந்த பை
அப்பாவின் கைபிடித்து
அகரம் தொடங்கையில
ஆதாரமாக அவளோடு சென்றபை
கீதையோஇ பைபிளோ
குர்ஆனோஇ திருக்குறளோ
எதுவென்றாலும் ஏற்று உள்ளெடுக்கும்
பகுத்தறிவு புத்தகப்பை
துரத்திய போர்
இடத்தை நகர்த்திய போது
தொடர்ந்து அவள் முதுகில்
பயணித்த புத்தகப்பை
விரக்தி ஏதுமற்று
உயர்வு கல்வியென்று
பிஞ்சுத்தோள்களை
முத்தமிட்டு தொடர்ந்தபை
பதுங்கிய பங்கரில்
எரித்த பொஸ்பரசில்
நிலை தடுமாறி விழுந்த
பிள்ளையின் முதுகில்
அணையாக நின்றபை
விழுந்து வெடித்து சிதறிய
குண்டு அடுத்த தலைமுறையை
அழித்து சுவைத்த போது
அவளை தூக்கிச் சுமந்த
சோதரனை துளைத்த
குண்டுச் சிதறல்கள்
அவன் விழி மூடிய நேரம்
கையில் இருந்த வராற்றுப் புத்தகத்தோடு
அவள் புத்தப்பையில் நினைவாக அண்ணன்
அம்மா சொல்லித் தந்த
கதைப்புத்தகத்தை மட்டும் சுமக்கிறது
அந்தப் புத்தகப்பை அவளை புதைத்துவந்த
நினைவைச் சுமந்தபடி
முள்ளிக்கரையில் முதல்நாள் பொழிந்த மழையில்
மண்ணை அள்ளிப்போன வெள்ளத்தில்
வெளித் தெரிந்த ஒரு புத்தகப்பை
வெள்ளைப் பக்கங்களை
சேற்றில் மூழ்கடித்த போரின்
எச்சங்களோடு புத்தகப்பை
அத்தனை கனவுகளையும்
புதைத்துவிட்ட போரில்
தன்னை துளிர்விட்ட மரமாக
அந்த புத்தகப்பையில் இருந்து தமிழ் புத்தகத்தில்
எழுதியிருந்தது தமிழரசி என்று



கவிஞர். மல்லை, மு.இராமநாதன்

# கரித்துண்டு

சாலையில் கிடந்த
கரித்துண்டுகளை
மடியில் முடிந்தான்..

பாதையோர
மர நிழலடியில் -- அவன்
கை வசமாகிறது
கருநாகப் பாம்பு
சிறுவர்கள்
சீண்டிப் பார்த்தனர்..

மரம்
கிளையில்
இலையுதிர்ந்த வடுக்கள்..

பாசி பிடித்த குட்டை
பார்ப்போர்க்கு
பச்சைப் புல்லென தோற்றம்..

காதில் விழாத
கானக் குயிலிசை
நாசி நுகராத
நறுமண மலர்கள்..

விண்ணில்
விமானம் போல் பறக்கும்
வெண் புறாச்சேனைகள்..

.
குடை பிடிக்கும் வானம்
மேக ஆடை அவிழ்ந்த
மோக நிலா..

அந்தோ பாவம்
பசிக்காக
இயற்கை விளையாட்டை
வரைந்தவன் வாழ்வில்
இயற்கை விளையாடியது..

இடி மின்னல.
மழை வந்து
மண்ணோவியம் மறைந்தது..

ஓவியன் கண்ணில்
நீர்த் திரை

வரைந்த கரங்களுக்கு
உதவிக்கரம் நீண்டது.

இரக்கம் இன்னும்
இறக்கவில்லை..

# வெள்ளம்

**இராஜ.அரியரட்ணம்**

மின்னல் மின்னி இடியிடித்தது. தொடர்ந்து நிகழ்ந்த ஊழிக்கூத்தைப் படம் பிடிக்க வேண்டியதில்லை. இப்படித்தான் வானம் பார்த்து நிற்கும் யாழ்ப்பாணத்தில் இருந்தாற்போல் இருந்து வெள்ளம் வரும். ஒரு கலக்குக் கலக்கும். மக்களை அல்லோல கல்லோலப்படுத்திவிட்டு அகப்படுகிற எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு போய்விடும்.



சிங்கப்பூர் பணத்தில் முளைத்த கல்வீடுகள் நிமிர்ந்து நிற்கும். ஏழை மக்களின் குடிசைகளைச் சின்னாபின்னமாக்கித் தலைசாய்க்க இடம் இல்லாமற் தவிக்கச் செய்துவிடும். கல்வீடுகளில் இருந்த பணக்காரர்களையும் அந்தமுறை வந்த வெள்ளம் பீதிகொள்ளச் செய்துவிட்டது.

இத்தனைக்கும் கந்தப்பருடைய குடிசை அசையவில்லை. திடற்பூமி. வெள்ளம் வந்தாலும் எங்கேயோ ஓடி மறைந்துவிடும்.

காலையில் எழுந்ததும் கந்தப்பருக்குக் கண்ணில் பட்டது வெள்ளத்தில் நீச்சுப் பழகும் ஒரு நுகம். சுருட்டுப் பிடிப்பதையும் மறந்து கொட்டிற் பக்கம் போனார். நுகம் அங்கில்லை. சரி, என்று சொல்லி தவித்துத் திரிந்த நுகத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவந்து பத்திரமாக வைத்துவிட்டார்.

ஒரு பசுவும், இரண்டு நாம்பன்களும் சிலிர்த்துக் கொண்டு வெள்ளத்தில் நின்றன. அவிழ்த்து அக்கம்பக்கத்தில் கட்டுவது முடியாத காரியம். கந்தப்பர் 'லொக் லொக்' என்று இருமிக் கொண்டு, மாடுகளைப் பார்த்தபடி நின்றார்.

கந்தப்பர் இப்போதெல்லாம் எலும்புந்தோலுந்தான். ஆளில் ஒருபிடி இரத்தமில்லை. நரம்புகளெல்லாம் உடம்பிலே பச்சைப் பசேலென்று நெளிந்து மிதந்து கிடந்தன. போதாக்குறைக்கு கொடிய இருமலும் அவரை ஆட்டும்வரை ஆட்டி வைத்தது.

சிவகாமி அப்போதுதான் பாயைச் சுருட்டி அசைவில் வைத்துவிட்டுப் புகைச்சட்டியைத் தூக்கிக் கொண்டு அடுக்களைப் பக்கம் போனாள். வாயிற் சுருட்டில்லாமற் கந்தப்பர் அன்று சோர்ந்து நின்றது சிவகாமிக்குப் புதுமையாகவிருந்தது.

"வெள்ளத்திக்கை நில்லாதே அப்பு – அது கொஞ்ச நேரத்தால் வத்திப்போம். நீ வந்து புகைச்சட்டியில காலைக் காச்சு" என்றாள் மகள்.

கிழவனுக்கு அப்போதுதான் சுருட்டின் ஞாபகம் தட்டியது. "தலைமாட்டுக்கை போயிலை கிடக்குது, பாதி கிள்ளிக்கொண்டு வா பிள்ளை" என்று சொல்லித் திண்ணையிற் போய் கையை ஊன்றிக் குந்தினாரோ இல்லையோ, வெள்ளத்தை விழுங்கி, மிக வீங்கிக் கிடந்த திண்ணை, அழுகிய பழம் போல் நெகிழ்ந்துவிட்டது.

அடுக்களைக்குள் இருந்த சிவகாமி "அப்பு" என்று சொல்லிச் சிரித்தும் விட்டாள்.

அப்பு எரிந்து புகையவில்லை. அடிச்சுருட்டைச் சப்பிச் சப்பிப் புகைவிட்டுக் கொண்டிருந்தார்.

"மோனே, காவோலை விழக் குருத்தோலை சிரிக்குமாம்" என்று சொல்லி ஒருமாதிரிச் சமாளித்து ஒல்லித் தேகத்தைத் தூக்கிக்கொண்டு, எழும்பிவிட்டார்.

மகள் அடுக்களைக்குள் தேநீர் யத்தம் செய்துகொண்டு இருந்தாள். இப்படித்தான் பெருமழை பெய்து "விர்" என்று குளிராக இருந்தாற் கந்தப்பருடைய குடிசையிலும் தேயிலை வாசம் – கமகமக்கும்.

"இந்தா அப்பு, இருமலுக்குமிது நல்லது. சுடச்சுடக் குடித்தால் சுகமாகவிருக்கும்" என்று சொல்லி சிரட்டையைக் கையிற் கொடுத்து முட்டிக்குள்ளே கிடந்த தேநீரைப் பக்குவமாக ஊற்றினாள், மகள். கிழவர் சீனியை உள்ளங்கையிற் கொட்டி, நாக்காற் தடவி பொச்சடித்துக் குடிப்பதை மகள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தாயார் இறந்து இவ்வளவு காலமாகியும் அவள் தகப்பனாருக்குச் செய்யவேண்டிய தொண்டுகளை மறந்துவிடமாட்டாள்.

சிவகாமியின் முகத்தில் அழகு பொங்கி வழிந்துகொண்டிருந்தது. ஒளி தட்டும் விழிகள். மாந்துளிர் மேனி. சூரியனின் கூரிய அம்புகள் அவளுடைய மார்பைக் கிழித்துக்கொண்டு போகும் வேளைகளில் எல்லாம், அவளுடைய உடம்பு அப்படியே பளபளக்கும். பொன் – தோடுகள் காதுகளில் ஒட்டிக்கொண்டு கிடந்தன. ஒரு சின்னப் பொன் மூக்குத்தி மின்னி மின்னி அவளுடைய முகப்பொலிவுடன் போட்டியிட்டது. கூந்தலை அள்ளிவாரி ஒரு பெரிய கொண்டை கட்டியிருந்தாள். கொத்துக் கொத்தாக மலர்கள் அவள் கொண்டையை அலங்கரிக்கவில்லை. சேலையைக் கட்டி இடுப்பிலே இறுக்கமாகச் சொருகிக் குடமும் கையுமாகக் கிணற்றடிக்குச் செல்லும்போதும், தண்ணீருடன் திரும்பும் வேளைகளிலும், சிவகாமி ஒரு கைவீசி ஒய்யாரமாக அடி எடுத்து வைப்பதே ஒரு தனி அழகு.

இதையெல்லாம் கண்டு அவஸ்தைப்பட்டு, உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தவியாய்த் தவிக்க, அக்கம் பக்கத்தில் ஒரு வாலிபன் இருந்தானோ இல்லையோ, கடவுள் அவளிடம் ஏன் அவ்வளவு அழகையும் வாரியிறைத்திருக்க வேண்டும்?

கிழட்டுக்கட்டை, சிரட்டையை இறப்பிற் சொருகிவிட்டு, சுருட்டைப் பிடித்தபடி அடுக்களைக்குள் நுழைந்தது நெருப்புக்காக.

"மேனே, ஒருநாளுமில்லாத பெருமழை. வயல் என்ன பாடோ தெரியாது. போன கிழமை அங்கின ஒருமாதிரியெல்லாம் பச்சையாக் கிடந்தது. இந்தமுறை கடவுள் கண்பார்த்துவிட்டார். குறையில்லை என்று கிடக்க வெள்ளம் அடித்துக்கொண்டு வந்திட்டுது. ஒருக்காய்ப் போய்ப் பார்த்துக்கொண்டு வாறன்.

டுகாற் சுப்பர் வந்தால் இருக்கச் சொல்லு'' என்று கிழவர் தலைப்பட்டையை எடுத்துத் தட்டித் தலையிற் போட்டுக்கொண்டு வயற்பக்கம் திரும்பினார்.

''அப்பு நல்ல வெள்ளம், இப்ப என்ன அவசரம் – நீயும் போகவேணும் எண்டு நிற்கிறாய். வாய்க்காற் பக்கம் போகும்போது கவனமாய்ப் போ. இந்தா இந்தத் தடியையும் கொண்டு போ'' என்று மகள் சொல்லிக் கிழவனுக்கு ஒரு சிறு துண்டு பனாட்டும், தேங்காய்ச் சொட்டுகளும் கொடுத்து அனுப்பினாள்.

கந்தப்பர் வீட்டுப் பக்கம் ஒரு குருவியும் தலைகாட்டுவதில்லை. இத்தனைக்கும் அந்த மனுஷன் ஒரு பொல்லாத ஆள் அல்ல. தானும் தன் பாடும். ஆனால் டுகாற் சுப்பர், கந்தப்பரைக் கண்டு அரட்டைக்கச்சேரி வைக்காமல் விடுவதில்லை.

ஏன் அம்மாக்குட்டியும் சிவகாமியிடம் அன்பு வைத்திருந்தாள். ''அப்படிச் செய் மேனே; இப்படிச் செய் மேனே'' என்று அம்மாக்குட்டிதான் சிவகாமிக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது. அப்பெண் ஓர் ஏழை. என்றாலும் நல்ல மனுஷி.

அந்த வெள்ளத்தைத் தாண்டி ஒருமாதிரி வயற்பக்கம் சேர்ந்துவிட்டார் கந்தப்பர். கிழடுதட்டிய காலத்தில் இப்படியெல்லாம் வெள்ளத்திலே நீந்தவேண்டியிருந்தது, அந்த உயிருக்கு! வயல் இருந்ததாகத் தெரியவில்லை. வெள்ளம் எல்லாவற்றையும் விழுங்கிக் கக்கிக்கொண்டு பாய்ந்தது. செத்த பசுக்கன்றும், ஒரு கறுத்த நாயும் மரக் கிளைக்ளுடன் சிக்குண்டபடி கிழவனை நோக்கி வந்துகொண்டிருந்தன சொற்ப தூரத்திலே ஒரு குடில் மிதந்து திரிந்தது. குடிலின் உச்சியில் ஒரு சேவலும், பெட்டைக் கோழியும் கூனிக் குறுகிக் கொண்டிருந்தன.

கந்தப்பர், நாவல் மரத்தைக் கண்டுவிட்டார். மரத்தருகேதான் வாய்க்காலென்பது அவருக்குத் தெரியும். வாய்க்காலைக் கடந்துவிட்டால் முதலிற் கால் படுவது கந்தப்பருடைய நிலத்தில். னால் அங்கே எதற்காகப் போகவேண்டும்? நீச்சுப் பழகவா? கிழவனுக்குக் குளிர் 'வெடு வெடு' என்று நடுக்கங் கொடுத்தது.

வாய்க்காற் பக்கம் போய்க் கால் வைத்தாரோ இல்லையோ, 'குபுக்' என்று சறுக்கி வீழ்ந்தார்! வாய்க்கார் வரம்பு இருந்த இடமும் தெரியாமல் வெள்ளத்தோடு அள்ளுப்பட்டுவிட்டது. அந்த இடத்தைப் பார்த்துத்தான் கந்தப்பரும் காலை வைத்தார். ''வாய்க்காற் பக்கம் போகும்போது கவனமாகப் போ'' என்று சிவகாமி ஏற்கனவே சொல்லியிருந்தாள். சிவகாமியும் அடுக்களையும், கந்தப்பரின் மனக்கண் முன் மின்னி மின்னி மறைந்தன.

திக்குமுக்குப் பட்டு எழுந்துவிடலாமென்றால் அது அவரால் முடியவில்லை. அந்தப் பக்கம் ஒரு குருவிகூடப் பறக்கவில்லை. தூரத்தில் எங்கோஒரு ஆந்தை அலறியது. மகள் கொடுத்த தடியைப் பிடித்தபடி கந்தப்பர் செத்துக் கொண்டிருந்தார்.

சிவகாமி 'அப்பு'வைப் பார்த்தவண்ணம், கொதித்துப் பறக்கும் உலைக்கு அரிசி போடுவதற்காக, அரிக்கன் சட்டியில் அரிசியை அலசிக் கொண்டிருக்கிறாள். பக்கத்திலே ஒரு சட்டியிற் பிட்டுக்காக ஒடியல் மா தண்ணீரில் ஊறுகின்றது.

அப்புவைக் காணவில்லை. ஆடுகாற் சுப்பர் வருவார், அவரிடம் சொல்லி வயலுக்கு அனுப்பலாம் என்றால் அவரும் வந்தபாடில்லை.

அதிக தூரத்தில் இருக்கும் பள்ளன் ஒருவன் ஒருநாளுமில்லாத திருநாளாக அன்று வந்தான்.

''நாச்சியார் கமக்காரன் எங்கே?'' என்றான் பள்ளன்.

''வயலுக்குப் போட்டார். இன்னும் வரயில்லை'' என்றாள் சிவகாமி.

அம்மாக்குட்டிகூட அன்று வர அவ்வளவு நேரமாகிவிட்டது. ''அப்பு எங்கே'' என்றாள்.

''வயலுக்குப் போட்டார். ஆடுகாற் சுப்பர் வந்தால் அப்புவைப்பார்த்துவரச் சொல்லவேணும்''

''ஓம் பிள்ளை ஒருக்கா அனுப்பி விடு'' என்று சொல்லிவிட்டு அம்மாக்குட்டி பறந்து சென்று விட்டாள்.

ஆடுகாற் சுப்பர் கந்தப்பரின் வீட்டுக்குப் போகவில்லைத் தான். ஆனால் வெள்ளத்தின் வேடிக்கையைப் பார்க்கலாமென்று வாய்க்காற்பக்கம் போனவர், கந்தப்பரை அங்கு கண்டு கண்ணீர் வடித்தார். சுப்பரின் கண்ணீர்த்துளிகள் வெள்ளத்துடன் கலந்துகொண்டன. அவர் அங்கும் இங்கும் பார்த்தார். ஒருவருமில்லை. கந்தப்பருடைய தலைப் பட்டை மாத்திரம் தண்ணீரிலே தவித்துக் கொண்டு, வருவதும் போவதுமாக இருந்தது.

நண்பனின் உடலைத் தூக்கி கவர்விட்ட மரமொன்றில் வைத்துவிட்டு கந்தப்பரின் குடிசையை நோக்கி ஆடுகாற் சுப்பர் 'விறுவிறு' என்று நடந்தார்.

வெள்ளம் வந்தது.

இத்தனைக்கும் கந்தப்பருடைய குடிசை அசையவில்லை.

இப்போது ஆடுகாற் சுப்பர் கந்தப்பருடைய குடிசையை அசைக்கப் போகின்றார்.

சுப்பர் போகின்ற போக்கிலே குடிசை 'பொலு பொலு' என்று இடிந்து மண்ணோடு மண்ணாகிவிடுமா?

**நன்றி: ஈழகேசரி, 18— 02— 1945/சிறுகதை.கொம்**



# முள்ளிவாய்க்கால் நினைவாக:
# ஊமைகளின் உலகம்..!

**குரு அரவிந்தன்**

அந்தப் பச்சிளம் உதடுகள் மார்பில் பட்டபோது தாய்மையின் பூரிப்பில் அவள் மெய்மறந்து போனாள். குழந்தையை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு கண்களை மெதுவாக மூடிக்கொண்டாலும் தாய்மையின் அந்த இதமான உணர்வின் வெளிப்பாட்டை அதிக நேரம் அவளால் அனுபவிக்க முடியவில்லை. பூப்போன்ற சின்னஞ் சிறிய அந்த உதடுகளின் தேடலில் அங்கே சுரப்பதற்கு எதுவுமில்லை என்று தெரிந்த போது குழந்தையின் 'வீல்' என்ற அந்த அலறல் சத்தம்தான் அவளது செவிகளில் முட்டி மோதி நின்றது.

வெறுமையின் தாக்கம் ஏற்படுத்திய குழந்தையின் ஆக்ரோசத்தவிப்பை அவளால் அப்போதுதான் முழுமையாக உணரமுடிந்தது. அதுவே அவளது உணர்வுகளின் பிரவாகமாய் ஒருகணம் அவளை உடைந்து போகவும் வைத்தது. அடுத்த கணமே அந்த உணர்வின் தாக்கம் ஏற்படுத்திய இயலாமையின் வெளிப்பாடாய் அந்தத் தாய் மனசு ஓவென்று விம்மி வெடித்தது. பொட்டென்று மார்பில் விழுந்து வழிந்த கண்ணீர் துளிகள் முகம் புதைத்து அழுத குழந்தையின் உதட்டில் படிந்த போது வாய்விட்டு வெளியே சொல்லத் தெரியாத அந்தப் பிஞ்சின் அலறல் கூட ஒரு கணம் தேங்கி நின்றது.

'அம்மா ஊட்டிய அமுதம் உப்புக் கரித்தது ஏன்?' என்று அந்தக் குழந்தைக்குப் புரிந்திருக்க நியாயமில்லை. குழந்தையைச் சமாதானம் செய்ய வாய் திறந்து 'ஆராரோ' சொல்லித் தாலாட்டுப்

பாடக்கூட முடியாத சூழ்நிலைக் கைதியாய் அவள் மாறியிருந்தாள். வாய்திறந்தால் வெளியே உதிர்வது தமிழாக இருந்ததால்தான் அவள் இந்த மண்ணில் இப்படியான அவலநிலைக்குத் தள்ளப்பட்டாள் என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் அது பற்றிச் சிந்திக்க இதுவல்ல நேரம் என்பதால் அது பற்றிய கவலைகளை தற்காலிகமாக அவள் ஒரு புறம் தள்ளி வைத்திருந்தாள்.

பசி கண்ணை இருட்டிக் காதை அடைத்தது. இப்படியான பசிக்கொடுமையை அவள் ஒரு போதும் அனுபவித்ததில்லை. கொடுமையிலும் கொடுமை பசிக்கொடுமை அதுவும் குழந்தைகள் பரிதவிப்பதைப் பார்த்தபோது தூக்கம் கெட்ட இரவாய் எப்போது விடியும் என்ற எதிர்பார்ப்புடையதாய் அந்த இரவு அவளுக்கு அமைந்திருந்தது. கடைசிக் குழந்தை வயிற்றில் இருக்கும் போதே அவளது கணவன் தொலைந்து போயிருந்தான். உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதுகூடத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் நாடு இருந்தது. அதனால் குழந்தைகளின் பசியைப் போக்க யாரிடமாவது கையேந்த வேண்டிய நிலைக்கு அவள் தள்ளப்பட்டிருந்தாள். அகதியாய் சொந்த மண்ணிலே இடம் பெயர்ந்து இங்கே வந்தபோது, படித்திருந்தும் வயிற்றுப் பிழைப்புக்காக அரிசி ஆலை ஒன்றில் கூலி வேலைதான் அவள் செய்தாள்.

இலங்கைத் தீவில் பெரும்பான்மை இனமக்கள் மட்டும் சந்தோஷமாய்க் காலம் களிக்க வடக்கு கிழக்கு, மலைநாடுகளில் வாழ்ந்த சிறுபான்மை இனமான தமிழர்கள் மட்டுமே அரசியல் லாபம் தேடியவர்களால் தினந்தினம், அல்லற்படுத்தப்பட்டு அழுதழுதே வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அடிப்படை உரிமைகளை வாய்திறந்து கேட்டதுதான் அவர்கள் செய்த மிகப்பெரிய குற்றமாகக் கணிக்கப்பட்டது. அகிம்சை முறையில் போராடிய தமிழ் அரசியல் வாதிகள் அதனால் பலன் எதுவும் இல்லாமல் போகவே தாமாகவே ஒதுங்கிப் போய்விட இளைஞர்கள் அந்தப் போராட்டத்தை முன் எடுத்தார்கள். அரசியல் வாதிகள் யாருமே தமிழர்களின் குறைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளவோ அல்லது அதன் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவோ மறுத்து விட்டார்கள் அல்லது மறந்து விட்டார்கள். அடங்கிப்போ என்ற கர்வத்தோடு அடக்கி ஆள்வதையே ஜனநாயகம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆண்டாண்டு காலமாய் வாழ்ந்த, பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு பிரிந்து போவது என்பது அத்தனை இலகுவான காரியமாய் தமிழர்களுக்கு இருக்கவில்லை. அதில் உள்ள வேதனையும் வலியும் மற்றவர்களுக்கு இலகுவில் புரிவதுமில்லை. திடீரென அவர்கள் வாழ்ந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று அறிவிப்பு வந்த போது இவர்கள் செய்வதறியாது குழம்பிப் போனார்கள். பாதுகாப்பு வலயம் என்று சொல்லி அவர்கள் ஏற்படுத்திய தடுப்பு முகாமுக்குள் போய் இவர்கள் முடங்க வேண்டிவந்தது. திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு ஒதுங்க ஒரு மரநிழலும் குடிக்கத் தண்ணீரும் ஒருநேரம் அரை வயிறுக்கு ஏதாவது தின்னக் கொடுத்தால் போதும் என்ற நினைப்புத்தான் அரசியல்வாதிகளுக்கு இருந்தது. இதுதான் மனிதவாழ்க்கை என்றால் அடிமை வாழ்க்கை வாழ்வதற்கு ஜனநாயகம் என்ற போர்வை எதற்கு என்பது பாதிக்கப்பட்ட இவர்களின் வினாவாக இருந்தது.

பாதுகாப்புக் கருதி பாதுகாப்பு முகாமுக்குச் சென்ற இளம் பெண்கள் களவாடப் படுகிறார்கள், ஆண்கள் தொலைந்து போகிறார்கள் குழந்தைகளும் சிறுவர்களும் தனிமைப் படுத்தப் படுகிறார்கள் என்றெல்லாம் இவள் தங்கியிருந்த பகுதியில் தினமும் செய்திகள் அடிபட்டுக் கொண்டே இருந்தன. வன்னிப்பகுதிக்குச் சென்றால் உயிருக்கு ஆபத்து தொலைந்துகூடப் போகலாம் என்று சொல்லி, பத்திரிகையாளர்கள் தடுக்கப்பட்டதால் எல்லாச் செய்திகளும் வேண்டும் என்றே முடக்கப் பட்டுவிட்டன. யார் தவறு செய்தாலும் தவறுதான் என்பதை வெளியே சொல்ல நல்ல மனம் படைத்த மனிதாபிமானிகள் கூடப் பயப்படுகிறார்கள். அப்படிச் சொல்ல வந்த ஒருசில பத்திரிகை ஆசிரியர்கள் முகவரி இல்லாமற் போனதும் கூட இவர்கள் பயப்படுவதற்கான முக்கிய காரணமாய் இருக்கலாம்.

தூக்கம் கலைந்த நிலையில் பசிக் கொடுமையை எப்படிப் போக்கலாம் என்று எண்ணியபோது அவள் முன்பு கூலி வேலை செய்த அரிசி குத்தும் ஆலையின் நினைவு வந்தது. சுமார் இரண்டு மைல் தூரத்திற்கப்பால் அந்த ஆலை இருந்தது. எட்டி நடந்தால் விரைவாக ஒருநடை போய் வரலாம் என்று நினைத்தாள். குழந்தைகள் இருவரும் இன்னமும் தூங்கினபடியே இருந்தன. இரவிரவாய் அழுததில் ஏற்பட்ட பசிக் களைப்பாக இருக்கலாம்.

குழந்தைகள் எழுந்திருக்கு முன்பாக வந்து விடலாம் என்ற நம்பிக்கையோடு சுளகையும் (முறம்) எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாய்ச் சென்றாள். முதலாளியிடம் கேட்டுப்பார்க்கலாம் என்ற நம்பிக்கையோடு சென்றவளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. தொழில் இல்லாத காரணத்தால் அரிசி ஆலை இழுத்து மூடப்பட்டிருந்தது. மூடப்பட்டுப் பல நாட்களாகி இருக்கலாம். கட்டிடத்தின் வெளிப்பகுதியில் அள்ளிக் குவிக்கப்பட்ட உமிக்குவியல் மட்டும் இவள் கண்களில் பட்டது. அவசரமாக கொஞ்ச உமியைக் கிளறிச் சுளகில் எடுத்துப் போட்டுக் கைகளால் பரப்பிப் பார்த்தாள். ஏதோ ஒருவித நம்பிக்கையின் பிடிப்பு அவளது கண்களில் பளீச்சென்று தெரிந்தது.

ஒவ்வொரு முறையும் உமியை அள்ளிப் போட்டுப் புடைக்கும் போது அவள் தேடிவந்தது கிடைக்கிறதா

என்று ஆவலோடு தேடிப்பார்த்தாள். சப்பி நெற்கள்தான் அதிகமாக அகப்பட்டாலும் அவற்றைத் தவிர்த்துப் பார்த்த போது நாலைந்து நல்ல நெல்லுப் பருக்கைகளும் அவளது கையில் ஒவ்வொரு முறையும் அகப்பட்டன. அரை மணி நேரம் செலவிட்டதில் ஒரு சிறங்கை நல்ல நெற்கள் கிடைத்தன. கஞ்சி காய்ச்சிக் குழந்தைகளுக்குக் குடிக்கவாவது கொஞ்ச அரிசி கிடைத்தால் போதும் என்ற வெறியோடு அவள் துரிதமாகச் செயற்பட்டாள்.

எந்த நேரமும் வானத்தில் குண்டு வீச்சு விமானத்தின் இரைச்சல் கேட்கலாம். திக்குத் திசை தெரியாமல் செல்கூட அங்கே வந்து விழலாம். எதையுமே கணித்துச் சொல்லமுடியாத நிலையில் மயான சூழ்நிலையில் அந்தப் பிரதேசம் இருந்தது. பறவைகளின் கூடுகள்கூடக் கலைக்கப்பட்டதில் அவற்றின் ஓசை அடங்கிப் போயிருந்தது. செல்விழுந்து எரிந்துபோன மரங்களும் குடிசைகளும் மனித உடல்களும் ஆங்காங்கே தினமும் காணும் காட்சியாப் போய்விட்டது.

வியர்வையில் தோய்ந்த உடம்பு பிசுபிசுத்தது. அவ்வப்போது சேலைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு நெல்மணிகளைப் பொறுக்கி எடுத்தாள். வெய்யில் உச்சியைத் தொட்டபோது ஐந்தாறு சிறங்கை நெல்மணிகளை கவனமாக எடுத்துப் பொன்னைப்போல மடியில் சேகரித்திருந்தாள். அதைக் கொண்டு போய் மெல்ல நெரித்து அரிசிப் பருக்கைகளாக்கி அவற்றைப் பொறுக்கிக் குழந்தைகளுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்ததோடு வழியிலே நின்ற சண்டி மரத்து இலைகள் சிலவற்றையும் அவசரமாகப் பறித்துக் கொண்டு அவள் தங்கியிருந்த இடம் நோக்கி விறுவிறு என்று நடந்தாள்.

என்றோ ஒருநாள் உதயம் தோன்றும் குழந்தைகளை நன்றாய்ப் படிக்கவைத்து அவர்களை நல்ல பிரசைகள் ஆக்க வேண்டும் என்ற ஒரு தாயின் தீராத கனவுகளைச் சுமந்தவண்ணம் அவள் நம்பிக்கையோடு நடந்தாள்.

அடிப்படைத் தேவைக்கான உணவுப் பொருட்கள் இந்தியாவில் இருந்து கப்பலில் வருவதாகச் சொன்னார்களே தவிர அங்கே எதுவும் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்திருந்தாலும் தடுக்கப்பட்டிருக்கலாம். வன்னிப் பகுதியில் போர் உக்கிரமடைந்திருந்தது.

ஒருநேர உணவிற்காகக் காத்திருந்து காத்திருந்து ஏமாற்றம் தாங்கமுடியாமற் போனதில் அவளுக்குள் ஒருவித சோர்வும் சலிப்பும் குடிகொண்டது. இராணுவம் நன்கு திட்டமிட்டு உரிமைக்காகப் போராடியவர்களைப் பட்டினி போட்டால் அதைக் கைவிட்டு உணவுக்காகப் போராடுவார்கள் என்ற வஞ்சக நோக்கத்தோடு செயற்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களின் வஞ்சக வலையில் வீழ்ந்ததால் உரிமையை மறந்து உணவிற்காகப் போராட வேண்டிய நிலைக்கு அந்த அப்பாவி மக்கள் தள்ளப்பட்டார்கள். அதனால்தான் இன்று இப்படியான மனித அவலத்தை அவர்கள் எதிர் நோக்க வேண்டிவந்தது.

சண்டி மரத்து இலையையோடு சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் குழந்தைகளுக்குக் கொடுத்து தானும் மிகுதியை அருந்தியதில் சற்றுத் தென்பாக இருப்பது போலத் தெரிந்தது. நம்பிக்கைகள் உடைந்துபோன தருணத்தில் அதுவே அவர்கள் உயிர்வாழ வழிகாட்டுவதாயும் இருந்தது. எனவே மறுநாள் காலையில் மீண்டும் எதிர்பார்ப்போடு அவள் அரிசி ஆலை நோக்கி நடந்தாள். அரிசி ஆலைக்கு அருகே சென்றபோது அவளது எண்ணத்தில் இடி விழுந்தது போல அங்கே கண்ட காட்சி இருந்தது. எரி குண்டுகள் பல அங்கே வந்து விழுந்து வெடித்ததில் அந்த நெல் குத்தும் ஆலையும் அதன் பின்பக்கத்தில் குவிக்கப்பட்டிருந்த உமி மேடும் சாம்பலாய்ப் போயிருந்தன. சில நாட்களாவது உயிர் வாழலாம் என்ற அவளது கடைசி நம்பிக்கையும் கண்முன்னால் சாம்பலாகிப் போயிருந்தது.

குழந்தைகள் பசியால் மீண்டும் வாடப்போகிறதே என்ற கவலையில் ஏமாற்றத்தோடு தங்கி இருந்த இடம் நோக்கி வேகமாகத் திரும்பியவளுக்கு இன்னும் அதிர்ச்சி காத்திருந்துது. இவள் தங்கியிருந்த பகுதியில் இருந்து வந்த ஒப்பாரி ஓசை தூரத்தில் வரும்போதே இவள் செவிகளைத் தொட்டு உறைய வைப்பதாய் இருந்தது. என்னவோ ஏதோ என்ற பதட்டத்தோடு ஒட்டமும் நடையுமாய் வந்தாள். இரத்தம் உறைந்த அவளது குழந்தைகளின் ஆடைகள்தான் அங்காங்கே சிதறிக் கிடந்தன. சிதறல்களைப் பார்த்த வினாடியே அதைத் தாங்க முடியாத அதிர்ச்சியில் அவள் அப்படியே உணர்வற்று விழுந்து போனாள்.

குழந்தைகளுக்காக உணவு தேடி அலையும் ஒரு அபலைத்தாயின் அலைச்சலைக்கூடப் பொறுக்க முடியாத ஆண்டவன் அவளுக்குக் கருணை செய்ய நினைத்திருக்கலாம். அதனால்தான் அவளைக் கேட்காமலே அவளது குழந்தைகளைத் தன்னிடம் தத்து எடுத்துக் கொண்டிருக்கலாம். விதியே விதியே என்செய்தாய் என்று விதிமீது பழிபோட்டு எல்லோரும் கண்மூடி மௌனம் காக்க,

அவளைப்போல பல பெண்கள் அந்த மண்ணில் சிறைப்பிடிக்கப்பட்டு முகாமில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட, ஆடை களையும் துச்சாதன மிருகங்களுக்கு மத்தியில் துணையற்ற அவளும் தனிமரமாய்... வலியும் வேதனையும் சுமந்த கண்கள் குளமாக வாழ்வா, சாவா என்ற போராட்டத்தில் எதையுமே வெளியே சொல்ல முடியாத ஊமைகளாய்... துப்பாக்கி ரவைகளுக்கு இரைகளாய், முடிவு தெரியாத பயணத்தில் தொலைந்து போனவர்களாய், இன்னும் எவ்வளவு காலம்?



# மீண்டும் வருமா அந்தப் பொற்காலம்

**கமிலினி கதிர் (சுவிற்சர்லாந்து.)**

வெயில் கடுமையாக இருந்தது.சூரியனுக்கு என்ன கோபமோ சுட்டெரித்துக் கொண்டிருந்தான். குடைக்குள்ளால் சூடு சுள்ளென்று சுட்டுக்கொண்டிருந்தது.இன்னும் சுகாசினி நடக்க வேண்டிய தூரம் நிறையவே இருந்தது.கால்கள் நடைபோட மனம் கடந்தகாலத்தை நோக்கி ஓடியது. இந்த வீதி எவ்வளவு கலகலப்பாக இருந்தது ஒரு காலத்தில்.அங்குமிங்குமாக வாகனத்தில் போராளித் தம்பிகளும், தங்கைகளும் ஓடிய வண்ணமிருக்க மக்கள் எந்தக் கவலையுமில்லாமல்

தங்கள் அன்றாட வேலைகளில் கவனமாயிருந்தார்கள். அவர்களுக்காக கவலைப்பட்டு செய்யவேண்டியதுகளைச் செய்யத்தான் தலைவர், அண்ணாமார்கள். அக்காமார்கள், தம்பிமார்கள் என்று பலர் இருந்தனரே. இயற்கை எழில் நிறைந்த வன்னிமண்.வயற்காணிகளும், விவசாயத் தோட்டங்களும்,மாமரங்கள்,பலாமரங்களும்,புளிய மரங்களும்.ஏன் மரங்கள், தோட்டங்கள் மட்டுமா செழிப்பாக இருந்தன.மக்கள் வாழ்வும் செழிப்பாக இருந்ததே.இன்று குண்டுமழைகளால் குருதிச் சேற்றை அப்பிக் கொண்டு தம் சோபை இழந்து குடிகள் அழிந்த பிரதேசமாய். பெருமூச்சு விட்டாள் சுகாசினி.எம்மைக் காத்து நின்ற காவல் தெய்வங்களை காவு கொண்ட நந்திக்கடல் இப்போ எதுவும் அறியாதது போல் அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது.காப்பாற்றுங்கள் என்று கதறிய எத்தனை குரல்களை கடத்திக்கொண்டு வீசிய காற்றுக்கூட இன்று அமைதியாக வீசுகிறது. முட்கம்பிவேலிக்குள் முடங்கிப்போன மக்களும்,காடையரின் வெறி ஆட்டங்களுக்குள் சிக்கி சின்னாபின்னமான பூவைகளும்.எல்லாவற்றையும் துடைத்துப்போட்டு வாழ்ந்து?கொண்டு தான் இருக்கிறார்கள்.வருங்காலச் சந்ததியினர் இதைச் சுமந்து விடிவு காண்பார்களா அன்றேல் சுமந்தவர்கள் மறைய அடுத்த தலைமுறையும் மறந்து வாழப்போகிறார்களா தெரியவில்லை.

ஆயிரத்து தொளாயிரத்து எண்பதுகளில் ஆமிக்காரர் ஷெல் அடித்தால் மட்டுமே பதற்றத்துடன் மக்கள் ஓடுவார்கள். பங்கரை நாடுவார்கள்.ஒரு சில மணிநேரத்தில் எல்லாம் வழமைக்கு வந்து விடும். இராமர் ஆண்ட அயோத்தி போல் கள்ளர் பயமின்றி இரவில் கூட பெண்கள் நடமாடிய காலமது. பெண்களுக்கு பாதுகாப்பைக் கொடுத்ததை எப்படி மறக்க முடியும்?தங்க நகைகளுடன் கூட எந்தப் பயமுமில்லாமல் பெண்களும். காமுகர் தொந்தரவு இல்லாமல் இளவயதுப் பெண்களும் பாதுகாப்பாக உலவித்திரிந்ததை மறக்க முடியுமா?அந்தக் காவலர்கள் இல்லாமல் நாம் நாறித்தான் போய்விட்டோம்.எத்தனைபேர் மண்ணுக்குள் புதைந்து விட்டார்கள்.எரிந்து சாம்பலாய் போனவர்களும் மண்ணில் புதையுண்டு போனவர்களும். எல்லாம் காலத்தின் கோலம்.அப்போது அவர்களின் அருமை தெரியாது இப்போது அவர்களுக்காய் எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்.சுகாசினியின் நெஞ்சு விம்மித் தணிந்தது.

ஒரு முறை குழந்தைக்கு ஏற்பட்ட காய்ச்சல் விடாமல் காய்ந்தபோது விமானத்தாக்குதல் கடுமையாக நடந்தது.வைத்தியரிடமும் கொண்டுபோக முடியாமல் தான் தவித்த நேரத்தில் ஒரு ரக்ரறைக் கொண்டுவந்து 'ஏறுங்கள் அக்கா.நான் கூட்டிப் போறன்'என்று முகம் தெரியாத தம்பி கூட்டிப்போய் வைத்தியம் பார்த்ததை மறக்க முடியுமா? காய்ச்சல் கூடி இரண்டுமுறை வலிப்பு வந்து கையையும் காலையும் இழுத்துக் குழந்தை பட்ட அவஸ்தை.'நல்லகாலம். இன்னும் கொஞ்சநேரம் வராமல் இருந்தருந்தால் நீங்கள் குழந்தையை உயிரோடு பார்த்திருக்க மாட்டீங்க.'வைத்தியர் சொன்னபோது அந்தத் தம்பியைக் கையெடுத்துக் கும்பிட துடித்துப்போனாள்.'கையை எடுங்க அக்கா.குழந்தை சுகமானது போதும்' கூறியவனைப் பார்த்தபோது கருணையே உருவானவர்களாக எப்படி இப்படி ஒரு சந்ததியை எங்கள் தலைவரால் உருவாக்க முடிந்தது?. தன்னைப் போலவே தன்னலமற்ற வீரர்களை உருவாக்க முடிந்த அவரைப் பற்றி சுகாசினி பெருமிதத்துடன் நினைக்காத நாளில்லை.குழந்தை காய்ச்சலில் துடிதுடித்தபோது எண்பத்தியேழாம் ஆண்டுஅமைதிப்படையின் ஆக்கிரமிப்பில் கட்டுண்டு இருந்தகாலம் நினைவுக்கு வந்து நெஞ்சை அடைத்தது. ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த நேரம்.இரவு அப்பா நெஞ்சுவலியால் துடிதுடித்த்போது படையினரிடம் அனுமதி வாங்குவதற்காய் பத்துவயதே நிரம்பிய தம்பி தனித்துப் போனதும் இந்திய அமைதிப்படையால் சுட்டு வீழ்த்தப்பட்டு இறந்ததும் நினைவில் வந்து நடுங்க வைத்தது. நெடுநேரமாகியும் காணாமல் அவனைத்தேடிச்சென்ற அம்மாவுக்கு வெள்ளைக்கொடியுடன் வராததால் தங்களைப் பாதுகாப்பதற்காய் சுட்டுவிட்டதாகச் சொன்னதை தாங்கமுடியாது ஓடி வந்து அம்மா சொன்னதும் அப்பா அந்தக்கணமே உயிர் விட்டதும் எண்ணிக் கலங்கிய வேளையில் கைகொடுத்த அந்தத் தம்பியை வாழ்நாள் முழுக்க சுகாசினியால் மறக்க முடியுமா?எல்லாமே இன்று ஒன்றுமே இல்லாமல் போய் விட்டதே. காற்றோடு கற்பூரமாய் கரைந்தவர்களோடு அந்தப் பண்புகளும் கரைந்து போய்விட்டதே. சுகாசினியால் நீண்ட பெருமூச்சுதான் விடமுடிந்தது. இப்போது எம் மக்களை நினைக்க வேதனைதான் மிஞ்சியது.

விரையும் கால்களுடன் திரும்பித்திரும்பி வீதியைப் பார்த்தபடி நடந்தாள்.கள்ளர்கள்,காமுகரோ வழியில் வந்துவிடுவார்களோ என்று நெஞ்சு திக்திக்கென்று அடித்தது.'பகலில் போகவே இவ்வளவு பயப்பட வேண்டியிருக்கிறதே'மனம் இன்றில்லாதவர்களை நினைத்து ஏங்கித் தவித்தது. கட்டுப்பாடின்றி சுகாசினியின் மனம் அவர்களைப பற்றியே மீண்டும் மீண்டும் எண்ணத்தலைப்பட்டது. சுகாசினியின் தங்கை கொழும்பில்தான் வாழ்ந்து கொண்டிருந்தா. அம்மா இந்தப் போருக்குள் இருந்து கஷ்டப்படவேண்டாமென்று தன்னிடம் அம்மாவை அனுப்பச் சொல்லிக்கொண்டேயிருந்தா.அப்போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த சுகாசினியும தன் அண்ணாவுடன் அம்மாவை அனுப்பினா.அம்மாவும் சுகாசினிக்கு தந்த நகைகளைவிட மிச்சம் இருந்த தன் வைரத்தோடு, பதினைந்து பவுன் தாலிக்கொடி, வைர மூக்குத்தி,இரண்டு ஜோடி காப்பு என்று எல்லாவற்றையும் தங்கைக்கு கொடுப்பதற்காக தன்னுடைய உள் பாவாடையில் ஒரு பை தைத்து அதற்குள் வைத்து எடுத்துச் சென்றார். அப்போது தாண்டிக்குளம் வரை

படகில் வந்து பின் ஒரு பேருந்தில் கொழும்பு வரை பயணம் செய்ய வேண்டும்.அம்மாவுக்கு இவையெல்லாம் தெரியவில்லை.அதற்கு முன்பெல்லாம் ஒரே பேருந்தில் கொழும்பு போய் வந்திருக்கிறார்.படகில் போனபோது அவரது சேலையெல்லாம் நனைந்து போய்விட்டது. தங்கிநின்ற இடத்தில் உடையை மாற்றிவிட்டு நகை வைத்த பாவாடையையும் அந்தப் பேருந்துக்குள் வைத்துவிட்டார். அண்ணாவும் அதைக் கவனிக்கவில்லை. பின் வேறு பேருந்தில் ஏறிப் பயணப்பட்ட போதுதான் தாங்கள் வேறு பேருந்தில் ஏறியிருப்பது தெரிந்தது. அதை அண்ணாவுக்கு சொன்னபோது பேருந்து தொலைவுக்கு வந்து விட்டது. என்ன செய்வதென்று புரியாமல் 'கவலைப்படாதேங்கோ.அது தம்பிமாரின் பேருந்து. பொருள் கிடைக்கும்.முதல் நாங்க போயிட்டு உங்களை அங்கு விட்டிட்டு நான் திரும்பி வந்து பார்க்கிறன்' என்றிருக்கிறார். அம்மாவுக்கு கவலையாக இருந்தாலும் நியாயமாகச் சேர்த்த பொருள் வீண் போகாது என்ற நம்பிக்கையுடன் கொழும்பு போய் சேர்ந்தார்.

அன்றிரவே தங்கை அண்ணாவைத் திரும்பவும் தாண்டிக்குளம் அனுப்பி வைத்தாள்.அவ்வப்போது ஷெல்லடிகள்,விமானத் தாக்குதல் நடந்தாலும் அண்ணாவும் அம்மாவைப் பாதுகாப்பாகச் சேர்த்து விட்ட நிம்மதியுடன் திரும்பவும் தாண்டிக்குளம் போனார்.அவர்கள் பயணம் செய்த பேருந்து தமிழீழக் காவலர்களுக்கானது என்பதால் எந்தத் திருட்டும் நடக்காது என்பதில் தீவிரமாக இருந்தார்.அங்கு அந்தப் பேருந்து அடுத்தநாள் பயணத்திற்கு போவதற்காக நிறுத்தப்பட்டிருந்தது. சாரதியைப் போய்க் கேட்டபோது ஈர உடைகள் அங்கு ஒரு பக்கத்தில் போட்டிருப்பதாகச் சொன்னார். அண்ணாவும் போய்ப் பார்த்து அப்படியே நகைகளுடன் பாவாடை இருக்கவும் எடுத்து வந்தார்.பொருளாசை இல்லாத கடமை உணர்வுடன் கடமையாற்றிய அந்தக் கர்மவீரர்களெல்லாம் மண்ணோடு புதைய இப்போ வெறும் பதர்கள் மட்டும் மிஞ்சியிருக்கிறார்களே. சத்துமா உருண்டைகளைப் பைகளில் வைத்து நாள் முழுக்க அதையே உணவாக கொண்டு நஞ்சுக்குப்பியைக் கழுத்தில் கட்டிக்கொண்டு எல்லைகளில் காவல் புரிந்த எங்களுக்காய் வாழ்ந்த அவர்கள் எங்கே?ஊதியத்திற்காய் படைகளில் சேர்ந்தவர்கள் எங்கே?கட்டுப்பாட்டுடன் தம் இன்னுயிர்களைத் தியாகத்தீயில் ஆகுதியாக்கி மறைந்துபோன அவர்கள் குடும்பங்களையாவது காப்பாற்றுகிறோமா?அதுவுமில்லை.என்ன வாழ்க்கை வாழ்கிறோம்.


முள்ளிவாய்க்கால் அவலத்தில் கையில் பிஸ்கட்டுடன் முதுகில் சுட்டு இன்னுயிர் நீத்த பாலகன் பாலச்சந்திரன். சுகாசினிக்கு உடல் உதறும் அதை நினைக்கையில்.தம்பி சுடுபட்டு இறந்த அவலம் மனத்திரையில் ஓடும்.வேதனை நிகழ்வுகளை மறக்க வேணுமென்று எத்தனைதான் நினைத்தாலும் அதுமட்டும் முடியாமலே இருந்தது. மனநல ஆலோசகர்களிடம் எல்லாம் போய் வந்தும் அவற்றை மறக்க முடியாமல் சுகாசினியைப்போல் எத்தனையோபேர் இன்னும் அல்லாடிக்கொண்டு தானிருக்கிறார்கள்.கவலைகளை திரும்பத் திரும்ப நினைப்பது அவற்றை நீரூற்றி வளர்ப்பதாகும் என்று அவர்கள் எத்தனைதான் சொன்னாலும் மனம் அதையே செய்து வேதனைப்பட்டுக்கொண்டே இருந்தது.


இன்றுள்ளவர்களைப் பார்தது சுகாசினி வேதனைப்படுவாள். போதை வஸ்துக்கும்,குடிபோதைக்கும் அடிமையாகி மனைவி குழந்தைகளை உணவுக்கும்,உடைக்கும் அல்லாட விடும் ஆண்களைப் பார்த்து கோபப்படுவாள். இப்போது பெண்களும் குணம் கெட்டு பிள்ளைகளை உதாசீனப்படுத்துவதை வேதனையுடன் மட்டுமே அவளால் பார்க்க முடிந்தது.எல்லாம் எங்கள் தம்பிமார் இல்லாத்துதான் காரணம்தம்முடைய உயிரை துச்சமாக நினைத்து வாழ்ந்த தம்பிமார் எங்கே. ஓநாய்கள்போல் கொள்ளையடிக்க காத்திருக்கும் இன்றுள்ள பலரை ஒப்பிட்டு பார்க்கத் தான் முடியுமா?என்ன நினைத்தாலும் கடைசியில் அவர்களிடமே மனம் போய் நின்றது.நன்றி உணர்வோ,நாட்டுப்பற்றோ இல்லாதவர்களுக்காய் தம் இன்னுயிரை தியாகம் செய்துவிட்டார்களே. அடுத்த தலைமுறைக்கு இவர்களைப்பற்றி சொன்னால் நம்புவார்களோ என்னவோ.நாம் பயமின்றியிருக்க ஊர்களின் எல்லைகளில் சரியான உணவின்றி கண்விளித்துக் காத்திருந்த எத்தனை தம்பிகள்,தங்கைகள்? கல்யாணம் செய்து வாழ்கிற வயதில் கழுத்தில் நஞ்சுக்குப்பியைக் கட்டிக் கொண்டு மரணத்தை துச்சமாக வாழ்ந்த அவர்களைத் தொலைத்துவிட்டு தவிக்கிறோம்.தாய் மண்மேல் கொண்ட காதலால் தங்கள் இன்னுடலை மண்ணுக்கு வித்தாக்கிவிட்டு வீரமரணம் அடைந்துவிட்டார்கள். இன்று அவர்கள் குடும்பங்கள் படும் அவலங்கள் கொஞ்சமா?எமக்காய் உயிர்விட்டவர்களின் பிள்ளைகள் ஒருநேரச் சாப்பாட்டுக்காய் தங்கள் கல்விக்காய் கையேந்தி நிற்கிறார்கள்.மாவீரர் நாளன்று வெளிநாடுகளில் வாழும் எம்மவர் செலவழிக்கும் பணத்தில் இவர்கள் வயிறு நிரம்புகிறதா? ஈழப்போராளி,மாவீரர் என்ற பட்டமெல்லாம் ஒன்றுமேயில்லாமல் இழிவாகப் பார்க்கப்படுகிறதே.அவர்கள் கல்லறைகள் கூட இன்றில்லை. அழிக்கப்பட்டுவிட்டது.அடுத்தடுத்த சந்ததியினர் இதுகளையெல்லாம் அறியாது போகப்போகிறார்கள். இதை தன் மகனுக்கு சொன்னபோது 'அறிந்து என்ன ஆகப்போகிறது?எங்களால் எதுவும் செய்ய முடியுதா?இப்ப உலகம் முழுக்க ஒவ்வொரு இனம் ஒடுக்கப்பட்டுத்தான் வருகிறது.ஏதோ தமிழ் ஆட்களைப்பற்றி மட்டும் சொல்றீங்க.நாங்களும் போராட்டம் என்று தொடங்கி அழிகிறதா?போராடினவர்கள் நிலை இன்று எப்படிச் சீரழியுது.'' என்கிறான்.மனம் துடிக்கிறதே.எம்நாட்டில் தமிழர் நிலை என்றைக்குமே இப்படியே இருக்கப் போகிறதா?சேர வேண்டிய இடத்திற்கு வந்து விட்டாள். மனம் எண்ணங்களிலிருந்து விடுபட்டு தன் கடமைக்காய் விளித்துக் கொண்டது.

அம்பலவன்புவனேந்திரன்..( யேர்மனி)

## ஜுவாலை நதி

சொல்லுக்குள் அடங்கிடாத சோகங்களைச் சொரிந்தே
சுட்டெரிக்கிறதின்னும் சுடுதணலாய் செஞ்சையெலாம்
கொல்லுதல் ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டபடை
கூடிநின்ற அப்பாவிகளில்மேல் குண்டுமழை பொழிந்ததே
பொல்லாத அரக்கர்களின் பிடியினில் சிக்குண்டவர்கள்
பூக்களும் பிஞ்சுகளுமாய்ப் பிடுங்கி யெறிப்பட்டனரே.
நெஞ்சினில் உரமேந்தி நீசர்களை வீழ்த்தியஎம்மவர்கள்
நேசித்த மண்ணில் நிலைகொண்டிருந்ததைப் பொறுக்காது
வெஞ்சமரில் தோற்றுப்போய் வெறிகொண்ட இராணுவம்
வேற்றுநாட்டுப் படைகொண்டுடெமை வீழ்த்தியது வெற்றியா
வஞ்சகமாய் வலைவிரித்து வாசல்களை அடைத்துவைத்து
வான்வெளிக் கணையெறிந்ததால் வற்றியதே தமிழருயிர்
நந்திக்கடலைச் சுற்றியே நாலாதிசையும் இடைமறித்தே
நரித்தனமாய் காய்நகர்த்திய நாடகத்தில் பலியானானோம்
தந்திரத்தினை அறியாநிலையில் தடுப்புமுகாமாய் நம்பிய
தாய்களின் முலைகளையறுத்த தகவல்களை யாரறிவாரோ
எந்திரத் துப்பாக்கிகளின்முன் இழுத்துவந்து கற்பழித்திட்ட
இறுதியுத்த காட்சிகளையெல்லாம் எவரறிவார் இவ்வுலகில்
முள்ளுக்கம்பி வேலிகளுக்குள் முடங்கிக் கிடந்தவர்மேல்
மூர்க்க இரசாயனக்குண்டால் முடித்தகதையைப் பாரறியுமா
பள்ளத்தைத்தோண்டி உயிரோடு பதறியுடல் துடிதுடிக்கப்
பாறாங்கற்களை மூடிய பரிதாபத்தினை இவ்வுலகுபார்த்ததா
வெள்ளையர் செய்திகளில் வேதனையாய் வடித்தவரிகளில்
விரிந்தவுலகின் மயானமென விபரித்தமையை எவர்படித்தார்
வட்டுவாகலை வழிமறித்து வாலிபர்களின் கண்ணைக்கட்டி
வஞ்சகமாய் நிர்வாணமாக்கியே வதைத்தகாட்சி மறையுமா
வெட்டரிவாள் கோடரிகளால் விறகுகளாய் வெட்டிச்சாய்த்த
வேதனைகளின் ஒருதுளியை இவ்வியனுலகு உணர்ந்திடுமா
கொட்டுகின்ற குருதியுடன் குடல்சரிந்ததாயின் முலையினிலே
குழந்தையொன்று பால்பருகிய கொடுமையினை யாரறிவார்
முள்ளிவாய்க்காலொடு சரித்திரம் முடிந்ததாய் எண்ணியே
மூடிய அறைகளுக்குள் முகவரிகள் தேடியேமறைந்திடலாம்
வெள்ளமாய்ப் பெருகிவிட்ட வேதனைகளின் அறுவடைகள்
வேர்களில் உரமேற்றிக்கொண்டு வெளியேறியே வந்திடுமே
தள்ளிப்போன காலத்தினால் தமிழர்களின் விடுதலைத் தீ
தணலாக மீண்டெழுந்து தரணியறியஅநீயைப் பொசுக்குமே.





# பாலைச் சவாரி

**கன்பரா யோகன்**

சூப்பர் மார்க்கட் ஒன்றும் வேறு பல கடைகளும் இருந்த அந்த தெருவின் முடிவில்தான் நரேனின் வீடு இருந்தது. வீட்டுக்கு முன்னால் தெருக்கரையில் வாகனங்களை நிறுத்தலாமா இல்லையா என்று சாருவுக்கு தெரியாததால் சிக்னலைப் போட்டு விட்டு காரின் எஞ்சினை நிறுத்தாமல் இறங்கி அறிவிப்புப் பலகையைத் தேடிப் போக வேண்டியிருந்தது.

வார விடுமுறைகளில் பார்க்கிங் இலவசம் என்று அறிந்து கொண்டபின் குளிரில் விறைத்த கை விரல்களை ஓவர் கோட்டின் பொக்கட்டுக்குள் நுழைத்துக் கொண்டு காரில் ஏறி என்ஜினை நிறுத்தினாள்.

வீட்டுக்கு முன்னால் வெண்ணிற டெய்சிகள் பூத்து நின்ற தோட்டம். இடப்பக்கமாக ட்ரைவ்வே ஓடுகிறது. எல்லா வீடுகளுக்கும் வெளித்தெரியும் அமைதியில் அந்த வீடும் ஆழ்ந்திருந்தது

இறங்கிப் போக தயக்கமாகவிருந்தது. ஒரு கணம் யோசித்தபின்

போட்டோ கிளப்பிலுள்ள மற்றவர்கள் வரும் வரை காரிலேயே இருக்கலாம் என்று சாருவுக்கு தோன்றியது. தலைக்கு மேலிருந்த கண்ணாடியில் முகப்பூச்சு அதிகமாகத் தெரிந்ததால் கைப்பையிலிருந்த வட்டப் பஞ்சினால் துடைத்து சரியாக்கினாள்.

காரின் பின் சீட்டில் ஆங்கிலப் பத்திரிகைகள் தாறுமாறாகக் கிடக்கின்றன. அவற்றில் அவளது நாவல் அறிமுகக் கட்டுரைகள் ஏதாவது இருக்கும்.

சாரு பத்திரிகைத் துறைக்குள் நுழைவதற்கு முன்னரே புகைப்படக்கலையை கற்றுக் கொண்டதால் அந்த ஆர்வம் தணிந்து விடாதிருக்க எண்ணியே இந்த பேஸ்புக் போட்டோ கிளப்பில் சேர்ந்திருந்தாள். நரேன் போன்ற பல அமைச்சூர் புகைப்படப் பிடிப்பாளர்கள், படித்துக் கொண்டிருந்த மாணவர்கள், தொழில் பார்க்கும் நடுத்தர வயதினர் என்று கிளப்பில் இணைந்திருந்த இவர்கள் எவரும் முகம் முகமாய் கண்டு பேசியதில்லை. அவ்வப்போது இணையக் கலந்துரையாடலில் கலந்து கொண்டது மட்டும்தான்.

புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு இடையே நல்ல ஒரு இணைப்பு இருந்தால் மட்டுமே இந்த தொழிலில் வாய்ப்புகளுக்கும் அறிமுகங்களுக்கும் வழி ஏற்படுகிறது. இதன் அவசியத்தை உணர்ந்து கொண்டவர்களே இந்த கிளப்பைத் தொடங்கிய முன்னோடிகள்.

சில மாதங்களுக்கு முன்னர் நரேன் எடுத்த ஒரு புகைப்படத்திற்கு தனது விருப்பை தெரிவித்து பின்னூட்டம் அனுப்பியதிலிருந்து சாருவுக்கு நரேனுடன் அறிமுகம் ஏற்பட்டது. நிலமெங்கும் ஊதா நிற மலர்கள் பரவியிருந்த ஒரு பாதையின் இரு புறமும் ஜாக்கரண்டா மரக் கூட்டத்தை கொண்ட அந்தப் புகைப்படத்திற்கு அவளிட்ட தலைப்புச் சொற்றொடர் மற்றவர்கள் எழுதியயவற்றை விட கவித்துவ கவர்ச்சி கொண்டிருந்தது. புகைப்படங்களுக்குப் பொருத்தமான தலைப்புச் சொற்களை புகைப்படக் குழுவிலுள்ளோர் பேஸ் புக்கில் பரிமாறிக் கொள்வது வழக்கம். அமைச்சூர் படப்பிடிப்பாளர்களுக்கு கலைஞர்களின் பின்னூட்டம் என்பது வளர் பயிரைத் தேடி வரும் நீரோட்டம் போன்றது.

'மரம் பூங்கொத்து. நிலம் கம்பளம். வரவேற்பு யாருக்கு?' என்ற சாருவின் வரிகளில் தெரிந்த நுட்பமான அவதானம் நரேனுக்கும் வியப்பாகதானிருந்தது. பலருக்கு பிடித்துமிருந்தது. பத்திரிகைத்துறைக்குள் நுழைவதற்கும் அவளின் எழுத்து ஆர்வமே இழுத்துச் சென்றது. சிறு வயதிலிருந்தே தொடரும் வாசிப்பதில் இருந்த ஆர்வம் அவளுக்கு என்றும் தணிந்ததில்லை. இதனாலேயே அவளுக்கு எழுத்தும் கவர்ச்சியைக் கொடுத்திருந்தது.

தொடர்ந்து காருக்குள் இருப்பது சலிப்பைத் தர தயக்கத்தை உதறிவிட்டு காரிலிருந்து இறங்கிய சாரு அந்த அபார்ட்மெண்ட் கதவுக்கு முன் வந்து நின்றாள். சாரு ஒரு கருப்பு நிற ஜம்பர் அணிந்திருந்தாள், தோள்வரை தொடும் தூரிகையின் மென் மயிர்க்கற்றைகள் போன்ற முடி. அது அடிக்கடி அவள் முகத்தில் வழிந்து கண்ணை மறைக்க அதை நிமிர்த்தும் தலையசைப்பு ஒரு ஒரு மின்னல் கணத்தில் நிகழ்வது அவளுக்கு இன்னும் கவர்ச்சியைக் கொடுக்கிறது.

கதவுக்கு கிட்ட காதை வைத்துக் சற்று நேரம் கேட்க உள்ளே வயலின் இசைக்கப்படுவது கேட்டது. சுவரிலிருந்த அழைப்பு மணியை அழுத்த கையெடுத்தபோதுதான் சொல்லி வைத்தாற்போல நால்வர்- மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் அவளை நோக்கி கதவடிக்கு வந்தார்கள். பேஸ்புக் போட்டோ கிளப்பிலிருந்த ஒஸ்டின், சசி, அன்ரன், தீபா ஆகியோர் ஏற்கனவே திட்டமிட்டபடி சனிக்கிழமை நாலு மணிக்கு வருவதாக சொல்லியிருந்தவர்கள். அவர்கள் ஒருவரையும் அவள் முன்னர் சந்தித்திருக்கவில்லை. எனவே கதவுக்கு வெளியில் நின்றே அறிமுகம் நிகழ்ந்தது.

அதற்கிடையில் அவர்களில் யாரோ அழைப்பு மணியை அழுத்தியிருக்க வேண்டும்.

கதவைத் திறந்த நரேனின் மனைவி ரேஷா அவர்களை உள்ளே வரச் சொல்கிறாள். உள்ளே வரவேற்பறையில் மியூசிக் ஸ்டான்டை முன்னால் வைத்துக் கொண்டு ஒரு சிறுமி வயலின் வாசித்துக் கொண்டிருந்தாள். உள்ளிருந்து சிறுவனொருவன் கையில் கதை புத்தகமொன்றுடன் ஓடி வந்து 'யார் இவர்கள் மம்மி' என்றான்

'டடியின் பிரெண்ட்ஸ். போட்டோ கிளப்பில் இருக்கிறார்களாம்.'

பையன் உள்ளே போக சிறுமி வயலினையும் ஸ்டாண்டையும் எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்து உள்ளே போகிறாள். வரவேற்பறையில் இரண்டு இடங்களில் சிறிய ஸ்டூல்களில் கண்ணாடிச் சாடிகளில் கிரிசாந்திமம் பூங்கொத்துகள் தென்பட்டன.

' ஐ ஆம் ரேஷா, பிளீஸ் சிற் டவுன்' என்று சொல்லிக் கொண்டே தானும் கவுச்சில் அமர்ந்த ரேஷா முழங்கால்களுக்கு கீழே ஸ்கேர்ட்டை இழுக்க கொண்டாள்.

அவள் கருப்பு நிற ஸ்கேர்ட்டும் வெள்ளை நிற பிளவுசம் ஊடுவித் தெரியும் அந்த பிளவுசுக்குள் ஒரு வெஸ்ட் கூட அணிந்திருந்தாள். அலையலையாக இறங்கிய தலை முடி தோளுக்கு கீழே இறங்கியிருந்தது. இவளுக்கா நான் பெருந்துயரைக் கொடுத்திருக்கிறேன்.?

வந்த ஐவரும் தாம் விரும்பிய கதிரைகளைத் தேடிப் பிடித்து உட்கார கால் நிமிடம் கழிந்தது. பிறகு

ஒவ்வொருவரும் பெயர்களைச் சொல்லி தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

தனது பத்திரிகைத்துறை வாழ்வில் இப்படியான பல அனுபவங்களைக் கடந்திருக்கிறாள் சாரு. ஆனால் இன்று தனது பதற்றத்தை கையாளுவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். தலைக்குள் ஓடிக்கொண்டிருந்த எண்ணங்கள் அவளை எதுவும் பேச விடாது தடுத்தது. ஒருபோதும் சந்திக்காத நரேனுடன் ஆரம்பித்த வெறும் பேஸ்புக் நட்புதான் இது. பக்கத்திலிருப்பவர்களுக்கும் அப்படியே. இதோ அவனின் மனைவி ரேஷா. அவளையும் சந்திப்பது இதுதான் முதல் தடவை. மற்ற நால்வருக்கும் அப்படியே. இது என்ன தொடர்பு? என்ன பிணைப்பு இது? இந்த நட்பின் ஆழம் என்ன?.

ஒரு வேளை நரேன் என்னைப் பற்றி சொல்லியிருப்பானா? இருக்காது, அப்படியிருந்தால் என்னை அறிமுகப்படுத்தியிருந்தபோது அவளுக்குத் தெரிந்திருக்கும். இந்த விஷயத்தில் பெண்கள் சாமர்த்தியசாலிகள்.

சில வினாடிகளின் மௌனத்தின் பின் ரேஷா ஆரம்பித்தாள்.

‘ஒரு வாரத்துடன் விடுமுறையை முடித்துக் கொண்டு வருவதாக சொன்ன நரேன் திடீரென்று விடுமுறையை நீடித்துக் கொண்டு ஃபிங்கி ரேசுக்குப் போனது கடைசி நேரத்தில் எடுத்த முடிவு. புகைப்படமும், காட்சிகளுமே அவன் தலைக்குள் எப்போதும் இருந்ததால் மற்ற எதைப் பற்றியும் அவன் கவலைப்பட்டதில்லை. அந்த ரேஸ் படப்பிடிப்பு புதிய அனுபவம் என்று அவன் நினைத்திருக்கக்கூடும்.’

அலிஸ் ஸ்பிரிங் பகுதியில் ஒரு வார புகைப்படச் சுற்றுப்பயணமாக சென்ற நரேன் உளுறு மலையையும், அன்சாக் குன்றிலிருந்து சூரிய அஸ்தமனத்தையும் புகைப்படங்களாக எடுத்துக் கொண்டிருந்தபோது, பாடசாலையில் ஆறு மணிவரை வின்டர் கொன்சர்டுக்காக ஒகஸ்ட்ரா பயிற்சிகளில் இருந்தாள் ரேஷா. அவளுக்கு நகரத்திலுள்ள தனியார் பெண்கள் கல்லூரியில் பியானோ டியூட்டர் வேலை

நரேன் ரேஷாவையும் தன்னுடன் அலிஸ் ஸ்பிரிங்கிற்கு வரும்படி கேட்டிருந்தான். முன்பு ஒரே ஒரு முறை மட்டும் அவள் புகைப்படச் சுற்றுப்பயணமொன்றில் சென்றிருந்த போதிலும் நீண்ட களைப்பு மிக்க பயணங்களை ரேஷா விரும்பியதில்லை. பாடசாலையில் வின்டர் கொன்செர்ட் கூட இருந்ததால் அவளால் எப்படியும் போயிருக்க முடியாது.

ரேஷா கவுச்சில் சாய்ந்து கொள்கிறாள். ரேஷாவின் முகத்தில் தெரிந்த நிதானம் சாருவுக்கு திகைப்பளித்தது. அவள் எப்படி இதை சமாளித்தாள்.? அவள் முகத்தில் தெரியும் அமைதி ஒரு பாவனையாக இருக்காது. காற்று மண்டலம் உடல் முழுவதிலும் எப்போதுமே அழுத்திக் கொண்டிருந்தாலும் நாம் எதனையும் உணராமலே இருக்கிறோமல்லவா? அப்படிதான் ரேஷாவும் மன அழுத்தம் எதனையும் உணராது தாங்கிக் கொண்டிருக்கிறாளா?.

நரேன் அந்தப் பயணத்தை நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்தது சாருவுக்கும் தெரியும். அலிஸ் ஸ்ப்ரிங் விமான நிலையத்தில் இறங்கி அங்கேயே ஒரு ஃ போர் வீல் டிரைவ் வண்டியொன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு மோட்டேலுக்குப் போய் தங்கியிருந்ததால் நினைத்த நேரத்தில் நரேனுக்கு கமராவைத் தூக்கிக் கொண்டு எங்கும் செல்ல முடிந்தது.

புகைப்படத்தில் பதிவாகும் காட்சிக்கும் வெறுங்கண்ணுக்குத் தெரியும் காட்சிக்குமிடையில் வித்தியாசங்களைப் பார்த்து வருவதே ஆர்வமூட்டியது. நன்கு பேசப்பட்டவைகளும், யாரும் அறியாதவைகளுமென்று எல்லா நிலக் காட்சிகளையும் தேடிப் போவதும், பிறகு அஸ்தமனத்தில் அடிவானம் செம்மஞ்சல் படர்ந்து, மாறிக் கருமை படர்ந்து மறையும் வரை நின்ற பின்னரே மோட்டலுக்குத் திரும்புவது என்றும் அந்தக் குறும்பயணத்தின் ஒவ்வொரு மணித்துளியையும் அவன் வீணாக்க விரும்பவில்லை.

அவுஸ்திரேலியாவின் இதயம் போல தேசத்தின் நடுவில் அந்த நிலம் சிவந்து கிடக்கிறது. செந்நிறத் தோற்றம் கொண்ட உளுரு என்ற அந்த ஒற்றைச் செம்பாறையை பகலில் பார்க்க செம்மண் தரையில் புதைத்து விட்ட பெருத்த செந்நிற யானையின் முதுகைப் போல தெரிகிறது. மைம்மல் பொழுதில் நீல வானத்தின் பின்னணியில் அது அடி வானத்தில் மறைந்து கொண்டிருக்கும் பிரம்மாண்டமான சூரியனின் மேற் கால்வாசித் துண்டு போலவும் தெரிகிறது. அந்த பாறையின் வயதும் அவுஸ்திரேலியாக் கண்டத்தின் வயதும் ஒன்றே என்று சொல் கிறார்கள். மனித சஞ்சாரமற்ற நிலம் முதலில் தோன்றியதற்கு சாட்சியாக அது நிற்கிறது. இரவில் வானம் முழுதும் நிறைந்து கிடக்கும் நட்சத்திரங்களையும், பரந்த வான் வெளியையும் பூமியின் தென்னரைக் கோளத்தில் இங்கிருந்து மட்டும்தான் இவ்வளவு துல்லியமாக காண முடியும்.

வெயில் வறுத்தெடுக்கும் சிவப்புத் தரையில் மழை வரும் பருவம் வந்தால் ஓடும் வெள்ளம், இல்லையென்றால் பறக்கும் புழுதி. வருடத்தில் அடிக்கடி காற்றுக் கிளப்பும் தூசிப் புயல் மரங்களையும், கார்களையும் செம்புழுதிப் படலத்தால் மூடுகிறது.

வரும் வழியில் அவுஸ்திரேலியாவை நெடுக்காக குறுக்கறுத்துச் செல்லும் நெடும் பயண ரயில் செல்லும் நகரத்தில் ஒரு சிறிய மோட்டேலில் தங்கியிருந்த வேளையில்தான் அந்த நகரத்தின் வரலாற்றை அறிந்து

கொண்டான். முன்னர் மத்திய அவுஸ்திரேலியாவில் கனிமங்களை தேடிச் சென்ற ஆய்வாளர்களுக்கு அந்த அனல் மணல் பகுதியில் பயணிக்க ஆப்கானியர்களின் ஒட்டகங்களே தோதாகவிருந்தன. ஒட்டகங்கள் கப்பலில் வந்திறங்கின. ஆப்கானிய ஒட்டகங்களை நினைவூட்டும் வகையிலே கான் அந்த பெயரையே ரயிலுக்கும் வைத்திருந்தார்கள்.

நரேனின் ஏழுநாள் பயணத்தின் ஆறாம் நாள் அன்று. அங்கிருந்து அலிஸ் ஸ்பிரிங் சென்றால் பயணம் முடிந்து விமானத்தில் வீடு திரும்ப வேண்டியதுதான். அப்போதுதான் சாரு அவனுக்கு குறுஞ் செய்தியொன்றை அனுப்பியிருந்தாள்..

'தேநீர் அருந்துகிறீர்களா?' என்று ரேஷா கேட்டதற்கு அனைவரும் வேண்டாமென்று தலையசைத்தனர்.

வெளியே கடுங்குளிர் காற்றடித்தபோதிலும் உள்ளே ரேஷாவின் வரவேற்பறையில் ஒரு வெப்பம் பரவியிருந்ததை சாரு உணர்ந்தாள். ஒரு வேளை அறையின் பலகை நிலத்தில் எங்கோ ஒளிந்திருக்கும் வென்ட் வழியாக சூடாக்கியொன்று வெப்பக்காற்றை வெளித்தள்ளிக் கொண்டிருக்கலாம். ரேஷா இப்போது வெளியே கண்ணாடி யன்னலினூடு பார்வையை செலுத்திக் கொண்டிருந்தாள்.

பிறகு மவுனத்தை கலைத்து

'நீங்கள் எல்லாரும் பேஸ் புக் போட்டோ கிளப்பில் இருப்பது கூட எனக்கு தெரியாது. நரேன் சொன்னதில்லை. நான் கூட அவன் பேஸ் புக் படங்களைப் பார்த்ததில்லை. நான் பாடசாலை, மியூசிக் என்று என் பாட்டுக்கு இருந்து விட்டேன்'. அதில் ஒரு ஆற்றாமை தொனித்தது.

நரேனின் உலகமும், ரேஷாவின் உலகமும் தனித்தனியே இருந்தன. ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் அவரவர் வேலைப் பளுவும், அதன் மன அழுத்தங்களும் இருவரையும் தனித் தனித் தீவுகள் ஆக்கி விடுகிறது. பிள்ளைகளுடன் செலவிடும் நேரமும் படுக்கையறையில் செலவிடும் நேரமும் தவிர்ந்த ஏனைய பொழுதுகளில் இருவரதும் ஆர்வங்களும் வெவ்வேறு திசையில் இருந்தன. நரேன் முழுநேரமாக வங்கியொன்றில் வேலை செய்து கொண்டு ஆர்வத்தினால் மட்டுமே இந்த புகைப்படக் கலைக்குள் வந்தவன்.

அங்கிருந்த நால்வர் மனதிலும் என்ன ஓடுகிறது என்று சாருவுக்குத் தெரியவில்லை. அவளுக்கே தன் மன ஓட்டம் பிடிபடவில்லை. இடையிடையே சிலர் ரேஷாவுடன் பேசினர். சாரு தனது உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். சாரு தனது கவனம் அவர்களின் உரையாடலிலிருந்து தொலைந்தது தெரியாதிருக்க அவ்வப்போது முகத்தில் பாவனைகள் செய்ய வேண்டியிருந்தது.

கடந்த சில வாரங்களாக அதிகாலையில் திடுக்கிட்டு விழித்து பிறகு நித்திரை குலைந்து எண்ணங்கள் தாறுமாறாக ஓடத் தொடங்கும். ஒவ்வொரு காலையும் அவநம்பிக்கையிலும், சலிப்பிலும் விடிகிறது. அதிகாலைப் பனிமூட்டத்தை விலக்கும் சூரியன் எழுவது போல சோர்ந்து விழும் அவள் மனதை தூக்கி நிமிர்த்த ஏதாவது எழுந்து வர வேண்டும். 'இந்த நாளும் இயற்கை மலர்வித்த மலரல்லவா? இதனை முகர்ந்து பார்க்காமலேயே கசக்கி எறிந்து விடப் போகிறேனா?' தான் தோன்றித்தனமான கேள்விகள் முளைக்கும்.. அடுத்த கணமே 'இதிலிருந்து விரைவில் விடுபட்டு விடுவாய். மரங்களையும், நீலவானத்தையும், மலை முகடுகளையும் நிமிர்ந்து பார்க்கும் நாட்கள் மீண்டும் வரும்' என்று மனக்குகையின் ஆழத்திலிருந்து ஒரு அசரீரி அவளுக்கு கேட்கும்.. இருட்டை ஊடுருவி வரும் தூரத்து ரயிலொன்றின் வெளிச்சம் போல பிறகு நம்பிக்கை தெரிய ஆரம்பிக்கும்.

அது நிகழ்ந்து கிட்டத்தட்ட நான்கு வாரங்களாகி விட்டன

சாரு அனுப்பிய குறுஞ் செய்தியில் அலிஸ் ஸ்பிரிங்கில் வருடாந்தம் நடக்கும் ஃபிங்கி ரேஸ் என்றழைக்கப்படும் டிரக்குகளின் பாலைச் சவாரிக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருப்பதாகவும், சாகசப் புகைப்படங்கள் எடுப்பதற்கு நல்ல வாய்ப்பு என்றும் எழுதியிருந்தாள். பனிச்சறுக்கு விளையாட்டை, அல்லது செங்குத்தாக மலைறுவதை அல்லது படகோட்டும் பந்தயங்களை சாகசப் புகைப்படங்களாக வெளியிடுவதற்கு பத்திரிகைகள் போட்டி போடும். அதுவும் இப்படியான பாலைவன வண்டிச் சவாரிகளுக்கும் பெரும் வரவேற்பு இருந்தது. சாருவுக்கு அதில் கொஞ்ச ஆதாயமும் இருந்தது. தனது பத்திரிகை செய்திகளுக்கு நரேனின் புகைப்படங்கள் கிடைக்குமே!

சாருவின் குறுஞ்செய்தியைப் பார்த்துவிட்டே நரேன் பயணத்தை இரண்டு நாட்கள் பின் போட்டு விமானச் சீட்டுகளை திரும்ப எடுத்தான். ஃபிங்கி ரேஸுக்குப் போவதையும் இரண்டு நாட்கள் பிந்தி வருவதையும் ரேஷாவுக்கு குறுஞ் செய்தியில் அனுப்பினான். ரேஷாவிடம் சொல்லாமலே எடுத்த முடிவுதான். ஆனால் அவன் மனதுக்குள் அடிக்கடி மெல்லிய அதிர்வு. செந்நிலத்தின் பின்னணியில் ஏற்கனவே எடுத்திருந்த புகைப்படக் காட்சிகளுக்கு சாரு சொற்களால் என்ன தலைப்பிடுவாள்?. வீடு திரும்பியதும் அவற்றுள் மிகச் சிறந்தவைகளையே அவளுக்கு அனுப்ப வேண்டும். முன்னர் அன்சாக் மலையிலிருந்து அவன் எடுத்த சூரிய அஸ்தமன புகைப்படத்தைப் பார்த்து விட்டு 'வர்ணங்களால் கவிதை எழுதுகிறது வானம் ' என்று சாரு அதற்குத் தலைப்பிட்டு திருப்பி அனுப்பியிருந்ததும் நரேனுக்குப் பிடித்திருந்தது. அவனுக்கு கிடைத்த பிரியமான ரசிகை

என்று அவளை நினைத்துக் கொள்வது நரேனுக்கு இரகசிய உவகை தந்திருக்க வேண்டும்.

ஃபிங்கி றேஸ் என்பது இருநூற்றி முப்பது கிலோமீற்றர் வரையில் அந்த செந்நிலப் பாதையில் டிரக்குகள் ஓடித் திரும்பி வர வேண்டிய சவாரி அது. மொத்தம் நானூற்று அறுபது கிலோ மீற்றர். தெருவில் ஓட அனுமதிக்காத இந்த வகையான ட்ரோபி அல்லது பக்கி டிரக்குகளின் சில்லுகளும் என்ஜின் வலுவும் எந்த கரடு முரடான பாதைக்கும், மற்றும் பாலை நிலங்களில் சிவப்பு மணல் கும்பிகள் கொண்ட பாதைச் சவாரிக்கும் ஏற்றதாக ஒவ்வொரு சில்லுக்கும் பெரிய சஸ்பென்சன் ஸ்ப்ரிங் பூட்டப்பட்டிருந்தன.

அந்த பாதை அவுஸ்திரேலியாவின் மத்திய பிரதேசத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருக்கும் சிம்சன் பாலை நிலத்துக்கு சமாந்தரமாகவே செல்கிறது பாதையின் பெரும் பகுதி வெறும் அவாந்தர வெளியாக இருக்கும். பாதையில் ஆங்காங்கே வாட்டில் மரங்கள், ஈமுயு பற்றைகள் அல்லது பாறைக் கற்களோ தென்படுகின்றன. பாதை ஃபிங்கி என்ற இடம் வரையும் செல்வதால் இந்த வண்டிகளின் சவாரிப் போட்டிக்கும் ஃபிங்கி றேஸ் என்றே நெடுங்காலமாக அழைக்கப்பட்டு வந்தது. தெற்கு அவுஸ்திரேலிய எல்லைக்கு சமீபமாயுள்ள ஃபிங்கி என்ற இந்த நகரத்தில் சனத்தொகை இருநூறு பேருக்கு கிட்டதான். பெரும்பாலும் அவுஸ்திரேலிய அபோரிஜினிகளாகிய அறன்ரே என்ற பூர்வீக குடிமக்களின் நிலம்.

அலிஸ் ஸ்ப்ரிங்கிலிருந்து நாற்பது கிலோ மீட்டர் தூரத்திலிருந்த அவன் படம் பிடிக்கச் சென்ற இடத்தையடைய நேரம் எட்டரையாகிவிட்டது. எட்டு மணிக்கு மணிக்கு அலிஸ் ஸ்பிரிங்கில் தொடங்கும் சவாரியில் வரும் வண்டிகள் இந்த இடத்திற்கு வர அரை மணி நேரம் பிடிக்கும். சவாரி தொடங்கும் இடத்திற்கு போன் பண்ணிக் கேட்டு விபரங்களை அறிந்து கொண்டே அங்கே சென்றிருந்தான்.

பல ரகமான டிரக்குகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் சவாரிகள் என்று இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் போட்டிகளைக் காண ஓரிரு நாட்களுக்கு முன்னரே வந்து சவாரிப் பாதையின் அருகேயே காம்ப் அடித்து தங்கியிருக்கின்ற பல குடும்பங்கள் வந்து பாதைக்கு அருகேயுள்ள பற்றைகளுக்குள் காம்ப் அடித்திருந்தனர்.

கமராவின் முக்காலி நிறுத்தியை பக்கத்திலிருந்த பற்றையொன்றின் அருகில் வைத்து விட்டு கமராவையும் எடுத்துக் கொண்டு மணல் திட்டி மேல் ஏறி நின்ற கூட்டத்துடன் சேர்ந்து கொள்ள ஏறிப் போனான்.

அங்கிருந்து பார்த்தால் ஒரு கிலோ மீற்றர் வரையிலான சவாரிப் பாதை ஓரளவுக்குத் தெரியும். செம்மணல் கும்பிகளும், பள்ளங்களும் கொண்ட இப்படியான பாதையையே பெரிதும் விரும்பும் படப் பிடிப்பாளர்கள் நகரத்திலிருந்து பெருந்தொலைவு தூரம் புழுதிப் பாதைகளினூடு வந்து காத்திருப்பதற்கு ஒரு காரணம் இருந்தது. மணல் கும்பிகளின் உச்சியை நோக்கிச் சீறிப் பாய்ந்து வரும் டிரக்குகள் வந்த வேகத்துடன் காற்றில் பறக்கும் சில கணங்களைப் புகைப்படத்தில் அல்லது வீடியோவில் பதிவாக்கும் கிறுக்குத்தனமான ஆர்வமே அது.

சிவப்புச் சேற்று வெள்ளத்தை வாரி விசிறுவது போல செம்மண்ணை இரு புறமும் வண்டிகள் விசிறிக் கொண்டு பக்கி டிரக்கொன்று தூரத்தில் வருவது தெரிகிறது. அவற்றின் உயர்ந்த சில்லுகளையும் அதன் மேலுள்ள சிறிய சாரதிப் பீடத்தையும் பார்த்தால் அவை வேகமாக ஓடும் சிலந்தியின் பரிமாணத்தை ஒத்திருந்தன.

ஒவ்வொரு டிரக்குகளுக்கும் இடையில் பெரிய நேர இடைவெளி இருந்தது. ஆரம்பிக்கும் இடத்திலே ஒவ்வொரு வண்டிக்கும் சில செக்கன்கள் இடைவெளி விட்டே புறப்பட அனுமதிக்கிறார்கள். அதை விட குறுகிய அந்த மண் பாதையில் ஒன்றையொன்று ஓவர்டேக் பண்ணுவது கூட சுலபமல்ல. முன் செல்லும் வண்டியின் புழுதிப் புகை வேறு பின்னால் வரும் வண்டியோட்டியின் பார்வையை மறைப்பதையும் தவிர்க்கமுடியாது.

ஒருகணம் ரேஷாவின் நினைவுவர அவளுக்கு போனில் பேசி இந்த போட்டியைப்பற்றி சொல்லவேண்டுமென்று தோன்றியது. வேண்டாம் இப்போது அவள் மியூசிக் கான்செர்ட்டில் ஒரே பிஸியாகவிருப்பாள். பிறகு சாருவுக்கு குறுஞ்செய்தி அனுப்ப எண்ணினான். வேண்டாம் படங்களை எடுத்து அனுப்பி பிரமிக்க வைக்கலாம்

மீண்டும் சனக்கூட்டம் ஆரவாரிக்கத் தொடங்குகிறது. இப்போது இன்னொரு நீல நிற ட்ரோபியொன்று அடுத்து வருகிறது.

மணல் திட்டின் உச்சி வரை வந்து புழுதியை பின்னே தள்ளி ஒரு ரொக்கட்டைப் போல பறக்கப் போகும் அதைப் படம் பிடிப்பதற்காக நரேன் மணல் திட்டிலிருந்து கீழிறங்கி கமரா முக்காலியை நோக்கி வருகிறான்.

ட்ரோபி மேலேறி வருகிறது. அது மண் கும்பியில் வேகமாக சீறிப் பாய்ந்து ஏறியதில் மேலே வானை நோக்கி ஓரிரு மீற்றர்கள் எம்பிப் பறந்து பின் மீண்டும் மணல் திட்டின் இறக்கத்தில் விழுந்தது

இப்படி மண்ணை உதைத்து விழுந்தால் அந்த அதிர்ச்சியில் ஸ்டீயரிங் வீல் டிரைவரின் கையை விட்டு உதறிச் சுழல்வதைத் தடுப்பது கடினம். அனுபசாலிகள் மட்டுமே ஸ்டியரிங்கை சாதுரியமாக பிடித்து பாதைக்கு கொண்டு வருவர். துரதிஷ்டவசமாக அன்று அது

விழுந்த கணத்திலேயே நரேன் நின்ற பக்கமாகத் திசை மாறித் திரும்புகிறது. கூட்டத்தில் பக்கத்தில் நின்ற சிலர் பாய்ந்து தப்புகின்றனர். ஆனால் கமராவில் குறியாகவிருந்த நரேன் இதை எதிர்பார்க்கவில்லை. ட்ரோபி கணப்பொழுதில் நேரே நரேனை நோக்கி வந்து அவனை புழுதிப் புகைக்குள் அமிழ்த்துகிறது. பிறகு அது அவனை மோதி விழுத்தியது. சிவந்த மணலில் கோடிழுத்தபடியே தனது நான்கு சில்லுகளுக்கிடையே பருந்து கோழிக் குஞ்சொன்றை கால்களுக்கிடையில் நிலத்தில் அரைய பிடித்திழுத்துச் செல்வது போல இழுத்துச் சென்றது. நரேனின் கையிலிருந்த கமரா செம்மணலுக்குள் புதைந்தது.

இவ்வளவும் நிகழ்ந்தது சில செக்கன்களுக்குள்தான்.

காயப்பட்ட சிலர் அவசர மருத்துவ ஹெலிஹொப்டர் மூலம் அலிஸ் ஸ்பிரிங் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். நரேனின் செம்மண் புழுதி போர்த்திய உடல் ஆம்புலன்சில் ஏற்றப்பட்டது.

அந்த நீல நிற ட்ரோபியை ஓட்டி வந்த சாரதி ஐம்பது வயது மதிக்கத் தக்க ஒரு பெண். அவளுக்கு கால் எலும்பு உடைந்தது தலையிலும் காயம் ஏற்படுத்தபோதிலும் அவள் உடனடி சிகிச்சையின் பின்னர் தப்பினாள்.

விபத்தின் முழு விபரங்களையும் சாரு பலமுறை பத்திரிகை செய்திகளிலும், தொலைக்காட்சியிலும் பார்த்து விட்டாள். அருகில் நின்றவர்களுடன் கடைசியாக நரேன் பேசியதைக் கூட கேட்டு பேட்டி எடுத்து செய்திக் குறிப்புகள் போட்டிருந்தார்கள்.

என்னுடைய தகவலில்தான் ஃபிங்கி ரேஸுக்கு வந்தது பற்றி நரேன் விபத்துக்கு முன்னர் அங்கிருந்த யாரிடமும் ஒரு சொல் கூட சொல்லவிலை. ஒருவேளை அவன் ரேஷாடம் சொல்லியிருப்பானா என்பதையும் தெரியாமலே இங்கே என்னால் எப்படித் துணிந்து வர முடிந்தது.? ரேஷாவை ஒருமுறை பார்த்து விட வேண்டுமென்ற உந்துதலினாலா? ரேஷாவுக்கு உண்மையில் ஆறுதல் கூறத் தகுதி கொண்டவளா நான்? ஒருவேளை நான் யார் என்று ரேஷா அறிந்திருந்தால் ரேஷா என்னை எப்படி எதிர் கொண்டிருப்பாள்?

சாருவின் சிந்தனை இழைகள் திரண்டு பம்பரக் கயிறு போல அவளை சுற்றிச் சுழற்றுகின்றன. நுனிக்காலில் நின்று சுழன்றாடும் பாலே நடனச் சிறுமியின் நிலையில் மனம் சுழலுகிறது. அது மயங்கி விழும் வரையில் அவளை சுழற்றுவது போன்ற உணர்வு வருகிறது.

நரேன் புகைப்படத்துறையில் ஒரு அமைச்சூர் என்றாலும் அவளுக்குத் தெரிந்த பல ப்ரோபெசனல் படப்பிடிப்பாளர்களின் தரத்துக்கு அவனது புகைப்படங்கள் இருந்தன.. சாருவின் ஒரு சொல், ஒரு வரி பாராட்டு தரும் உத்வேகம் நரேனுக்கு பல்லாயிரம் உற்சாகக் கரவொலிகளுக்குச் சமன். புகழும், பாராட்டுக்களும் தரும் ஒரு வகையான போதை அது. அதில் விழுந்தவர்களை அது சிறைப் பிடிக்கிறது. ஆணும் பெண்ணும் இதில் சேர்ந்து வீழ்ந்தால் அது கனவுச் சிறையாகிறது

அது அவர்களை அறியாமலே மெல்ல இறுகக் கட்டுகிறதா? யாருமறியாத மௌனச் சிறைக்குள் தள்ளி வெளித்தெரியாப் பிணைப்பை இடுகிறது. அதிலிருந்து உதறித் தள்ளி எழுந்து ஓடிவிடலாம்தான். அந்தச் சங்கிலியை அறுத்து விடலாம்தான். அதை யார் செய்வது என்ற இழுபறியிலேயே சுகமாக காலம் கடந்து விடுகிறது.

ஐந்து மணிக்கு மேல் ஆகியிருக்கும். இனி அங்கிருந்து புறப்பட வேண்டியதுதான். துயர் பகிர வீட்டுக்கு வந்து விடை பெற்றுச் செல்லும் முன்பு இப்படியான சந்தர்ப்பங்களில் நீண்ட மவுனம் மழைமேகம் கவிழ்ந்திருப்பதை போல மூடியிருக்கும். பிறகு ஒவ்வொருவர் மனதிலும் அடித்து ஓயும் எண்ணங்களின் பெரு மழை ஆறாகப் பெருக்கெடுத்து அவரவரை இழுத்துச் செல்லும்.

அதன் பிறகே திடீரென்று யாரோ ஒருவரின் எண்ண சிதறல்கள் மழைக்குப் பின் தாழ்வாரத்தில் சொட்டும் ஓரிரு துளிகளைப் போல சொற்களாக வந்து வீழும். அது மௌனத்தைக் கிழித்து கனத்த அதிர்வுகளைக் கொடுக்கும். அதை யார் இப்போது செய்யப் போகிறார்கள். நிச்சயமாக அவளால் முடியாது.

ஆனால் யாரும் எதிர்பாராதவாறு திடீரென்று மௌனத்திரையைக் கிழித்துக் கொண்டு


'நான் அன்றே அந்தப் பெண்ணை மன்னித்து விட்டேன்' என்றாள் ரேஷா.

ஒரு கணம் யாவரும் திடுக்கிட்டனர். சாரு தலையை நிலத்திலிருந்து உயர்த்தவேயில்லை. அவள் கழுத்தெல்லாம் வியர்க்கத் தொடங்கியது.

முதலில் நிகழ்ந்த உரையாடல்களுக்கிடையில் இதுதான் எனது தருணம், என்று தான் சொல்லவேண்டியதை சொல்லாமல் வாய்க்குப் பூட்டுப் போட்டதையும், வரும்போதே உருபோட்டுக் கொண்டு வந்ததையெல்லாம் சொல்லாமல் மறைத்ததையும் நினைத்து வெட்கி மனதுக்குள் மவுனமாக அழுதாள்.

சாருயின் கழுத்தினூடாக வியர்வை ஐம்பருக்கு உள்ளே அணிந்திருந்த பிளவுசின் உட்புறமாக செங்குத்தாக இறங்கி கீழ் முதுகுத்தண்டுக்கு போகிறது.

'முன் அனுபவம் போதாத அந்த டிரக் சாரதிப் பெண்ணை நான் மனதார மன்னித்து விட்டேன். அவள் அறிந்து செய்த தவறு இல்லையே. இந்த அவலமான நிகழ்விலிருந்து அவளும் விடுபட வேண்டும் ' என்றாள் ரேஷா.




# “அர்த்த சாஸ்திரம் ஒரு பார்வை”

**பிரேமா இரவிச்சந்திரன், சென்னை**

*சமீபத்தில் நான் சந்தித்த தேர்விற்கு தயாரித்த பாடங்களில், திருக்குறளுக்கு ஒப்பான அர்த்தசாஸ்திரம் என்ற சொற்களானது, மேலும் இந்த நூலைப் பற்றி அறிந்துகொள்ள தூண்டியது. 2500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த, விஷ்ணு குப்தர் மற்றும் கௌடில்யர் என்று அழைக்கப்பட்ட சாணக்கியர் எழுதிய நூல் அர்த்தசாஸ்திரம் என்பதை பெரும்பாலானோர் அறிந்திருக்கிறோம். வள்ளுவரது திருக்குறளையொத்த நீதிக் கருத்துக்களைக் கொண்டிருக்கும் இந்த நூலினை, பள்ளிப் பாட நூல்களிலோ பொது நூலகங்களிலோ கற்றதாக சொல்லும் மக்களை நாம் அதிகம் காண*

முடிவதில்லை. நமது இந்திய அரசியல் வரலாற்றை ஆராய்ந்தோமானால், விரிந்து பரந்த அரசாட்சியைக் கொண்டு, தனித்தனியாகத் துறைகளை அமைத்து, அதனை வழிநடத்திச் செல்ல மந்திரிகளை நியமித்து, மிகச்சிறப்பாக கட்டமைக்கப்பட்ட அரசியலமைப்பு என்பது சந்திரகுப்த மௌரியர் காலத்திலேயே ஆரம்பித்திருக்கிறது. அரசனுக்கான சிறந்த நிர்வாகத் திறமைகளையும், மக்களுக்கான நீதி நெறிகளையும் ஒரு சேரக் கொண்டிருக்கும், ராஜ நீதி சாஸ்திரமான அர்த்த சாஸ்திரத்தையும், அதனை செயல்படுத்த, சந்திரகுப்த மௌரிய மன்னனையும் ஒரு சேர வளர்த்தெடுத்த, ராஜகுருவான சாணக்கியரே இந்தியாவில் சிறந்ததொரு அரசியல் கட்டமைப்பில் நடந்த நல்லாட்சியின் ஆரம்ப காலமான, சந்திரகுப்த மௌரியரின் ஆட்சிக்கு முழு முதற் காரணமானவராக இருந்திருக்கிறார். இம்மன்னனது பெயரனான அசோக மன்னரது ஆட்சிக் காலமே, பிற்கால ஆட்சி நிர்வாகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. இந்தியாவின் முதல் பெண்பிரதமரான இந்திரா காந்தி அவர்கள், தனது மனோ திட்டத்திற்கு, பிரெஞ்சுப் படையை தலைமையேற்று நடத்தி, அன்னியரை வெற்றி கொண்ட வீரப்பெண்மணி, ஜோன் ஆப் ஆர்க் அவர்களையும், தனது சிறப்பான நிர்வாகத் திறமைக்கு மன்னன் அசோகரது ஆட்சியையும் முன்மாதிரியாகக் கொண்டதாக தனது நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியல், பொருளாதாரம், வேத சாஸ்திரம் என இன்னும் பலதுறைகளில் தேர்ச்சி பெற்ற சாணக்கியர் எழுதிய, உலகையே ஆள்வதற்கு சூத்திரம் அமைத்துக் கொடுத்த அர்த்தசாஸ்திரமானது, பல்துறைத் தகவல்களையும் நீதிகளையும் உள்ளடக்கி, இந்தியாவின் சிறந்ததொரு அரசியல் நிர்வாகக் கட்டமைப்பிற்கு வித்திட்ட முதல் நூலாக இருந்திருக்கிறது. இந்நூலிலுள்ள பொருளாதாரம் குறித்த தகவல்களும் இத்துறையில் தோன்றிய முதல் நூலாக இந்த நூலே இருந்திருக்கிறது என்பதையும் அறிவிக்கிறது. உலக வரலாற்றில் பதினெட்டாம் நூற்றாண்டில், “ஆடம் ஸ்மித்” எனும் ஆங்கிலேயப் பேராசிரியர் எழுதிய, “நாடுகளின் செல்வம்” என்ற நூலே உலகின் முதல் பொருளாதார நூலாகப் பதிவிலிருக்கிறது. நமது தொன்மையான தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருக்கும் அறிவியலை உலகறியச் செய்யாமல் எப்படி முதலிடத்தை தவற விட்டோமோ அதேபோல பழமையான அர்த்தசாஸ்திரத்தில் இடம்பெற்றிருக்கும் தகவல்களையும் உலகறியச் செய்யாமல் இருநூறு ஆண்டுகள் மட்டுமே முந்திய நூல்கள் முதலிடத்தைப் பெறுவதற்கு வழியை விட்டிருக்கிறோம்.

சமஸ்கிருத மொழியில் மக்களுக்கு அறிமுகமாகியிருந்த இந்த நூலானது, அம்மொழியினை அறியாத பலருக்கு சென்றடையாமல் இருந்திருக்கிறது. இந்த நூல் முதன்முதலில் கிரந்த லிபியில் எழுதப்பட்டு, அதன் பிறகு தேவநாகரி லிபிக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. கிரந்த எழுத்துகளைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில் இருந்த பொழுதும், அவற்றைப் படிக்கத் தெரிந்தவர்கள் மூலம் பல பழைய நூல்கள், சமஸ்கிருதத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறு கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்ட பல ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகள் தமிழ்நாட்டில் புதைந்திருக்கும் வரலாறாக மொழி பெயர்க்கப்படாமல் இன்றளவும் இருப்பதை, தஞ்சாவூரைச் சேர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை, சமீபத்தில் நடத்தியதொரு நிகழ்ச்சியின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. கிரந்த எழுத்துகளைக் கற்றுக் கொண்டு, நமது ஓலைச்சுவடிகளில் வெளிவராமல் இருக்கும் இன்னும் பல தகவல்களை மொழிபெயர்த்து கொடுக்க வேண்டிய கடமை நம் மக்களுக்கு இன்னும் இருக்கிறது.

அர்த்த சாஸ்திரத்தின் கிரந்த ஓலைப் பிரதி 1909 ஆம் வருடம் மைசூரில் கிடைத்திருக்கிறது. ஆங்கிலத்திலும் அதன் பிறகு தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்ட இந்த நூலானது, தமிழகத்தில் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவரான, தனது நிர்வாகத் திறமையால், வெற்றியடைந்த பட்டு வியாபாரியான, தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படியாக, “அர்த்த சாஸ்திர அறிவுரைகள்” எனும் நூலில் கொடுத்திருந்த தகவல்களாக சாணக்கியரைப் பற்றியும் அவரது நூலைப் பற்றியும் அறிமுகமாக குறைந்த அளவு பகிர்ந்து கொள்கிறேன். அர்த்த சாஸ்திரமே மூல நூலாக நம்மிடமிருந்தாலும், சாணக்கியர் தனக்கு முன்பு வாழ்ந்த அறிஞர்களான விஷாலாக்ஷன், பராசரன், ப்ரசேதகன் போன்றோரென இன்னும் பலரது கருத்துக்களையும், அக்காலங்களில் புழக்கத்திலிருந்த நடைமுறைகளையும், ராஜ கட்டளைகளையும் ஆராய்ச்சி செய்து, இந்த ராஜ நீதி நூலை எழுதினாரென்பது அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது.

இந்த நூலினைப் பற்றி அறிவதற்கு முன்பு பல கலைகளில் சிறந்த ஞானம் கொண்டவரான சாணக்கியரைப் பற்றி அறிய முற்பட்டோமானால், அவர் உலோக சாஸ்திரத்திலும் வல்லவராக இருந்திருக்கிறாரென்பது வியப்பைக் கொடுக்கிறது. முற்காலங்களில் உலோகங்களை வைத்திருந்தவர்களும், பொற்கொல்லர்களும் நாணயங்களை வார்த்து புழக்கத்தில் விட இயன்ற பட்சத்தில், தான் வார்த்த நாணயங்களுடன் தேசாந்திரம் சென்று கொண்டிருந்த பொழுது, இமயமலை அடிவாரத்தில் எதேச்சையாக ஒரு மாடு மேய்க்கும் சிறுவனை அவர் சந்திக்க நேர்ந்திருக்கிறது. அச்சிறுவன் தனது வயது ஒத்தவர்களுடன் விளையாடிய விளையாட்டில், தன்னையே ராஜாவாக எண்ணியவாறு, மற்றவர்களுக்கு மந்திரி, படைவீரர்களென பாத்திரங்களைக் கொடுத்து நடித்துக் கொண்டிருந்திருக்கிறார். இதனை வேடிக்கைப் பார்த்த சாணக்கியர், ராஜாவாக நடித்த பையனிடம் ராஜகுலத்திற்கே உரிய முப்பத்தி இரண்டு லட்சணங்களும்

இருப்பதைக் கண்டு, அந்த விளையாட்டில் தானும் கலந்து கொள்வதாக தன்னையும் இணைத்துக் கொண்டு, தான் கல்வி கேள்விகளில் சிறந்தவரென்று சொல்லி, தர்மம் செய்யும்படி கேட்டிருக்கிறார். அதற்கு அச்சிறுவன், "அதோ அங்கே மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்களை அழைத்துப் போங்கள்' என்று தயங்காமல் சொல்லியிருக்கிறார். "இவை உன்னுடைய மாடுகளா?' என்ற கேள்விக்கு பதிலாக, "நான் உனக்குத் தருவது மாடு மேய்க்கும் சிறுவனாக அல்ல! மன்னன் என்ற முறையில்!" என கம்பீரமாகக் கொடுத்த பதிலில், வியப்படைந்த சாணக்கியர், அச்சிறுவன் யாரென அவனிடமே விசாரிக்க, அவனது பூர்வீகம் ராஜவம்சத்துடன் தொடர்புடையது என்பதை அறிந்துகொண்டு, அவனை விலைக்கு வாங்கியிருந்த ஒரு வேடனிடம் ஆயிரம் பணத்தைக் கொடுத்துவிட்டு, சந்திரகுப்தன் எனும் பெயர்கொண்ட அச்சிறுவனை, தன்னுடன் தட்சசீலதிற்கு அழைத்துச் சென்றிருக்கிறார் சாணக்கியர். அங்கு ராஜகுமாரர்கள் படிக்கும் கல்விக் கூடத்தில் இணைத்து, எந்தவொரு எதிர்பார்ப்புமில்லாமல் ஏழு வருடங்கள் தனது பணத்தை செலவு செய்து, கல்வியை போதித்து, முதலில் சேனாதிபதியாக பதவி வகிக்கச் செய்திருக்கிறார். இந்தக் காலங்களில் சாணக்கியர் அறிவுத் தேடலில் இருந்தபடி, அர்த்தசாஸ்திரம் புத்தகத்தையும் எழுதிக் கொண்டிருந்திருக்கிறார்.

ராஜ வம்சத்தைச் சேர்ந்த மகாநந்தி என்பவரின் மனைவிகளில் ஒருவர் முரா. அவருக்கு பிறந்த மகனே சந்திரகுப்தர். மௌரிய வம்சமானது, முரா எனும் இவரது அன்னையின் பெயராலேயே அவ்வாறு அழைக்கப்படுகிறது என்ற ஒரு வரலாறும் சொல்லப்படுகிறது. சந்திரகுப்தர், மௌரிய மன்னனாக உருவாவதற்கு, சாணக்கியர் சந்தித்த அவமானமே காரணமாக இருந்திருக்கிறது. மகத நாட்டு ராஜபோஜன கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த சாணக்கியர், அங்கு மேஜையில் 10 தங்கத் தட்டுகள் வைத்திருப்பதைக் கண்டிருக்கிறார். அதில் ஒன்பது தட்டுகள் ராஜகுமார்களுக்கும், அவரது தந்தைக்குமென ஒதுக்கப்பட்டு, பத்தாவது தட்டு கல்வி கேள்விகளில் சிறந்தவருக்காக ஒதுக்கப் பட்டிருப்பதாகக் கூறி, சாணக்கியருக்கு வெள்ளித்தட்டு வரிசையில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனது தகுதிக்கேற்ப தான் தங்கத்தட்டின் முன்பே அமர்வேனென்று, அமர்ந்த அவரை அனுமதிக்காத நந்த சகோதரர்கள், முற்றிய விவாதத்திற்குப் பிறகு, சாணக்கியரின் குடுமியைப் பிடித்துத் தள்ளி வெளியேற்றுகிறார்கள். அப்போது அவிழ்ந்த குடுமியை அள்ளி முடியாமல், "நந்த வம்சத்தை ஒழித்துக் கட்டாமல் மீண்டும் முடிய மாட்டேன்" என்ற அவரது சொற்களே, "சாணக்கியரின் சபதம்" என்று அழைக்கப்படுகிறது. இதற்கடுத்து தனது திட்டங்களை நிறைவேற்றி நந்தர்களை அடியோடு வேரறுத்து, சந்திரகுப்தனை மகத நாட்டுக்கு மன்னனாக்கி, அவரது மகன் பிந்துசாரருக்கும் சில காலம் ராஜ குருவாக இருந்து, பிறகு எல்லாவற்றையும் துறந்து, ஞான நாட்டத்தில் மூழ்கி, தனது முதிய வயதில் இமயமலைச் சென்று அமரரானார் என்றவாறு இவரது வரலாறு இருக்கிறது.

அர்த்தசாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள தகவல்கள், எண்ணிலடங்காத பல துறைகளைக் கொண்டிருந்தாலும், குறைவாக நாம் அறியும் தகவல்களும் நம்மை வியப்பிலேயே ஆழ்த்துகிறது. கட்டுமானத் துறையை எடுத்துக் கொண்டால், தற்போது வீடு கட்டுவதற்காக வகுத்திருக்கும் விதிகளை, 2500 ஆண்டுகளுக்கு முன்பே நுணுக்கமாகச் சொல்லியிருக்கிறார். மனையின் எல்லைக்குள் வீட்டினையும், அண்டை வீட்டாருக்கு அசௌகரியம் ஏற்படாத வண்ணம் அதன் சாளரங்களையும், மழை பெய்யும் பொழுது திறந்தும் மற்ற நேரங்களில் மூடியும் வைக்கும்படி மழைநீர் சேமிக்கும் கால்வாய்களையும் அமைத்து, அடுத்த வீட்டு மதிலிலிருந்து இரண்டு அடி தள்ளி தனது வீட்டினை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விதிகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

தற்காலங்களில் பொன் நகைகளை வாங்குவதற்கு, அவை தரமானவை தானா என்பதை அறிந்து கொள்ள இயந்திரங்கள் உதவும் பொழுது, அக்காலங்களில் தங்கச்சாலை அதிகாரிகளுக்குத் தெரியாமல் பொற்கொல்லர்கள் ஏமாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறதென்பதால், தரமானத் தங்கத்தை சோதித்துப் பார்க்கும் முறையை இந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார். பிளந்து பார்க்கும் பொழுது, அறிந்து கொள்ளும் முறையாக, உடைந்த துண்டுகள் சிறியவையாகவும், பசையுடனும், மேற்புறமும் உட்புறமும் ஒரே நிறமாகவும், வழவழப்பாகவும், மென்மையாகவும், பளபளப்பாகவும் இருந்தால் அந்தத் தங்கம் சிறந்ததெனவும், சுட்டுப் பார்த்து சோதிக்கும் மற்றுமொரு முறையில், தங்கத்தை சுட்டால், மேற்புறமும் உட்புறமும் சமமாகவும் தாமரை தண்டில் உள்ள நாரின் நிறம் அல்லது குறிஞ்சி எனப்படும் குரண்டகப் பூவின் நிறத்தோடுமிருந்தால் அந்த தங்கம் உயர்ந்தது எனவும் வெளுப்பும் கருப்பும் கலந்தாற் போன்ற நிறத்திலோ நீல நிறத்திலோ இருந்தால் அந்த தங்கம் சுத்தமானதல்ல எனவும் குறிப்பிட்டிருக்கிறார். இவற்றின் மூலம் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான கடுமையான தண்டனைகளையும் விதித்திருக்கிறார்.

பட்டு நூலைப் பற்றிய தனது குறிப்பில் அவர் குறித்து வைத்திருப்பதெல்லாம் இக்காலத்துப் பட்டு நெசவாளர்கள் கூட அறிந்திருக்க வாய்ப்பிருக்கிறதா என்று தெரியவில்லை. பட்டுப் புழுக்கள் உண்ணும் இலைகள் சார்ந்த மரத்திற்கு ஏற்ப நூல்களின் நிறங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். நாக மர இலைகளை உண்டு வளர்ந்த பட்டுப் புழுக்களிலிருந்து எடுக்கப்படும் பட்டானது மஞ்சள் நிறமாகவும், எலுமிச்சை மர இலைகளை உண்ட பட்டுப் புழுக்களின் பட்டு நூலானது கோதுமை நிறத்திலும், மகிழ மரத்தின் பட்டு

வெண்மையாகவும், ஆல மரத்தினுடையது வெண்ணெய் போன்று சற்று பழுப்பு நிறத்திலுமிருக்குமென்று வகைப்படுத்துகிறார்.

மேலும் வங்க நாட்டுப் பட்டு வெண்மையாக மென்மையாகவும், புண்டரீக நாட்டுப் பட்டு மரகதம் போல பளபளப்பாகவும், அசாமைச் சேர்ந்த பட்டு சூரியனின் வண்ணத்திலுமிருக்குமென்று பட்டு நூல்களை மூன்று வகைப்படுத்துகிறார்.

பட்டுத் துணிகளை பட்டு நூலால் மட்டுமே நெய்வது, வேறு நூல்களையும் கலந்து நெய்வது, ஒற்றை இழை கொண்டு நெய்வது, இரட்டை இழைகளைக் கொண்டு நெய்வது, மூன்று மற்றும் நான்கு இழைகளைக் கொண்டு நெய்வது என்று நெய்யும் முறைகளையும் குறிப்பிட்டிருக்கிறார்.

பட்டு, பருத்தி, செடிகளின் நார், கம்பளி, சணல் முதலியவற்றைப் பயன்படுத்தி, நெசவு வேலைகளைச் செய்வதற்கு, விதவைகள், ஆதரவற்றப் பெண்கள், சிறைவாசம் விதிக்கப்பட்ட பெண்களின் தாய்மார்கள், மன்னரிடம் வேலைபார்க்கும் முதிய வயதுப் பெண்கள், வயோதிகத்தால் கோவிலுக்கு செல்வதை நிறுத்திவிட்ட தேவதாசிகள் ஆகியவர்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும், நூலின் தன்மையைப் பொருத்தும், செய்யும் வேகத்தைப் பொறுத்தும் கூலியை நிர்ணயிக்க வேண்டுமென்றும், நன்கு வேலை செய்பவர்களுக்கு பண்டிகைக் காலங்களில் வெகுமதி கொடுக்க வேண்டுமென்றெல்லாம் குறிப்பிட்டு, ஆதரவற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் விதியையும் இந்த நூலில் வகுத்திருக்கிறார்.

நூல்களை நூற்பதற்கான தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அங்கு வேலை செய்வதற்கு, தங்கள் சொந்த உழைப்பில் வாழ நினைக்கும் பெண்கள், ஊனமுற்றவர்கள், திருமணமாகாதவர்கள், வீட்டை விட்டு வெளியே வராத பெண்கள் போன்றோருக்கு முன்னுரிமை கொடுத்தும் இந்த நூலில் சுட்டிக்காட்டியிருக்கிறார். மேலும் சீன தேசத்து பட்டைப் பற்றியும், கணவன் வெளிநாட்டிலிருக்கும் பெண்களையும் குறிப்பிட்டிருக்கும் பொழுது, நம் மக்களின் கடல்கடந்த வாணிபத்தையும் இந்த நூல் அறிவிக்கிறது.

உணவுப் பொருளான உப்புக்கு வரி விதிப்பதும், அரசுக்கும் உப்புக்கும் தொடர்பு இருப்பதும், சாணக்கியர் காலத்திலேயே இருந்திருக்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட உப்பிலிருந்து, ஆறில் ஒரு பங்கினை மன்னனுக்குக் கொடுக்க வேண்டுமென்பது விதியாக இருந்திருக்கிறது. மன்னன் அனுமதியின்றி உப்பைத் தயாரித்து விற்பவனுக்கு விதிக்கப்பட்ட அபராதங்களும் மிகையாக இருந்திருக்கிறது. அந்தக் காலத்திலேயே சமையல் தவிர வேறு விஞ்ஞான முறைகளுக்காகவும் உப்பு தயாரிக்கப்பட்டது என்பதை, வேறு வகையான உப்புக்களின் மீது விதிக்கப்பட்ட மாறுபட்ட வரிகளின் குறிப்புகளின் மூலம் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு பல்வேறு துறைகள் சிறப்பாக நடைபெற விதிகளையும், அவற்றிலிருந்து பெறப்படும் வரிகளைக் கொண்டு அரசாட்சியை நிர்வகிக்கும் முறைகளையும் வகுத்துக் கொடுத்த சாணக்கியர், இதற்கெல்லாம் கட்டுப்படாமல் கள்ளத்தனம் செய்யும் மக்களுக்கு அளித்த தண்டனை விதிகளும் அபராதங்களும் கடுமையானவையாக இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வளமான நாடாக இருந்த மௌரிய அரசில் வெள்ளிக்காசுகளின் புழக்கங்கள் அதிகமாக இருந்ததால், அவைகளையே தண்டனைக்கு ஏற்றவாறான எண்ணிக்கையில் அபராதங்களாக விதித்திருக்கிறார். அரசனின் மனைவியின் மீது விருப்பம் கொண்டு உறவு வைத்துக் கொள்பவனை, கொதிக்கும் எண்ணெயிலிட்டுக் கொல்லும் மரண தண்டனையும், தனது மனைவியை விஷம் வைத்து கொன்ற ஆண் மகனை தண்ணீரில் மூழ்கடித்து கொல்லும் கடுமையான தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது. கணவனையும் பெற்றோரையும் மாமன் மாமியாரையும் குழந்தைகளையும் கொன்ற பெண்ணையும், வீட்டிற்கு நெருப்பு வைத்த பெண்ணையும், கன்னமிட்டு திருடிய பெண்ணையும் மாடுகளைக் கொண்டு மிதிக்க விட்டுக் கொல்ல வேண்டுமென்றும், பருவம் வராத தன் குலத்தைச் சேர்ந்த பெண்ணை மானபங்க படுத்தியவனுக்கு தண்டனையாக அவனது கைகளை வெட்டுவது, மேலும் அந்த பெண் இறப்பாளேயானால் மரண தண்டனையை விதிப்பது, போன்ற விதிகள், நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காகவும், மன்னரது சிறந்ததொரு ஆட்சிக்காகவும் அமைக்கப்பட்டு, தண்டனைகள் கொடுக்கப்பட்டதே, பிறழாத நீதியை அளித்து, நல்லதொரு நிர்வாகத்திற்கு அடிப்படையான காரணமாக இருந்திருக்கிறது.

குற்றங்களை தவிர்ப்பதற்கும், நேர்மை கொண்ட வாழ்விற்கும், உலகப் புகழ்பெற்ற திருக்குறளுக்கு ஒப்பான நீதிகளைக் கொண்டிருக்கும் அர்த்த சாஸ்திரத்தை அறியும் பொழுது, வள்ளுவரும் சாணக்கியரும் கற்றறிந்த மூலநூல்கள் ஒன்றாக இருந்திருக்க வேண்டுமென்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது.

**இதில் சொல்லப்பட்டிருக்கும் நீதிகளாக,**

1. உயர்ந்த மனிதர்களிடம் பழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறது அர்த்த சாஸ்திரம்.

இதனையே வள்ளுவர்,

“குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்

கொடுத்தும் கொளல் வேண்டும் நட்பு.” என்கிறார்.

2. உயர்ந்த மனிதன் தனக்குப் பிறர் செய்த சிறு உதவியையும் பெரிய உதவியாகக் கருதுவான் என்கிறது அர்த்த சாஸ்திரம்.

வள்ளுவர்,

“காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது.” என்று தனது இரண்டு அடிகளில் அளந்திருக்கிறார்..

3. பலவீனமானவனுடன் சேர்ந்து கொண்டு பலசாலியுடன் சண்டை போடக் கூடாது என்கிறது அர்த்தசாஸ்திரம்.

இதற்கு ஒத்த குறளாக,

“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியும் தூக்கிச் செயல்.” என்கிறது திருக்குறள்.

இவ்வாறு நீளும் பட்டியல் மிகப் பெரியதாக இருக்கிறது.

திருக்குறள் மட்டுமல்லாமல் பிற நீதி நூல்களிலுள்ள கருத்துகளையும் ஒத்திருக்கிறது அர்த்தசாஸ்திரம்.

ஔவை எழுதிய ஆத்திசூடியில் சொல்லப்பட்டிருக்கும்,

“ஒப்புரவு ஒழுகு” எனும் நீதி சாணக்கியரது நூலில், “ஒப்புரவே நன்னெறியின் தாய்” என்றிருக்கிறது.

ஆலகால விஷத்தையுண்ட நீலகண்டனின் புராணக் கதையில் சொல்லப்படுகின்ற அமுதம் திரிந்து நஞ்சாவதும், நஞ்சு அமுதமாவதும் ஒரு கணத்தில் நிகழக்கூடிய நிகழ்வாக இல்லாமல், அதற்கு முன்பே பல நாட்கள் உள்ளத்தில் கடையப்பட்டு பொங்கும் தருணத்தைக் குறிப்பதாக இருக்கும் பொழுது, அதனை அர்த்தசாஸ்திரம், “அமுதும் நஞ்சும் நாவில் இருக்கின்றன” என்கிறது.

இவ்வாறு நீதிகளை மட்டுமல்லாமல் பண்பாடுகளையும் இந்த நூல் வகுத்துக் கொடுத்திருக்கிறது.

தமிழர்களாகிய நாம் விலங்குகளிடமிருந்தும் கற்று, நமது பண்பாடுகளைக் கட்டமைத்திருக்கிறோமென்பது நாம் அறிந்தது. கடல் ஆமைகள் தனது வாழ்நாளில் பல ஆயிரம் மைல்கள் தொலைவு பயணம் மேற்கொண்டாலும், தான் முட்டை ஈனுவதற்கு ஏற்ற இடமாக தனது பிறந்த இடத்தையே தேர்ந்தேடுக்கும் பண்பினைக் கொண்டே, கருவுற்றப் பெண்ணை, பிள்ளை பேறிற்காக அவளது தாய் வீட்டிற்கு அனுப்பும் பழக்கத்தை நாம் கொண்டிருக்கிறோம். இந்த நூலில், ஐந்தறிவு கொண்ட பிராணிகளிடமிருந்து ஆறறிவு பெற்ற மனிதன் நிறையவே கற்றுக் கொள்ள முடியுமென்றும், எந்தெந்த பிராணிகளிடமிருந்து என்னென்ன கற்றுக்கொள்ள முடியுமென்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

1. மனிதன் ஆளுமையுடன் செயல்பட, எதிலும் முழுமனதுடன் ஈடுபடும் சிங்கத்தினிடமிருந்தும்,

2. அயர்ந்து போனாலும் சுமந்து செல்வது, மழையோ வெயிலோ கவலைப்படாதது, எப்போதும் திருப்தி அடைவது போன்ற மூன்று குணங்களை கழுதையிடமிருந்தும்,

3. அதிக பசியிலும் கொஞ்சமாக உணவு கிடைத்தாலே திருப்தி படுவது, ஆழ்ந்த தூக்கத்திலிருந்து உடனே எழுந்து எஜமானனிடம் காட்டும் விசுவாசம், போர்க்குணம் இவற்றை நாய்களிடமிருந்தும்,

4. ரகசியத்தில் ஒற்றுமை, துணிச்சல், அவ்வப்போது சேமித்து வைத்துக் கொள்வது, எப்போதும் துடிப்பாக இருப்பது, எவரையும் முழுமையாக நம்பாதது போன்ற ஐந்து குணங்களை காக்கைகளிடமிருந்தும் கற்றுக்கொள்ள இந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார். காக்கைகளிடம் ஒற்றுமையையும், புத்திசாலித்தனத்தையும் நாம் கண்டிருக்கிறோம். அதற்கும் அப்பாற்பட்ட இந்த குணங்களையும் கொண்டிருக்கும் காக்கைகளைப் பற்றி, இந்நூலிலிருந்து நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

5. சரியான நேரத்தில் எழுந்து, போரிட எப்போதும் தயாராக இருப்பது, கிடைக்கும் உணவை சமமாகப் பங்கிட்டுக் கொள்வது, சுய முடிவில் உணவு தேடுவது போன்ற குணங்களில் சேவல் போலவும்,

6. புலன்களை அடக்கி, கவனத்தையெல்லாம் ஒரு முனையில் குவித்து இலக்கை எட்டுவதில் கொக்கை போலவும் இருக்க வேண்டுமென இந்த பட்டியலும் நீளுகிறது.

7. கரையில்லாத சாஸ்திரங்களில் கற்றறிய வேண்டிய விஷயங்கள் கோடிக்கணக்கில் இருக்கும்பொழுது, மனிதனின் ஆயுட்காலம் மிகக்குறைவாக இருப்பதால், நேரத்தை வீணடிக்காமல், நீரில் பாலை பிரித்து உண்ணும் அன்னப் பறவை போல, வாழ்வில் ஏற்படும் பல தடைகளையும் தாண்டி, நல்ல விஷயங்களைக் கற்க வேண்டுமென்றும் இந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், அரசாட்சி என்பது சூழ்ச்சி மிகுந்ததென்பதால், எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந்தாலும், மந்திரிகளை கவனமாக நடத்த வேண்டுமென்றும், அவர்களைப் போலவே தனது மகன்களையும் மனைவிகளையும் நடத்த வேண்டுமென்றும் அறிவுரைகளைக் கூறுகிறார் சாணக்கியர். தகுதியில்லாத மகன் ஆட்சிக்கு வந்தால் ராஜ்யம் பாழாகும் என்பதையும் மன்னன் உணர்ந்திருக்க வேண்டுமென்பது ராஜகுருவின் எதிர்பார்ப்பாக இருந்திருக்கிறது. எனவே மன்னன் தன் பிள்ளைகளை அவர்கள் பிறந்தது முதல் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார்.

இதற்கு எடுத்துக்காட்டாக தாய் நண்டின் வயிற்றைக் கிழித்து கொண்டு வெளிப்படும் குட்டிகளை ஒப்புமை படுத்தி எச்சரிக்கிறார். புது மண், புதுப் பானை போன்றவற்றின் மீது எதை பூசுகிறார்களோ அதையே இழுத்துக் கொள்ளும் தன்மையைப் போல, இளம் வயது அரச குமாரர்களுக்கு எதை போதிக்கிறோமோ, அதையே அவர்கள் கருத்தில் கொள்வார்களென்பதால், அதர்மத்தையும் அனர்தத்தையும் தவிர்த்து விட்டு, தர்மத்தையும் அர்த்தத்தையும் உபதேசிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார்.


தேன் கலந்த பொரி என்று கூறி, மது கலந்தொரு பொரியினைக் கொடுத்து காசி மன்னனை அவனது மனைவி கொன்றது, மற்றும் காட்டு ராஜா வைரந்திரியனை அவனது ராணி விஷம் தடவிய சலங்கையால் கொன்றது, சௌரவ நாட்டு மன்னனை ராணி தனது ஒட்டியாண மணியினால் கொன்றது, விரேதனை அவனது மனைவி பின்னலில் மறைத்து வைத்திருந்த ஆயுதத்தால் கொன்றது போன்ற வரலாறுகளும் இருக்கும் பொழுது சாணக்கியர், மகாராணியது அறைக்கு மன்னன் செல்லாமல், மன்னரது மாளிகைக்கே மகாராணி செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டு, மன்னனை ராணியிடமிருந்தும் காக்கும் பொறுப்பினை, அரண்மனையிலுள்ள மந்திரிகள், ஒற்றர்கள், பிற பணியாளர்களைச் சேர்ந்ததென்று இந்த நூலில் உணர்த்தியிருக்கிறார். பாதுகாக்கும் பொறுப்பினைக் கொண்டிருக்கும் மந்திரிகள், ஒற்றர்கள் மீதும், எதிரி நாட்டுத் தூதுவர்கள் மீதும் கவனம் கொள்ளும் பட்டியலும் நீண்டு கொண்டிருக்கும் இவ்வரிசையிலேயே, பெண்கள் மீது ஆளுமை கொண்ட அறிவுரைகளை, ஆணின் பாதுகாப்பான வாழ்விற்காக குறிப்பிட்டிருக்கிறார்.

சம உரிமை பெண் சுதந்திரம் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் இவ்வுரைகள் ஏற்க முடியாததாக இருந்தாலும், இவற்றை தவிர்த்து விட்டு, “மிகைநாடி மிக்கக் கொளல்” எனும் பொருளுக்கேற்ப, வளமான வாழ்விற்கு விதிகள் அமைத்துக் கொடுத்து, கடந்த கால சரித்திரம், நிகழ்காலப் போக்கு போன்றவற்றை அறிந்து கொள்வதே, எதிர்காலத்தைக் கணிக்க உதவுமென்பதால் எக்காலத்திற்கும் பொருந்தும் வாழ்வியல் நூலாக விளங்கும் இந்த ராஜ சாஸ்திர நூலினைக் கற்றறிந்து, பொக்கிஷமென பாதுகாத்து, இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் கடத்த வேண்டியது நமது பொறுப்பாக இருக்கிறது. மானுடம் நீடித்து வாழ, ஆட்சியாளர்களும் மக்களும் அறிந்து கொள்ளவேண்டிய அர்த்தசாஸ்திரம் வாசிக்கப்பட வேண்டும்.

ஈழபாரதி

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

வேர் அறுந்த மண்
போதி மரத்திக்கடியில்
வேர் விடுகிறது
புத்தரின் ஆசை
ஆணிவேர் அறுந்த
மண்ணிலிருந்து
பனைமரங்கள்
இடம்பெயர்கின்றது
தோட்டாக்களைத் துளைத்த
துப்பாக்கிகள்
பாதுகாக்க படுகிறது
தமிழரின் காணிகளில்
தாய் நிலத்தில்
விளையாடும் சிறுவர்களுக்கு
பிசாசுகள் கொன்று திண்ற
எலும்புகள் கிடைக்கின்றன
முள்வேலி
முகாகளுக்குள்
சுகந்திரமாக திரிகின்றது
ஆட்டு மந்தைகள்
கச்சத்தீவு அந்தோணியாருக்கு
காட்சி தரும் புத்தர்
வடக்கில் காணமல்
போனவர்களைத் தேட
மவுனித்துவிடுகிறார்
யுத்தம் முடிந்த பிறகும்
இரத்தம் சிந்தாமல்
நடக்கிறது
போருக்கு பிந்திய போர்



# இறுதி ஊர்வலம்

**இரா. மதிராஜ்,**

“யோவ், துரையண்ணன் எப்போ வந்தீரு?

“

“தம்பி இந்த நேத்து நைட்டு வந்தேன் டா”

“நீ எப்படி இருக்க? “

“நல்லா இருக்கேன் அண்ணே”

“டே உன் மச்சான் எப்படி இருக்கான்?”

“என் மச்சானும் நீங்களும் தான் இருந்தால் ரொம்ப ஃப்ரெண்ட் “

“அவருக்கும் உமக்கும் நிறைய இருக்கு”

“ஏய் என்னல சொல்ற? “

“சும்மா எதாவது உளராதால “

“யோவ் எனக்கு எல்லாம் தெரியும்’

“ டேய் உனக்கு என்ன என்னடா தெரியும்?”

“தெரியும்”

“....”

“அதான் எனக்கு எல்லாம் தெரியும்ல”

“நீரு புதுக்கோட்டையி லே இருக்கும் போது எங்க மச்சானும், நீரும் சேர்ந்து எவ்வளவு சேட்டைப் பண்ணிடுங்கன்னு எனக்கு தெரியும்”

“கொஞ்சம் ஒன்னு, ரெண்டு சொல்லு லே “

“யாவ் உமக்கு தெரியாதா? “

“தம்பி சத்தியமா தெரியாது லே “

“ அத நான் சொல்ல மாட்டேனா அது ரகசியம் ளா “

“ஏதாவது ஒன்னு சொல்லுடா நீ பாட்டுக்கு ரகசியம் சொல்லிட்ட எப்படிடா அண்ணனுக்கு நைட் தூக்கம் வரும்”

“ நான் சொல்ல மாட்டேன்”

அன்னைக்கு ஊர் அசனம் ஆட்டுக்கறி வெட்டுற இடத்துக்கு எல்லாம் கூட்டிட்டு போய் காமிச்சான்,

இன்னொரு நாளில் துரையின் பெரியப்பா ஒருத்தர் இறந்துட்டார்ன்னு துரை ஊருக்கு வத்திருந்தான்,

அப்போ இந்த ரஜினி கொட்டடிக்றவங்களைப் பார்த்து...

“இறந்து போனது துரையண்ணனோட பெரியப்பா தெரியும்ல”

“அவர் என்ன பாட்டு சொல்றாரு அந்த பாட்டுக்கு தான் நீங்க கொப்டு அடிக்கணும்”

“அப்படி நீங்க அடிக்கவில்லை னா உங்களுக்கு வந்து காசு கையில கிடைக்காதுஅதையும் சொல்லிட்டேன்”

இப்ப

இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டு

எப்பவா தீங்கும் அதனால் நிவர்த்தி ஆகுமே(பாடல் ஒலிக்கிறது )

“யோவ் துரையண்ணன் நீரு எந்தப் பாட்டு சொல்லுவீறோ, அந்த பாட்டுக்கு பாட்டு கொட்டு அடிக்கணும் “

“ சரி ரஜினி உனக்கு என்ன பாட்டுக்கு அடிக்கணும்னு சொல்லு,அந்த பாட்டு அடிக்க சொல்லுறேன் “

“உமக்கு என்னய்யா தெரியாத பாட்டு?இருக்கு நீர் தானே வாலிபர் கூட்டம் எல்லாம் நடத்தினீர்”

“உனக்கு புடிச்ச பாட்டு சொல்லுல அதை உனக்கு அடிப்பாங்க”

“இன்னும் கல்லரைத் தோட்டம் போறதுக்குள்ள மூணு பாட்டு படிச்சிடலாம் தெரியுமா?”

“இப்படியே ஆர் சி கோவில் வழியா சத்திரம் வரைக்கும் போயி

திரும்பி ஆதித்தனார் மண்டபம் வந்து திரும்பவும் வடக்கு தெரு முழுவதும் நடந்து நம்ம கோயிலுக்கு வந்து,

திரும்ப தெற்கு தெரு போய் கல்லறைத் தோட்ட போறதுக்குள்ள மூணு பாட்டு செலக்ட் பண்ணுவியா சீக்கிரம் “

“ ஏதோ ஒரு பாட்டு கடுச்சிட்டு சும்மா நடந்து வருவார்கள்”

“ஏலே ரஜினி தம்பி அப்படி எல்லாம் நம்ம சண்டை போடக்கூடாதுடா”

“போங்க அண்ணன் உங்களுக்கு என்ன தெரியும், அப்போ குட்டர் கேக்க மாட்டாங்களா? “

“காசு அண்ணன் குடுக்கல சரியா நீ பாட்டுக்கு சும்மா எதையாவது அடிச்சு விடாதே”

“செத்து போனது உங்க பெரியப்பாவே “

“அதுக்கு என்னல இப்போ “

“ நீரு என்ன பாட்டு சொல்றீயோ அந்த பாட்டுக்கு தான் இவங்க கொட்டு அடிக்கணும்

அது அந்த பாட்டு அடிக்கவில்லைனா இவனுக்கு குவாட்டர் கிடையாது பில்லும் கிடையாது”

இதையெல்லாம் கொட்டுக் காரங்க காது கேக்கவே சொல்லறான் இந்த தம்பி ரஜினி

கொட்டு அடிக்கிற பேண்ட் செட் அண்ணன், பிபி யை வாயில ஊத்திட்டு எங்க இரண்டு பேரையும் பார்த்து ரொம்ப பம்புறார்

நான் என் மனசுக்குள்ள

“டேய் என்னடா கூலிக்கு பாட்டு படிக்கும் அங்களை வந்து டார்ச்சர் பண்ணிட்டு இருக்க”

இவன் தண்ணி கிண்ணியே போட்டானா அல்லது பாட்டு புடிச்சு தான் இவன் அந்த பாட்டு அடிக்கணும், அந்தப் பாட்டுக்குக் கொட்டு அடிக்கணும்னு கேக்குறானா, இருந்தாலும் கூலிக்கு பாட்டு படிக்கிறவங்க கிட்ட போய் நம்ம வந்து ஒரு துக்க வீட்டில் வைத்து இந்த பாட்டு போடுங்க அந்த பாட்டு போடுங்க அப்படின்னு சொல்லி அவங்கள டார்ச்சர் பண்ணிட்டு இல்லன்னா பணம் தர மாட்டேன்னு சொல்றது எல்லாம் ரொம்ப தப்புஎன்று நினைத்தவாறே...

இந்த தம்பி ரஜினி வேற சொன்னா கேக்கவே மாட்டேங்குறான்

எப்படியோ துக்க வீட்ல வச்சு நல்லா கொட்டுக்காரங்களை வேலை வாங்கி விட்டான்

அந்த தம்பி

எல்லா ஊர்லயும் இதே மாதிரி யாராவது ஒருத்தங்க எந்த பாட்டு கொட்டு அடிக்கணும் அப்படின்னு சொல்றதுக்கு கூடவே வருவாங்க நினைக்கிறேன் நம்ம தான் அந்த ஊர்ல ஒழுக்கமா இல்லாததுனால நமக்கு தான் ஒரு எழவும் தெரியாம போச்சு

இவன் தான் வந்து இந்த பாட்டுக்கு அடிங்க கொட்டு அடிங்க அந்த பாட்டுக்கு கூட்டணி சொல்லி டார்ச்சர் பண்றான்

அது ஏன் கொட்டுகாரங்க மட்டும் இவன்டையும் நம்மகிட்டையும் சண்டைக்கு வர மாட்டேங்குறாங்க அது பாட்டுல வாய மூடிட்டு சொல்றத கேட்டு எப்படி வேலை செய்றாங்க

சே,எனக்கு ஒன்னும் புரியல

ஒன்னு மட்டும் புரியுது என்ன இருந்தாலும் நாம சொன்ன ரேட்ட வந்து அவங்க எப்படியும் சேர்த்து ஏத்தி வாங்கி விடுவாங்கன்னு நினைக்கிறேன் அதனால

இவங்க எது சொன்னாலும் அவங்க காதுல வாங்க மாட்டாங்க வாயிலிருந்து பிபியை எடுக்க மாட்டேங்குறாங்க

பாட்டை நிப்பாட்டிட்டாலும் குழலை வாயிலிருந்து எடுக்க மாட்டேங்குறாங்க ஊத்திட்டு தான் இருக்கிறாங்க

அப்படியே பெரியப்பா நல்ல நடக்கலடக்கம் முடியுது துரை ஊர்ல இருந்து வெளியூர் போய்டான்

ஒரு ரெண்டு மாசம் மூணு மாசம் ஆயிருக்கும் அந்த அண்ணன் அண்ணன்னு பாசமா இருக்த அந்த தம்பி ரஜினி வந்து இறந்துட்டான்னு சென்னையில் வைத்து இறந்துட்டான்னு துரைக் கேள்விப்பட்டான்

துரைக்கு மனசேக் கேக்கல

எத்தனையோ நண்பர்கள் இருந்தாலும் இன்னைக்கு வரைக்கும் துரையிடம் ரொம்ப அண்ணா அண்ணான்னு பாசமா இருக்குற ஒன்னு, ரெண்டு பேர்ல அவனும் ஒருத்தன் என்பது முக்கியமான விஷயம்


இதுல இன்னொரு கொடுமை என்னன்னு சொன்னா துரையண்ணா உங்கள பத்தி ஒரு ரகசியம் எனக்கு தெரியும் அத சொல்றேன்னு சொல்லிக் கடைசி வரைக்கும் அவன் சொல்லவும் இல்லை அதை துரை தெரிஞ்சகவும் இல்லை அந்த ரகசியம் ரஜினினோட இறந்து போச்சு என்பது துரைக்கு ரொம்ப மனசு கஷ்டமா போச்சு,

ஆனாலும் நட்பும், பாசமும் ஏன் ரகசியமும் ஒரு நாளும் இறந்து போவாதுன்னு அந்த துரை நினைச்சிட்டு இருக்கான் இன்னும்,

ஜே.வஹாப்தீன்

## மழை எதிர்த்த படலம்

மேகங்கள் தரையிறங்கி
வாய்க்காலில் நடந்து வந்து
பயிர்களுக்குப் பாலூட்டும்
தாயென்று புகழ்பாடி
மாதம் மூன்று ஆகவில்லை.
நிலம் முழுதும்
ஈரம் விளைய
வியர்வை பொழியும் தந்தை
மழைமுகில்களைத் துதிபாடிய நாட்கள்
இன்னும் தூரம்போகவில்லை.
சேற்றுவயலை
பாராட்டிக் குளிரச்செய்ய
உரிய நேரத்துக்கு வந்து
சொற்பொழிவாற்றிய பிரதம அதிதிக்கு
வயல் காற்றில் நன்றியுரை.
விளைச்சல் பெருகிய வயல்கள்
சிரிக்கக் கூடாதா?
தாயே ஏன் இருண்டு முறைக்கிறாய்?
நெல்லாறு கலகலத்து
வீதியில் முழுதும் ஓடக்கூடாதா?
பிதாவே ஏன் கல்லெறிகின்றாய்?
பிரதம அதிதியே
பிந்தி வந்து ஏன்
வயல் விழாவைக் கெடுக்கிறாய்?
சிரித்து வரவேண்டிய
சிவந்த முகில்
கறுத்து வரும்போது..
ஆற்றை மூடும்
படங்குகள் பாவம்
இந்நேரமெல்லாம் கல்லெறி வாங்கும்
அண்ணாந்து பார்த்துப்பார்த்தே
கழுத்து முறிந்தான் உழவன்
இப்போது அடிபட்டு ஒடுவது
அவன் சிந்திய வியர்வை மணிகள்.



கண்ணன் விஸ்வகாந்தி

# செவுடிக்கடை

படித்த நேரத்தை விட
டீக்குடித்த நேரம் அதிகம்
கணக்கு வைத்துப் பரோட்டா
கையில் காசிருப்பின் பில்டர்
இல்லையெனில் கணேசன்
அம்மா கொடுக்கும் பத்தில்
பட்டினியால் புத்தகமாகும்
வாயால் வூடுகட்டும்
செல்வத்தைப் பிடிக்காதவர்
எவருமில்லை எங்களுடன்
'நேத்துதான் சேர்மன் பேசுனாரு
பெருசா ஓட்டல் கட்டுன்னாரு
நாந்தான் வேனான்னுட்டன்'
காலையிலேயே தள்ளாடும்
அவன் கால்கள்
கன்னத்தில் அறைந்ததால்
அவன் மனைவி
பெயர் மாறிச் செவுடியானாள்
காலையில் வயிற்றுக்கும்
இரவானால் உடலுக்கும் பசிதணித்தாள்
வண்டிகளுக்கு தினந்தோறும்
மழையடித்த ஒரு நாளில்
ஒண்டிய எங்களுக்கு
பாடமெடுத்தாள் என்றைக்கும்
'கடன வுடன வாங்கிப் படிக்க
அனுப்புன பெத்தவங்கள
என்னைக்கும் மறக்காம
படிப்பு மட்டும் பாருங்க'
வீங்கிய கன்னமும்
சிவந்த விழிகளும்
வலிகளை விழுங்கிய
புன்னகையுடன்
வலம் வருவாள்
நினைத்திருந்தால்
நொடிப்பொழுதில்
வடக்கில் வசதியாக
காலாட்டி அமர்ந்திருக்கலாம்
இருப்பினும் இன்றும் கூட
தேநீர்ப்பாத்திரம் தேய்த்துப்
பையனுக்கு பொங்கிப்போடுவதால்
தெய்வமாய் நின்றிட்டாள்
என்றுமவள் என்மனதில்.

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

# துளிப்பாக்கள்

வரிசையில் புளியமரங்கள்/
இரவில் ஓசையெழுப்பியபடி/
கிளைமாறும் கொக்குகள்/

முத்துக்களால் ஆபரணம்/
அழகு பார்க்கும்/
இலைகளுக்குப் இராப்பனி/

களிமண் சுவர்/
ஆடியசையும்/
நிலவொளியில் இலைநிழல்/

விளக்கில்லாத தெரு/
வரவே இல்லை/
விட்டில்கள்/

நகரும் சூரியன்/
உச்சத்துக்கு வரும்/
குளிர்பான விற்பனை/

பனைமர நிழல்/
மேற்கே சரிந்து காணப்படும்/
அந்திப் பொழுது/

குண்டின் பேரொலி/
அடங்கிப்போகிறது/
பயத்தில் ஊர்/

பெய்யும் மழை/
வரைந்து கொண்டிருக்கிறது/
கசியும் சுவரில் ஓவியம்/

எரியும் சுவாலை/
நெளிந்து அசையும்/
உள்ளே கருகும் சருகு/

கொட்டும் மழை
திடீரென ஏற்படும்
வெட்டும் மின்னல்

முதியவர் கைத்தடி/
நிமிர்ந்து நிற்கிறது/
கூன் உடம்பு/

புதிய விதை/
விளைநிலத்தில் முளைக்கும்/
விவசாயியின் வியர்வை/

இரவு நேரம்/
சாலையில் பூத்திருக்கும்/
மின்விளக்குக் கம்பங்கள்/

மழைக்காலம்/
ஓயாது பேசிக்கொண்டு/
தண்ணீருடன் தவளைகள்/

இரு சிறகுகள்/
வானில் மெல்ல விரியும்/
பறவையின் கனவு/

மெய்யன் நடராஜ்

# முனகுந் தேயிலைக் கூடை (இரட்டை மணிமாலை)

*கொட்டும் மழையில் குளிர்தாங்கிக் கண்களை*
*வெட்டும் இடிமின்னல் வேறுதாங்கி – ஒட்டுத்*
*துணியுடுத்தி தேயிலைத் தோட்டத்தில் நித்தம்*
*பணிசெய்தும் முன்னேறார் பார்.(1)*

*பார்ப்பதற் கென்றும் பரிதா முடனுளப் பைங்கிளிகள்*
*நீர்த்துளி தேக்கி நிறைத்த விழிகளின் நீள்துயரம்*
*சீர்மிகு ஆற்றில் சிதறி வழிகிற செம்புனலாய்*
*ஓர்த்தடை யின்றி உவகை யொடுதினம் ஓடிடுதே!(2)*

*ஓடிடும் வெள்ளம் உறங்கிடா தோடுதல்போல்*
*வாடிடும் மக்களின் வாட்டமும் – ஓடியே*
*போய்விடின் வாழ்க்கையில் பூக்காலம் பூண்டதை*
*வாய்விட்டுப் பாடுவர் வாழ்த்து.(3)*

*வாழ்த்து மழைதனில் வாழ்வை நனைத்திட வானமின்றி*
*வீழ்ந்து கிடப்பவர் வெற்றிக் கனவுகள் வேர்பிடிக்கச்*
*சூழ்ந்த வறுமையும் சுட்டுப் பொசுக்கிய சூததனால்*
*காழ்ப்பு படிந்தவர் காட்சி உயர்ந்திடக் காண்பதெங்கே!( )*
*★காழ்ப்பு – தழும்பு*

*எங்கே இவர்கள் எதிர்காலம் மாறிடின்*
*அங்கே தமக்கான ஆதாயம் – இங்கே*
*குறைந்திடு மென்றே குடத்துள் விளக்காய்*
*மறைப்பவர் நெஞ்சமோ மாசு.(5)*

*மாசுளங் கொண்ட மனிதரி னாலே மதியிழந்து*
*வீசிடுங் காற்றும் விலகியே செல்லும் விதிவசத்தால்*
*தேசியம் காக்கத் தினசரி கொய்யும் திரவியத்தால்*
*ஆசிய நாட்டின் அடிமைக லானார் அழுவதற்கே!(6)*

*அழுபவர் வாழ்வின் அடிப்படைத் தேவை*
*இழுபறி யானதை எண்ணி – எழுகவே*
*என்றோர் இதழ்களை இங்கே திறந்திவர்க்காய்*
*முன்சென்ற தாரோ முழங்கு.(7)*

*முழங்கிடும் சங்கொலி முன்பெழுந் தாய்மார் முனங்குகின்ற*
*குழந்தைகள் உண்பதற் குற்றவை செய்தே கொடுத்துவிட்டு*
*பழந்துணி யாகியப் பாவாடைக் காக்கப் படங்குகட்டி*
*கொழுந்தினைக் கொய்திடக் கூடையை தாங்கிக் குமுறுவரே!(8)*

*குமுறிடு மேழை கொடுமைகள் மாற்றார்*
*அமுக்கியே வாசிக்கும் ஆட்கள் - கமுக்கமாய்*
*ஏய்த்துக் களித்திட ஏமாளிக் கூட்டமாய்*
*வாய்த்ததென் றெண்ணிடு வார்!(9)*

*எண்ணுவ தெல்லாம் இயல்புட னோர்நாள் இறைசெயலால்*
*கண்ணெதிர் வந்தே கரஞ்சேரு மென்றக் கனவுடனே*
*உண்பதற் கில்லா துருகிடும் போதும் உறுதியுடன்*
*மண்தனில் வேர்வை மழைதனைச் சிந்தும் மலையகமே! (10)*

௸

*மலையக மக்கள் மனங்களில் நீங்கா*
*அலையெனத் துன்பம் அடிக்கும் – தலையினில்*
*என்றோ தவறாய் எழுதிய வாசகம்*
*ஒன்றிவரைச் சாய்த்திட்ட ஊறு (11)*

௸

*ஊறுகள் தாங்கி உழைப்பவர் வாழ்வில்*
*உயர்வுமின்றி*
*நூறுகள் கைக்குள் நுழைவதற் காயே நுணங்கியழும்*
*ஆறுகள் பாயும் அழகிய நாட்டின் அடிமையென*
*மாறுத லில்லா மடமைக ளாயே மடிபவரே (12)*

௸

*மடிந்தமுன் னோரின் மதியிழப் பாலே*
*விடியலை காணா விழுதாய் - இடிந்த*
*மனத்தோ டுழைத்தும் மறுமலர்ச்சி யில்லா*
*இனத்தவ ராகின ரிங்கு(13)*

௸

*இங்கிவர் கொய்யும் இளந்தளிர் கொண்டு*
*எழிலுறவே*
*தங்கிட விட்டுத் தமதுயர் விற்காய் தனித்துவமாய்த்*
*தொங்கிய வாழ்வைத் தொடக்கிய யாரோ*
*துயர்படிந்து*
*மங்கிடச் செய்த மறைமுகச் சூழ்ச்சி*
*மலையகமே(14)*

௸

*மலையக மிங்கே மலைபோ லுயரத்*
*தலையென நின்றத் தமிழர் - கலையுடன்*
*தேயிலைக் காட்டைத் திரவிய மாக்கியும்*
*வாயிலா துள்ளார் வறண்டு(15)*

௸

*வறண்டவர் வாழ்வை வனப்புள தாக்க*
*வகையுமின்றி*
*நிறங்களை மாற்றும் நிகழ்வுள சீவன் நிலையுடுத்து*
*திறமுடன் ஏய்த்துத் திரிகிற வர்கள் திமிங்கிலத்தின்*
*பிறப்பென வாகிப் பிழிந்திவர் வாழ்வைப்*
*பிதுக்கினரே(16)*

௸

*பிதுக்கிய வர்கள் பிடுங்கியச் செல்வம்*
*பதுக்கிய நாட்டின் படிகள் - ஒதுக்கியே*
*வைத்து உணர்வுகள் வாட்டி மலையகத்தில்*
*நைத்தன ரன்பாய் நடித்து(17)*

௸

*நடித்தவ ரிங்கே நடைமுறை வாழ்வில்*
*நலம்பெறவும்*
*படித்தவ ரெல்லாம் பசியுடன் வாழப் பழகிடவும்*
*குடித்தனம் செய்யக் குறைகளை அள்ளிக்*
*கொடுத்தவரால்*
*வடித்திடுங் கண்ணீர் வழிவர லாறு*
*வளர்ந்ததுவே(18)*

௸

*வரலாறு காணா வறுமைப் பிடிக்குள்*
*சிரந்தாழ்ந்த ஏழ்மைச் சிலைகள் - வரமாகக்*
*கேட்கும் வருமானக் கீதம் வழங்காமல்*
*வாட்டுமர சாங்க வதைப்பு(19)*

௸

*வதைப்பவர் கொள்கை வதைபடு தற்கோ*
*வழியுமின்றி*
*விதைப்பவர்க் கென்றே விளைநில மென்றோர்*
*விதியுமின்றி*
*உதைப்பவர் கால்கள் உருட்டிடும் பந்தாய்*
*உருள்வதையே*
*முதற்குடி தாங்கும் முதுகுளக் கூடை*
*முனங்கிடுமே! (20)*

# உண்மையை உணர்ந்தேன்!...

**சங்கர சுப்பிரமணியன்.**

பற்றற்றவன்தான் துறவி. பற்றை விடமுடியாத ஒருவரால் துறவியாக இருக்க முடியாது. துறவியாக இருப்பவர்கள் கையில் கோலொன்றை வைத்திருப்பார்கள். அந்த கோலின் உச்சியில் ஒரு துணி ஒன்று கட்டி இருக்கும். நான் வெகுநாட்களாக அதை ஏதோ இதுவும் ஒரு வகை துறவிகளுக்கான கொடி என்றே நினத்து வந்தேன்.

அப்புறம் நண்பன் சிதம்பரநாதன் மூலம் அது கொடியல்ல என்பதை உணர்ந்தேன். ஆனால் அது கொடியல்ல என்று அவன் சொன்னது எனக்கு வியப்பளித்தது. அவன்சொன்னதை இன்றுவரை என்னால் நம்பமுடியவில்லை. காரணம் அவன் சொன்ன விளக்கம் அப்படி. என்ன காரணம் தெரியுமா? அதுதான் அவரின் மாற்றுடை என்றான்.

"என்னடா சொல்ற அது மாற்றுடையா? அப்படியானால் அதை ஏன் கோலில் கட்டி வைத்திருக்கிறார்?" என்று கேட்டேன்.


"மணி, அவருக்கு அது ஒன்றுதான் மாற்றுடை. தான் உடுத்தியிருக்கும் உடையை துவைத்து சுத்தம் செய்தபின் அந்தகோலில் கட்டி உலர வைப்பார். கோலில் இருக்கும் உலர்ந்த உடையை உடுத்திக் கொள்வார்." என்றான்.

அவன் சொன்னதை எண்ணி மாற்றுடை கூட ஒன்றுக்கு மேலாக வைத்துக் கொள்ளாத துறவியை எண்ணி வியந்தேன். எந்த அளவுக்கு இவ்வுலக வாழ்வில் பற்றற்று இருந்தால் மாற்றுடைகூட ஒன்றுக்குமேல் வைத்துக்கொள்ளாமல் துறவிகள் வாழ்ந்திருப்பார்கள் என்று எண்ணி எண்ணி வியந்தேன்.

"டேய், இதற்கே இப்படி அசந்து போனா எப்படி? துறவிகளாவது மாற்றுடை ஒன்று மட்டும் வைத்திருந்ததை நம்பலாம். ஏனென்றால் அவர்கள் துறவிகள்" என்றான் சிதம்பரநாதன்.

"அப்படியென்றால் வேறு யாராவது இதுபோன்று இருந்திருக்கிறார்களா?"

"ஏனில்லை?" சொல்கிறேன் கேள் என்ற



சொல்ல ஆரம்பித்தான்.

ஒருமுறை காமராஜர் ஒரு பள்ளி திறப்பு

விழாவுக்கு சென்றார். போகிற வழியில் ஜீவா வீடு இருந்ததால் அவரையும் அழைத்தாராம். அதற்கு நீ முதலமைச்சர் திறந்தா போதாதா நான் எதற்கு என்றிருக்கிறார் ஜீவா.

அட, அடிக்கல் நட்டு நீ ஆரம்பிச்ச பள்ளியை நீ இல்லாமல் திறப்பதா? என்று காமராஜர் கேட்க, அப்படியானால் நீ முதலில் போ, நான் அரை மணி நேரத்தில் வருகிறேன் என்று அனுப்பி வைத்தாராம்.

ஆனால் ஜீவா அரைமணி நேரத்துக்கும் மேல் தாமதமாகச் சென்றிருக்கிறார். அதற்கு, என்ன ஜீவா இப்படிப் பண்ணிட்டியே என்று காமராஜர் உரிமையுடன் கடிந்து கொண்டார்.

உடனே ஜீவா நல்ல வேட்டி ஒன்றுதாம்பா இருக்கு. அதை துவைச்சு காய வச்சு கட்டிட்டு வரேன். அதுதான் தாமதம் தப்பாக நினைக்காதே என்றாராம். உடனே காமராஜர் கண்கலங்கிவிட்டார். இப்படியெல்லாம் மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று சொல்லி முடித்தான்.

ஆனால் இன்றுள்ள துறவிகளும் அரசியல் வாதிகளும் அப்படியா? அவர்களின் தோரணை என்ன? ஆடை அலங்காரங்கள் என்ன? ஆட்ட பாட்டமென்ன?

துறவிகளுக்கு பல்லக்கு வேண்டும். அரசியல்வாதிகளுக்கு சைரன் வைத்த வாகனம் வேண்டும். என்று பலவாறு எண்ணிக் கொண்டிருந்த போது கைபேசி அழைத்தது.

கைபேசியை எடுத்தபோது என் நலனில் அக்கறை கொண்ட நண்பர்தான் அழைத்தார். வழக்கம்போல் நலன் விசாரிப்பைத் தொடர்ந்து எனது நண்பன் கபிலனின் படைப்பொன்றை வாசித்தாராம் பாராட்டினார். நண்பனின் சார்பில் நன்றி சொன்னேன். பேசிக்கொண்டிருந்த பொழுது,

"சங்கர், உங்கள் நண்பர் எழுதுவதை தொகுத்து ஏன் நூலாக வெளியிடக் கூடாது" என்றார்.

"அவர் பல ஆண்டுகளாக எழுதிவருகிறார். ஆனால் அவற்றை நூலாக்கும் எண்ணம் ஏனோ ஏற்படவில்லை. நூலாக்கும் அளவுக்கு பெரிய எழுத்தாளனாக அவர் தன்னைக்

கருதவில்லை. அவர் மனதில் பட்டதை

எழுதி வருவதாகச் சொல்கிறார்." என்றேன்.

உங்களைப்போன்றே சிலர் என்னிடம் கேட்டிருக்கின்றனர். அவரது கவிதைகளைப் படித்த ஒரு நண்பரும் இதையேதான் சொன்னார். அவர் கவிதை எழுதுவார் என்று தெரியும். ஆனால் இத்தனை கவிதைகளை எழுதியிருக்கிறார் என்றவர் ஏன் அவற்றை தொகுத்து நூல் வெளியிடக்கூடாது என்றார்.

நான் இதுபற்றி அவரிடம் கேட்டபோது அவர் சொன்னது என்னவெனில் ஒரு பிரபலமான எழுத்தாளர் அவரை நிகழச்சிக்கு அழைக்கும்போது நிபந்தனை விதிப்பாராம். அவர் எழுதிய நூலை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வாங்கவேண்டும் என்பதே அந்த நிபந்தனை. பெரிய எழுத்தாளர்களின் நிலையே இன்று இப்படி என்றால் வாழ்க்கை கற்றுத்தரும் பாடங்களில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டாமா? என்கிறார்.

நம்மை விட பலமடங்கு சிந்தனை வளமிக்க எழுத்தாளர்கள் தோன்றிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் அந்தந்த காலகட்டத்தின் தேவைக்கேற்ப படைப்புக்களை படைத்துக் கொண்டிருப்பார்கள். ஆதலால் எதையும் பாதுகாப்பதற்காக படைக்கத் தேவையில்லை.

எதிர்காலச் சந்ததியினருக்கு எந்த அளவுக்கு

உணவுப் பொருட்களை சேமித்து வைக்க முடியும்? அவர்கள் வாழும் காலங்களில் அவர்களின் தேவைக்கு அவர்களே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்துகொள்வார்கள் அல்லவா என்கிறார். அதிலும் நாம் இப்போது சாப்பிடும் உணவை சாப்பிடுவார்களா? என்பதே சந்தேகம்.

அதுபோன்றே அவரவர் வாழும் காலங்களில் படைப்பாளிகள் படைப்பை தந்துகொண்டே இருப்பார்கள். சொல்லப் போனால் இன்றைய படைப்புக்களைவிட சிறந்த படைப்புக்களும் அறிவுசார்ந்த படைப்புக்களும் வரக்கூடும்.

இன்னொன்றும் அவர் சொன்னார். அவரது

எட்டாவது வகுப்பு படிக்கும் பேத்தி அவர்

எப்பாவாவது தியாகராஜ பாகவதர் பாடிய பாடலை தொலைக்காட்சியில் யூடியூப் மூலம்

கேட்டால் ஐயோ தாத்தா இந்த பாடலில் என்ன இருக்கிறது என்று இப்படி கேட்கிறீர்களோ என்பாளாம்.

அதுமட்டுமா அவளைப்பெற்ற அப்பனான அவர் மகனோ அவர் "காலங்களில் அவள் வசந்தம் கலைகளிலே அவள் ஓவியம்" என்ற பாட்டைக்கேட்டால் ஐயோ அப்பா என்றபடி இரு காதுகளையும் மூடிக்கொண்டு செல்கிறானாம்.

அப்படிச் சென்றவனின் அறையிலிருந்து "கண்டாங்கி கண்டாங்கி கட்டிவந்த பொண்ணு, கண்டாலே கிறுக்கேத்தும் கஞ்சா வச்ச கண்ணு" என்ற பாடல் கேட்குமாம். இப்படியாக ஒரு குடும்பத்தில் இருக்கும்

அப்பா, மகன், மற்றும் பேத்திக்குள்ளே சமகாலத்தில்

கேட்கும் பாடலில் இவ்வளவு வேறுபாடு.

இந்த லட்சணத்தில் நமது படைப்பை எதிர்கால சந்ததியினர் நூலகம் சென்று தேடிப்பிடித்து படிப்பார்கள் என்று எதை வைத்து நம்புவது? அவர்களின் ரசனை எப்படிப்பட்டதாக இருக்குமோ?

மதநூலாக இருந்தால் மதத்தைப் பரப்பவும் நீதி நூலாக இருந்தால் வாழ்வை நெறிப்படுத்தவும் வரலாற்று ஆவணங்களாக இருந்தால் நமது வரலாறு பற்றி அறியவும் உதவும். அதைத்தவிர மற்ற நூல்கள் எந்த அளவுக்கு பயன்பாட்டில் இருக்கும் என்பதை யாராலும் கூற இயலாது.

இன்றைய எழுத்தாளர்களில் எத்தனை

பேருக்கு பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, நற்றினை, குறுந்துகை, பதினென்

கீழ்க்கணக்கு, பதினெண் மேல்கணக்கு

என்பனவெல்லாம் தெரியும்? அல்லது வாசித்திருப்பார்கள் என்கிறார்.

எழுத்தாளர்களே அவற்றை எல்லாம் வாசிக்காதபோது மற்றவர்கள் இவற்றையெல்லாம் எப்படி வாசிக்க முடியும்

என்கிறார்? இப்படியிருக்க, நம் படைப்புக்களை எதிர்கால சந்ததியினர் வாசிப்பார்கள் என்று எந்த அடிப்படையில் நூல்களைப் படைத்துக் கொண்டே இருப்பது?

அதற்காக நூலைப் படைப்பதும் வெளியிடுவதும் வீண் செயல் என்று சொல்லவில்லை. ஆர்வத்தையும் கெடுக்கவில்லை. அடுத்த பிறவி இருக்கிறது, பிறப்பெடுப்போம் என்ற நம்பிக்கைதானே எகிப்திய பிரமிடுக்களில் பொன்னையும் பொருளையும் சேகரித்து வைக்கவைத்தது?

இறந்த உடலை பதப்படுத்தி பாதுகாத்து

வைக்க உதவியது. அதுபோல் நம் படைப்புக்களயும் நூலாக்கி பத்திரப்படுத்துவதில் தவறில்லை, அது அவரவர் விருப்பம் என்கிறார்.

பொதுவாக பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற அடிப்படையில் இன்றைய படைப்புக்கள் அருங்காட்சியகத்தில் உள்ள பொருட்கள் போலாகிவிடும். இப்போதே காலத்தினால் அழிக்க இயலாத நூல்களைத் தவிர மற்ற நூல்கள் தூசுபடிந்து நூல்நிலையங்களில் இருப்பதை காணமுடியும்.

ஏதோ நாம்மட்டுமே சிறந்தவர்கள் போன்றும் எதிர்கால சந்ததியினருக்கு நம்மைவிட்டால் அறிவுப் பெட்டகங்களை வேறு யாராலும் கொடுக்க இயலாது என்பது போன்று பாதுகாப்பதில் நம்பிக்கையில்லை. நம்மைவிட பலவழிகளில் சிறந்த படைப்பாளிகள் எதிர்காலத்தில் தோன்றுவார்கள் என்கிறார்.

நம் முன்னோர்கள் மருத்துவத்தில் சிறந்து விளங்கியிருக்கிறார்கள். அந்த மருத்துவமெல்லாம் பாட்டி வைத்தியமாகவும் நாட்டு வைத்தியமாகவும் எங்கோ ஒருசில இனங்களில் மூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைய காலகட்டத்திற்கேற்ப நவீன மருத்துவம்தானே கோலோச்சி நிற்கிறது.

நெஞ்சைத் தொட்டு சொல்லுங்கள். உங்கள்

பாட்டனார் பாதுகாத்து பேரன்களுக்கும் கொள்ளுப் பேரன்பளுக்கும் பயன்படும் என்று பாதுகாத்து வைத்திருந்த மிதிவண்டியிலா பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள்?

அல்லது திரைப்படத்தில் காட்டுவார்களே

பரம்பரை நகைகள் என்று. அவற்றையா உங்கள் பேத்தி கவிநீ (கவிதாயினி) போட்டுக்கொண்டு திரிகிறாள். அல்லது உங்கள் பேத்திக்கு அபிதகுஜாலாம்பாள் என்றா பெயர் வைத்திருக்கிறீர்களா என்று வழக்காடுகிறார்.

மாட்டு வண்டியை பாதுகாத்து வைக்கவேண்டி இருக்கவில்லை. இன்று பேருந்துகளும் தொடர்வண்டிகளும் விமானங்களும் வந்துவிட்டன. இவற்றை நாம் பாதுகாத்தாலும் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் சென்றபின் இவைகள்தான் பயன்பாட்டில் இருக்கும் என்று எப்படிச் சொல்ல இயலும்?

எத்தனையோ சங்க இலக்கியங்களை இழந்து விட்டோம். ஆட்சியாளரின் அடுப்பங்கரையில் தீக்கிரையாக வேண்டிய திருக்குறள் சமையல்காரரால் தடுத்திருக்கப்படாவிடில் திருக்குறள் இன்றில்லை. ஆதலால் எந்த நூலும் இருப்பதும் மறைவதும் காலத்தின் கையில் உள்ளது என்ற தத்துவமெல்லாம் பேசுகிறார்.

இப்போதெல்லாம் பெருமளவில் நூல் வாசிப்பவர்கள் குறைந்தே வருகிறார்கள். அதற்காக நூல் வாசிப்பவர்கள் இல்லை என்று சொல்ல வில்லை.

பொழுது போக்கென்று அந்த காலங்களில் நூல் வாசிப்பது வானொலி கேட்பது போன்றவைகள் மட்டுமே இருந்தன. அதனால் தடித்த கனமான நூல்கள் ஐந்தாறு பாகங்களாக வந்தன. இப்போது அந்த நூல்களின் இடத்தில் நான்கைந்து ஆண்டுகள் தொடரக்கூடிய தொடர்கள் தொலைக்காட்சிகளில் வருகின்றன.

அதற்கு சான்றாக பொன்னியின் செல்வன் போன்றோ கடல்புறா போன்றோ நாவல்கள் இப்போது

வருவதில்லை என்பதில் இருந்து அறியலாம். அதுபோன்ற நாவல்களை தொடராக வெளியிட்டு வந்த இதழ்களின் இன்றைய நிலையே உள்ளங்கை நெல்லிக்கனியாக காணக்கிடக்கின்றன. சில இதழ்கள் தொலைக்காட்சிப் பக்கம் வந்து தொடர்களை வெளியிடத் தொடங்கி விட்டன.

இது இப்படியிருக்க எல்லோரும் நூல் வெளியிடுகிறார்கள் என்பதற்காக எங்க ஆத்துக்காரரும் கச்சேரிக்கு போகிறார் என்ற கதையாக நூல் வெளியிட விரும்பவில்லை என்கிறார்.

அதனாலேயே பொழுது போக்குக்காக அவர்

எழுதுவதை நூலாக்கவில்லை. அவர்

எழுதுவதை பத்துபேர் படித்தாலே அதுவே போதும் என்ற மனமே பொன்செயும் மருந்தாக உள்ளபோது அதையும் மீறி எவ்வாறு அவர் நூல் வெளியிடுவார்?

இப்படி பலவாறு கதைத்துக்

கொண்டிருந்தபோது நண்பர் ஒன்றைச் சொன்னார்.

"சுவாமி விவேகானந்தர் நம்மைப் பற்றி

பிற்காலத்தில் பிறர் சொல்லும்படி மூன்றில் ஒன்றைச் செய்ய வேண்டும் என்றிருக்கிறார்"

"என்ன அந்த மூன்று" என்றேன்.

"அதாவது வீடொன்றை கட்டியிருக்க வேண்டும். பிள்ளையொன்றை பெற்றிருக்க வேண்டும் அல்லது நூலொன்று

எழுதியிருக்க வேண்டும்" என்றார்.

அப்படிச் சொன்னவர் சிறிதுநேரம்

பொதுவாக பேசிவிட்டு கைபேசியை வைத்தார்.

அவருடன் பேசி முடித்தபின் என்னுள் பல எண்ண ஓட்டங்கள் ஓட ஆரம்பித்தன. அவை நூல் வெளியிடுவது பற்றி என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. நான் நினைத்தது சுவாமி விவேகானந்தரை பற்றியதே.

மானிட வாழ்க்கையே நிலையற்றது. ஆனால் பற்றற்று இருக்க வேண்டிய விவேகானந்தர் நமக்குப்பின் நம் பெயர் நிலைக்க வேண்டும் என்றால் வீடுகட்ட வேண்டும், பிள்ளைபெற வேண்டும் அல்லது நூல் எழுதவேண்டும் என்ற இந்த மூன்றில் ஒன்றைச் செய்யவேண்டும் என்று சொல்லி சொல்லியிருக்காரே என்று எண்ணி குழம்பினேன்.

அதுசரி, வீடு கட்டுவது, பிள்ளை பெறுவது மற்றும் நூல் எழுதுவது இவற்றுள் ஏதாவது ஒன்றின் மூலம் நம் பெயர் நிலைக்கும் என்று பற்றற்று இருக்கவேண்டிய துறவி விவேகானந்தர் சொல்லியிருப்பது விந்தைதான்.

விறகுஇடை மூடி அழல் கொடுபோட

வெந்து விழுந்து முறிந்த நிணங்கள்

உருகி எழும்பு கருகி அடங்கி

ஓர்பிடி நீறும் இலாத உடம்பை

என்ற பட்டினத்தாரின் வரிகளை படிக்கும்போது பட்டினத்தாரின் பற்றற்ற நிலையையும் நிலையற்ற வாழ்வையும் உணரமுடிகிறது. பின் ஏன் விவேகானந்தர் அவ்வாறு கூறினார் என்ற நினைத்தபோது பதில் கிடைத்தது.

அவர் துறவி என்றாலும் பற்றைத் துறக்கவில்லை என்பதறிந்தேன். அவருக்கு மதத்தின் மேல் பற்று இருந்தது. அதனால்தான் திருவனந்தபுரம் வந்திருந்த அவர் ஒரு கூட்டத்தில் பேசும்போது நாம் எல்லாம் இந்துக்கள் என்றார். அதற்கு மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை நாங்கள் இந்துக்கள் அல்ல, நாங்கள் சைவர்கள் என்றாராம்.

இப்போது சுந்தரம் பிள்ளை சொன்னதை எண்ணிப்பார்த்ததும் எனக்கு என்னன்னவோ தோன்றியது. நாமெல்லாம் இந்துக்கள் என்றால் நாம் ராமன், கிருஷ்ணன்

என்றெல்லாம் பெயர் வைக்கும்போது இந்துக்கள் என்று சொல்பவர்கள் எல்லாம்

ஏன் முனியாண்டி, மாடசாமி என்றெல்லாம் பெயர் வைக்கமாட்டேன் என்கிறார்கள்.

நாம் சீதா, ஜானகி என்றெல்லாம் பெயர் வைக்கும்போது அவர்கள் ஏன் இசக்கியம்மாள் பேச்சியம்மாள்


என்றெல்லாம் பெயர் வைக்க மாட்டேன் என்கிறார்கள் என்று எண்ணினேன். உண்மையில் நாம் இந்துக்களா? சைவர்களா? வைஷ்ணவர்களா? அல்லது வேறு ஏதாவதா?

நண்பர் சுவாமி விவேகானந்தரை பற்றி

சொன்னதை எண்ணிக் கொண்டிருந்தபோது கிணறுவெட்ட பூதம் கிளம்பியதுபோல் "மின்னுவதெல்லாம் பொன்னென்று எண்ணி கண்ணிருந்தும் குருடானேன், நான் கண்ணிருந்தும் குருடானேன்" என்ற திரைப்பட பாடல் வரிகள் என் நினைவில் வந்தன.

அப்போது"பெயர் புகழெல்லாம் உடன் வராதென்ற உண்மையை அறிந்தேன், நான் உண்மையை அறிந்தேன்" என்ற மாற்று

வரிகள் எனக்கு உண்மையை உணர்த்தியது.




# தலைக்கூத்தல் – சினிமா ஒரு பார்வை

**கவிஜி**

சரிக்கும் தவறுக்கும் இடையே நின்று விடலாம். ஆனால் சரிக்கும் சரிக்கும் இடையே நிற்க முடியாது. இயலாமையின் விளிம்பில் சமுத்திரக்கனி பாத்திரம் நிறைந்து வழிவது எங்கோ ஒரு மூலையில்... தினம் தினம் நிகழ்ந்து கொண்டிருக்கும் யாரோ ஒரு மகனின் மனவெளிதான்.

பாதி கட்டிக்கொண்டிருக்கும் வீட்டில் மேல் தளத்தில் இருந்து தெரியாமல் விழுந்து கோமா நிலைக்கு சென்று விட்ட அப்பா. அவருக்கு தினம் தினம் அவருள் இருக்கும் பிணத்தை சுமக்கும் வேலை மட்டுமே. எதுவுமே தெரியாது. எல்லாமே படுக்கையில். பையன் பழனி பார்த்து பார்த்து செய்யும் பாசக்காரன். அன்பின் மிகுதி அல்ல அது. அது அன்பின் நியதி என்று வாதாடும் பேரமைதிக்காரன். மனைவிக்கு அப்படி இல்லையே. அது சுமை தான். பகலில் அப்பாவை பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இரவில் செக்யூரிட்டியாக செல்லும் நாயகன். அதனால் வருமானம் குறைய... பகலில் தீப்பெட்டி கம்பெனிக்கு வேலைக்கு செல்லும் நாயகி.

மருத்துவம் கை விரித்து விட்டது. ஊரும் சாவுக்கு காத்திருக்கிறது. எதற்கும் உபயோகமில்லாமல் படுத்தே கிடக்கும் ஒரு ஜடம் மட்டுமே மருமகளுக்கு. வாழ்ந்து முடிந்த ஒரு ஜீவன்.. இனி இறப்புக்கு தான் தகுதி என்று நம்பும் எல்லார் மனநிலையும் தான் அவளின் நிலைப்பாடும். அது இயல்பும் தானே. வீட்டு பத்திரத்தை வைத்து கடன் வாங்கும் அளவுக்கு வந்த பிறகு போக வேண்டிய உயிர் போய் விட்டால் தானே நல்லது. தன்னால் யாவருக்கும் சிரமம் என்று தொடுத்துக் கொண்டிருக்கும் அந்த உயிரின் உள் உணர்வு சொற்களுக்கு அப்பாற்பட்டது. சோகம் நிறைந்த சொலவடைகள் அவைகள். அந்த நேரத்திலும் வாழ்ந்து விட விரும்பும் அதன் ஆழ் விருப்பம் மானுட வடிவம். எந்த உயிரும் இறப்புக்கு எதிரானது. அதன் போக்கு தான் இந்த வாழ்வெனும் தத்துவம் என்று நமக்கு புரிகிறது.

அறிவுள்ள பேத்தி. டியூப் வழியாக உணவு தருவதாகட்டும்... பதில் பேசாத கண்கள் திறக்கும் தாத்தாவிடம் பேச்சு கொடுப்பதாகட்டும்.. தன் நண்பனை அழைத்து வந்து அவரிடம் அறிமுகம் செய்வதாகட்டும்... அப்பாவின் வழியிலே மகளுக்கும் நம்பிக்கை இருக்கிறது. எப்படியாவது தாத்தா எழுந்து விடுவார். அப்பா அம்மா சண்டையை நினைத்து பள்ளியில் அழுதபடி அமர்ந்திருக்கும் காட்சி.... குடும்பம் ஒரு சங்கிலி... ஒன்று அறுந்தால் மற்றொன்று செய்வதறியாது தவிக்கும் என பாடம் சொல்கிறது. படம் நெடுகிலும் வினையும் எதிர்வினையும் ஒருவித இறுக்கத்தில் பக்கத்து வீதியில் நடப்பது போல தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

அப்பாவின் விழிப்புக்காக வேண்டிக்கொண்ட கிடாய் விருந்து... கொஞ்சம் அபத்தம் என்றாலும்... அந்த கிராமத்தின் வழக்கம் தான் அது. அதற்கும் சமுத்திரக்கனி சொல்லும் தர்க்க ரீதியான அர்த்தம்... அர்த்தம் உள்ளவை. ஆம் என்று நம்பலாம். அப்பாவை முன் நிறுத்தி வீட்டுக்குள் கணவன் மனைவிக்குள் இடைவெளி. முகம் கொடுத்து பேசாமல்.. பேசினாலும்... குற்றம் குறை என்று தொடர் பனிப்போர். மனைவியும் லேசுப்பட்ட ஆளில்லை. எதுவாக இருந்தாலும் போட்டு உடைத்து கேள்வி கேட்டு உண்டு இல்லை என்று பண்ணி விடும்.. கிராமத்து துடுக்கி. அதுவும் அந்த பத்திரம் பற்றி விசாரிக்கும் காட்சி அக்மார்க் பொண்டாட்டி வகையறா.

வசுந்தரா... கனக் கச்சிதமாக பொருந்தி போகிறார். அவர் குரலில் இருக்கும் அழுத்தம்.... கோபத்திலும் வசீகரிக்கவே செய்கிறது.

வேலை முடிந்து கணவன் வீட்டுக்கு போகும் அதே வழியில் வேலைக்கு போகும் மனைவி... எதிர் எதிரே யாரோ போல போகும் காட்சி மனவெளி விரிசலை மிக நேர்த்தியாக எடுத்து வைக்கிறது. அந்த காட்சி தொகுப்பில் இருக்கும் சொல்லொணா துயரம் திரை மொழியில் திகைக்க வைக்கிறது. நிறைய இடங்களில் சினிமா... காட்சி மொழி என்பதை மிக அழகாக எடுத்து வைக்கிறது.

இருவரும் கணவன் மனைவியாகவே தெரிகிறார்கள். அப்படி ஒரு கெமிஸ்ட்ரி. அதுவும் மனைவியிடம் நெருங்க விரும்பும் அந்த காட்சி அதன் இயல்பு.. ஒரு ஆணின் அந்தரங்க தவிப்பு.. பெண்ணின் தனிப்பட்ட விருப்பு என மானுட மனதுக்குள் பயணிக்கும் திரைக்கதை அபாரம். போகிற போக்கில் எல்லா குடும்பங்களிலும் நடக்கும் எளிமையான கோப தாபங்கள் தான். கிராமத்தில் நடக்கும் சம்பிராதய சம்பவங்கள் தான். மிகப்படுத்தாக திரை... அளவான மீட்டரில் ஒரு நல்ல சினிமாவாகி இருக்கிறது.

இழுத்து கொண்டு கிடக்கும் உயிர்... அது என்ன நினைக்கிறது என்று புரியாமல்... அதோடு போராடுவது... சாவு கட்டிலில் கிடக்கும் ஒவ்வொரு உடலுக்கும் நிகழ்வது தான். இந்த ஜீவன் போய்ட்டா கூட பரவால்ல... என்று நொந்த சுய கழிவிரக்க நினைவுகள் நம்மிடையே நிறைய இருக்கின்றன. வாழவும் முடியாத சாவும் வராத அந்த ஜீவன்களின் நினைப்பில் என்ன தான் இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. அதன் வழியே மீந்து விட்ட காலத்தில் என்ன வேண்டுமானாலும் இருக்கலாம்.

இங்கே ஒரு காதல் இருக்கிறது. துணி துவைக்கும் ஏழை மனுஷியின் சுடர் பூத்த அந்த கண்கள் இருக்கிறது. அவளோடு கொண்ட காதலும்.. அவளை விரட்டி விரட்டி காதலித்த அந்த நாட்களும்... முதல் முத்தமும்.. அவள் மடி கொண்ட குளக்கரையும்... என அது மாயத்தின் விளிம்பில் வந்து வந்து போகிறது.

எத்தனை போராடியும் நிலைமை தன் கையை மீறி விட்ட தருணத்தில் மகன் தென்னந்தோப்புக்குள் குழி தோண்டி தன்னை மறைத்துக் கொள்ளும்.. காட்சி திரைக்கு புதிது. அப்பாவுக்கும் பையனுக்கும் இடையேயான பாசமும்... அதன் இறுக்கமும்... ஓர் உயிரை இன்னொரு உயிர் உள் வாங்கி தவிக்கும் தவிப்பும்... இந்த வாழ்வுக்கு அர்த்தம் தேடி அலைகிறது. மனவெளியின் தீவிரத்தை காட்சியாக்க மெனக்கெட்ட இயக்குநர் ஜெயப்ரகாஷ் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு பாராட்டுகள். மனசு எங்கிருக்கிறது என்றே தெரியாத போது அதனுள் நிகழும் நிஜமும் நிழலும் எத்தனை போராட்டம் நிறைந்தது என்று அவர் உணர்ந்திருக்கிறார். உருவாக்கம் படுத்துவது கடினம். முயன்றிருக்கிறார்.

அவன் எச்சில் சோற்றை அவள் சாப்பிட்டு விட்டு காதலை ஏற்றுக் கொள்ளும் அந்த காட்சியில்... கோயில் படித்துறையில் இருந்து அப்படியே நீருக்குள் குதித்து சந்தோசத்தை வெளிப்படுத்தும் போது... காதலுக்காக ஏங்கிய மனதின் தீவிரத்தை நீருக்குள் மலர்ந்து நாமும்

உணர்கிறோம். அது ஒரு கிளாசிக் ஷாட் ஆக மாறி விடுகிறது. கதிர் ஏற்கும் பாத்திரங்கள் எப்போதுமே ஈர்க்கும். இதிலும் நினைவலைகளில் நீந்தும் நிழலின் உருவமாய்... அரூப சாயலில் அமர்க்களப் படுத்துகிறார். இளவட்ட உடல்மொழியில்... இதயம் நிறைந்த மனிதனாக... படத்தின் ஜீவனாக பிரகாசிக்கிறார்.

காதலியாக வரும் அந்த பெண். கண்ணழகி. காதலில் உருகி... அதற்காக அவள் இழக்கும் எல்லாமும்... வாழ்தலின் சாட்சி. அவள் தூரத்து நட்சத்திரமாய் ஆனால் கிட்டத்து நிலவாய். இறுதி காட்சியில்... இளையராஜா இசை போல அது தானாக நிகழ... நாம் நகர மறுத்து திரை வெறிக்கிறோம்.

இசையும் ஒளிப்பதிவும்.. என்ன தேவையோ அதன் தீவிரம் உணர்ந்திருக்கிறது. மனதுக்குள் நிகழும் மாயத்தை திரைக்கு ஏற்ற... பட்ட மெனக்கெடல்கள்.. கண்டிப்பாக நல்ல சினிமா முயற்சி. ஆள் அரவமற்ற ஒற்றையடியில் நிகழும் எல்லாமும் நிலா வெளிச்சத்தில் நிகழ்வதாக நம்பலாம். மெல்லிய நீரோடையில் ஆசீர்வதிக்கப்பட்ட காலங்களின் ஊஞ்சலாக தான் முழு படமும்.

தன் பிள்ளை கஷ்டபடுவதை பொறுக்காத ஓர் அப்பாவின் மனநிலை.. தன் அக்கா வாழ்வுக்காக எதையும் சமரசம் செய்யும் தம்பி என ஒரு பெண்ணுக்கு அவள் தாய் வீடு எத்தனை பலம் என்று கண் முன் நிறுத்துகிறது. தலைக்கூத்தலுக்கு முன்பான... வீட்டுக்குள் நடக்கும் பஞ்சாயத்து காட்சி. விட்டும் கொடுக்க முடியாத... விட்டு தான் கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழலில் அவரவருக்கு அவரவர் நியாயம். மானுடத்தை தராசில் நிறுத்தும் இடம்.

பிள்ளையா அப்பாவா என்று கேட்கையில்... அப்பா தான் என்று சொல்லும் ஒரு மகனின் பேரழுகை படம் முழுக்க விசும்புகிறது. சமுத்திரக்கனி என்ற மகா நடிகன்... காட்சிக்கு காட்சி பாத்திரமாகவே பரிணமளிக்கிறார்.

நண்பன் முருகதாஸ் இந்த படத்தில் ஒரு குறியீட்டு பாத்திரம். கையில் எப்போதும் புத்தகம் இருக்கிறது. ஒரு கால் இல்லை. அவர் இந்த வாழ்வை பார்க்கும் கோணம் ஒரு நாவலுக்குரியது. தூரத்து நட்சத்திரத்தை பூத கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருக்க கூடாது. மறந்து விட வேண்டும். அது தான் அதன் மகத்துவம்.

வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே ஒரு உயிர் ஊசலாடுகையில்... அதனை சுமக்கும் இன்னொரு உயிர் மருகி தவிப்பது... உள்ளம் புரட்டும் உண்மை சுடர். அதனதன் கோணங்களில் அதனதன் சரி... சரி தானே. சரிகளின் சூழல் எத்தனை அழுத்தம். உள்ளே மருகி... வெளியே இறுகி... நல்ல சாவுக்கு ஏங்கும் வாழ்க்கை தான் எத்தனை புதிரானது.

"எவ்ளோ நாள் வாழ்ந்தோங்கறது வயசில்ல... இனிமேல் எத்தனை நாள் வாழ போறோங்கறது தான் வயசு.."

" நம்மால குடுக்க முடியாத உயிரை நாம் எடுக்கவும் கூடாது..."

போன்ற தத்துவார்த்த வசனங்கள் நெஞ்சை துளைப்பவை. இந்த வாழ்வின் மீது கவிழ்ந்திருக்கும் தத்துவங்கள் மெல்ல விடுபடுகையில்... கிடைக்கும் அற்புதங்கள்... வாழ்வின் அர்த்தத்தை சாவின் விளிம்பில் வெளிப்படுத்தி விடுகிறது.


படத்தின் தலைப்பே கதையை சொல்லி விடுகிறது. குழந்தைக்கு கள்ளி பால் மாதிரி... வயதானவர்களுக்கு தலைக்கூத்தல். நிகழ்ந்த சம்பவங்கள்... நினைவுகளில் கொஞ்சம் வண்ணம் கூடித்தான் வெளிப்படும். அது தான் அந்த அப்பாவின் காதல் காட்சிகளின் தொகுப்பாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்பாவின் காதலி வரும் காட்சிகள் எல்லாமே ஒரு வகை மாயத்தன்மை கொண்டவையாக... ஒரு கனவு காட்சி போல வந்து போவது அதனால் தான். நம்பகத்தன்மை நாடகத்தன்மை என்று பேசுவோருக்கு புரிதல் மட்டு அல்லது கற்பனை வறட்சி என்று நம்பலாம்.

"தலைக்கூத்தல்" கிடந்து தவிக்கும் ஜீவனுக்கு அது தான் விடுதலை என்று விடுதலைக்கு அர்த்தம் சொன்னவர்கள் சொல்வார்கள் தான். ஆனால் அந்த உயிரின் வழியே வந்த சின்ன உயிர் என்ன செய்யும். காப்பாற்றுமா.. கை கழுவுமா. இடதுக்கும் வலதுக்கும் இடையே எத்தனை சிரமம் இந்த ஓடைக்கு. ஆனாலும் அது ஓடிக் கொண்டே இருக்க வேண்டுமே.

படத்தின் மிகப்பெரிய பலமாக இருக்க வேண்டிய அந்த தகப்பன் பாத்திர தேர்வு சறுக்கி இருப்பது தான் குறையாக எனக்கு படுகிறது. மற்றபடி மற்ற பாத்திரங்கள் கனக்கச்சிதம். சில நேரங்களில் எல்லாரும் சொல்வது சரி ஆகி விடுகிறது. அது தான் பல காலமாக பூமிக்குள் வேர் விட்டிருக்கிறது. காதலின் பொருட்டு கல்லை தூக்கி கொண்டு அலையும் அதே சாதி இங்கும் சதி செய்கிறது. இது காதல் கதை என்பதையும் தாண்டி ஒரு சாவு கதை. ஆதலால் சாதியின் பின்புல காட்சிகள் தேவையான அளவுக்கு... புரிந்து கொள்ளும் அளவுக்கு... போதும் என்ற அளவுக்கு தான் இருப்பதாக படுகிறது.

வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்தில் நினைவில்லாத அப்பாவும்... நினைவு கூடிய மகனும்.. என்ன ஆனார்கள் என்பதுதான் இந்த "தலைக்கூத்தல்".

மலையாள படங்களை மட்டும் தான் கொண்டாட வேண்டுமா என்ன. இந்த மாதிரி தமிழ் படங்களையும் கொண்டாடலாம்.



# அப்பாவின் கடைசி டைரி...

**நௌஷாத் கான்.லி**

அன்புள்ள மகன் சௌந்தரபாண்டிக்கு அம்மா ராஜாத்தி முதலும் -முடிவுமாய் எழுதிய மடல்..

இந்த கடிதம் படிக்கும் தருணங்களில் நான் உயிரோடு இல்லாமல் போவதற்கு கூட வாய்ப்புண்டு.. உன் மாமா சின்னா எவ்வளோ சொல்லியும் கூட,என் உடல்நிலை அறிந்தும் கூட நீ இன்னும் ஊர் வரவில்லை..நீ என் மேல் வெறுப்பதற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியும்.

சின்ன வயதில் உன்னை கொடுமை படுத்தியதாய்,உன்னை அடித்து துன்புறுத்தியதாய் நீ நினைக்கலாம்..உன்னை கொடுமைப்படுத்தியது,அடித்தது எல்லாமே உண்மையாக இருந்த போதும்,செய்தது நானாக இருந்த போதும் அவையெல்லாம் எதற்க்காக செய்தேன் என்பதை நீ உணர்ந்தால் இந்த தாயை ஒரு போதும் வெறுக்க மாட்டாய்..

உன் உலகம் உன் அப்பா..உன் ஹீரோ,கதாநாயகன்,ரோல் மாடல்,கடவுள் எல்லாமே உன் அப்பா தான்..இதுநாள் வரை ஏன் உன் தந்தை இறந்து போன பின்பு கூட இதுநாள் வரை பொய்மையின் வடிவமான உன் தந்தையின் மீது நீ கட்டி வைத்திருக்கும் நம்பகத்தன்மையை

நான் கெடுக்க நினைத்ததில்லை..அந்த பாழாய் போன மனுஷன் இருந்த வரையில் கூட அவரது உள்வேஷத்தை யாரிடமும் தம்பட்டம் அடித்து நான் சொல்லியதில்லை.. இதுநாள் வரை நீ யாரை கதாநாயகனாக,கடவுளாக நினைத்தாயோ அவையெல்லாம் உண்மையில்லை..உன் நம்பகத்தன்மைக்கு அந்த மனுஷன் தகுதியானவரும் கிடையாது..உன்னை பத்து மாதம் சுமந்த தாயை வில்லியாக,உன்னை பெற்றெடுத்த சனியனாக நீ நினைக்கலாம்..

உன் அப்பா மீதுள்ள வெறுப்பில் உன் சின்ன வயதில் பாசம் காட்டாமல், அடித்து துன்புறுத்தி இருக்க கூடாது தான்..உன் முக அமைப்பில் இருந்து உன் சின்ன சின்ன பழக்க வழக்கம்,செயல்பாடு எல்லாமே அந்த மனுஷனை உரித்து வைத்தது போல் இருந்தது..உன் அப்பனே என் வயிற்றில் மறுதடவை பிறந்து வந்து விட்டானா என்று நானே ஆச்சரியத்தோடு வருத்தமும் பட்டேன்..

ஒரு காலத்தில் எந்த முகத்தை ஆசைமுகம் என்று நினைத்து உருகி,உருகி காதல் செய்தேனோ அந்த முகத்தைத்தான் ஒரு காலத்தில் அளவுக்கதிகமாய் வெறுத்தேன்..என் வெறுப்புக்கு பின்னாடி இருக்கும் துரோகங்கள்,வலிகள் ஆகியவற்றை உன்னோடு மட்டும் சொல்லிவிட்டு மண்ணோடு மண்ணாக போக விரும்புகிறேன்...கர்த்தரிடம் பாவமன்னிப்பு கேட்கும் ஒரு அபலை போல ஒரு தவறும் செய்யாத என் மகனை அடித்து துன்புறுத்திய ஒரே காரணத்துக்காக மன்னிப்பு கேட்கிறேன்..நான் சொல்ல போகும் இரகசியத்தை நீ அறியும் போதும் இந்த தாயை நீ மன்னித்து விடுவாய் ஆனால் இதுநாள் வரை உன் தந்தையின் மீது கட்டி வைத்திருக்கும் நம்பிக்கை கோட்டை நிச்சயம் உடையும்..

உடைந்தால் என்ன????

அந்த பாவி மனுஷன் தான் உயிரோடு இல்லையே... உயிருள்ள சில உறவுகள் கஷ்டப்படுவதற்கும்,நீ என்னை ஜென்மவிரோதியாய் பார்ப்பதற்கும் அந்த மனுஷன் தானே காரணம்...

இதுவரை சொல்லாதவள் இறக்கப்போகும் தருவாயில் சொல்வதற்கு முக்கிய காரணம் என் மகன் கடைசி வரையிலும் இந்த தாயை வெறுத்து விட கூடாது என்பதற்க்காக தான்...நான் சொல்வதை உன் இதயத்தின் கடைசி மூலையில் போட்டு விட்டு உன் சிந்தையில் இருந்து மறப்பது நல்லது...

காதலித்து தான் உன் தந்தையை கரம் பிடித்தேன்.. முதலில் உன் தாத்தா எங்கள் காதலுக்கு மறுத்தாலும் அதன் பின் என் காதலின் தீவிரத்தை கண்டு நான் காதலித்த உன் தந்தையையே திருமணமும் செய்து வைத்தார்.

எங்கள் காதலின் பரிசாக உங்க அக்காவும் -நீயும் பிறந்தாய்..இது வெறும் காதல் கதையாய் மட்டும் இருந்திருந்தால் உன் தாயை அன்னை தெரசாவாக நீ பார்த்திருக்கலாம்..விதியும் சரி இந்த பாழாய் போன சில மனிதர்களும் சரி காலத்தை விட மோசமானவர்கள்.. சிலர் அவரவரின் தற்காலிக சந்தோஷத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்..மூலக்கதையை சொல்வதற்கு முன் கிளைக்கதையை சொல்லி விட்டு முடிவை கடைசியாய் சொல்வதே உத்தமம்..

உன் அக்கா வேதவல்லி உன் மாமா பையன் விநாயகத்தை காதலிக்கும் போது உன் அமைதியான அப்பா வானத்துக்கும் -பூமிக்கும் ஏன் குதித்தார்..?? எப்போதுமே பாசமாக பழகும் உன் அத்தை ஆனந்தி உன் அக்கா ஏன் அவ வீட்டு மருமகளாக வரக்கூடாதுன்னு உன் மாமா சின்னாவிடம் சண்டை போட்டாள்..??

உன் அக்கா வேதவல்லி -மச்சான் விநாயகம் சொந்தம் என்ற முறையில் கல்யாணத்துக்கு முன்னாடியே அத்துமீறியதால் உன் அக்கா கர்ப்பம் ஆனதால் வேறு வழியின்றி வீட்டின் பெரியவர்கள் வற்புறுத்தலின் பேரில் உங்க அப்பாவும் -அத்தையும் வேண்டாவெறுப்பாக வேறு வழியின்றி அடுத்தவர்களின் கட்டாயத்தின் பேரில் திருமணத்தை நடத்தி வைத்தனர். மாமன் பையன் -அத்தை பொண்ணு உரிமையில பழகுனாங்க,கொஞ்சம் அவசரம் பட்டாலும் முறையா கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க..இதுல என்ன தப்பு இருக்கு..

இந்த அப்பாவுக்கும் -அத்தைக்கும் என்ன ஆச்சு.. மூஞ்ச தொங்கப்போட்டிட்டு அலையுறாங்கன்னு நீ வருத்தப்பட்டு தனியா புலம்பியதை நானும் கேட்டேண்டா

உங்க அக்கா கல்யாணத்துக்கு அப்புறமா தான் உங்க அப்பன் கவலையாலயே கண்ணீர் சிந்தி சிந்தி செத்தான்..நல்லா இருந்த உங்க அத்தையும் திடீர்னு மாரடைப்புல போயிட்டா.

இவையெல்லாம் உனக்கு தற்செயலா தெரியலாம்.. எல்லாமே அவங்க,அவங்க செஞ்ச பாவம்டா,விதி வலியது இதுல ஒரு தப்புமே செய்யாத நீயும்,நானும் அப்புறம் உங்க அக்கா, உன் மச்சான் விநாயகம் பாதிக்க பட்டு இருக்கோம்..

என்னடா சாக போகுற தாய்க்கிழவி புதிர் போடுறேன்னு நினைக்குறியா??

ரொம்ப நேரம் தெரியாத புதிருக்கு விடை சொல்லலைன்னா குழப்பம் வந்திடும் இல்லைன்னா சுவாரஸ்யம் போயிடும்..புதிருக்கு விடை சொல்லுற நேரம் வந்திடுச்சு ஆனா இந்த புதிரோட விடையை அப்பாவியான உன் மாமன் சின்னாக்கிட்டயும்,பாவத்தின் சம்பளத்துக்கு பரிசாக கிடைத்த உன் மச்சான்

விநாயகத்துக்கு கிட்டயும்,உங்க அக்காவின் நல்வாழ்விற்க்காக சொல்லிடாதே…மூச்சை விடுவதற்கு முன் உனக்கு பாரத்தை தந்து விட்டு போகிறேனே என வருந்துகிறேன்..என் பாசம் தராத பிள்ளைக்கு பரிசுக்கு பதிலாக சிலுவைகளை சுமக்க விட போகிறேனே என வருந்துகிறேன்.என் பாரத்தை விரைவில் மண் சுமக்க போகிறது..உன் பாரத்தை யார் சுமப்பாரோ??

நான் இத்தனை வருடம் சுமந்த வலிகளை உன் மீது விட்டு விட்டு செல்வதற்கு முக்கிய காரணம் நான் இறக்கும் போது நீ பாசத்தோடு எனக்காக சிந்தும் ஒரு துளி கண்ணீர் மட்டுமே..நான் இதுநாள் வரை காட்டாத அன்புக்கு உன்னிடம் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன் அடுத்த ஜென்மத்திலாவது நீ என் முகசாயலில் பிறக்க வேண்டும் இந்த உலகத்தின் ஒட்டு மொத்த அன்பையும் உன் மீது காட்ட வேண்டும்..

கடைசியாய் உன் இருதயத்தை இரும்பாய் ஆக்கிக்கொள், உன் அப்பா நீ நினைக்கும் அளவுக்கு நல்லவர் இல்லை..

உன் அக்காவின் கணவன் விநாயகம் உன் தந்தைக்கு பிறந்தவன் இந்த உண்மை உன் அப்பாவின் டைரியை படித்த போது தான் எனக்கே தெரிந்தது அதன் பிறகுதான் தாத்தாவின் கூட்டுகுடும்பத்திலிருந்து விலகி தனியாக வாழத்தொடங்கினோம்..ஒரே குடும்பத்தில் நீ,நான் அக்கா,அப்பா என்று ஒன்றாக இருந்திருந்தாலும் உண்மையை உணர்ந்த தருணத்திலிருந்து உன் அப்பாவிடம் பேசுவதையே நிறுத்தி விட்டேன்..இந்த பாழாய்ப்போன உடலில் இத்தனை காலம் உயிரை வைத்திருந்தது உனக்காகவும், என் மகளுக்காகவும் மட்டுமே..தயவு செஞ்சு இந்த அம்மாவை ஒரு போதும் வெறுத்து விடாதே…முடிஞ்சா நான் செத்ததுக்கு அப்புறம் கொல்லி போடு அப்ப தான் இந்த அம்மாவின் ஆன்மா சாந்தியடையும்..

(இந்த கடிதத்தோடு சேர்த்து உங்க அப்பாவின் டைரியையும் அனுப்பியுள்ளேன்..நீ படித்து முடித்ததும் யாரும் கண்காணாதவாறு அந்த டைரியை கொளுத்தி விடு..கடைசிவரை உன் அப்பன் உத்தமன் என்ற போர்வையில் இந்த சமூகத்தின் பார்வையில் இருந்து விட்டு போகட்டும்..

இப்படிக்கு

நீ எனக்காக சிந்தும் ஒரு துளி அன்புக்காக மருத்துவமனையிலோ,சுடுகாட்டிலோ

காத்திருக்கும் அம்மா

-ராஜாத்தி -

கண்ணீர் துளியோடு ஊர் செல்லும் பஸ்ஸை நோக்கி பேருந்துநிலையம் ஓடினான் சௌந்தரபாண்டியன்.

சே கார்கவி கார்த்திக்

# பெருவெளியெங்கும் புத்தனின் நத்தை குழல்கள்

ஒரு புள்ளியில் ஆரம்பித்து
இரப்பர் கொண்டு
அழிக்கஇயலாத ஒரு பெருவெளியில்
சிறு வெற்றிடமாய் நான் படர்கிறேன்…
தாவரங்கள் என்னுள் ஊருவி
வேர்களை புதைத்தூன்றி
தன்னை நிலை நிறுத்தி
என்னை நேர்ப்படுத்துகின்றன
அண்டபெருவெளியின் ஏதோ ஒரு சிறு
புள்ளியாய் பிறந்திட்ட நான்
பிடித்தவர் கண்களுக்கு நட்சத்திரமாய்
புரியாதவர்களுக்கு இருளை சற்று
விளக்கிய ஏதோ ஓர் விண்மீனாய்
காட்சியளித்துவிட்டு மறைகிறேன்…
சாமன்ய வெளிச்சத்தில்
பசி பட்டினி எனும்
அடர்ந்த இருளுக்கு
புன்னகை எனும் மறுப்பூசியிட்டு
கொஞ்சம் நேர நீட்டிப்பினை
வழங்கி நகர்கிறேன்…
யாருக்காக நான் பிறந்தேன்
யாருடன் நான் படர்ந்தேன்
யாருமில்லாமல் ஒளிர்கிறேன்
யாரென அறியாமலே அடையாள
அட்டையுடன் உலாவுகிறேன்
மொத்தமாக உறவென்றது
அடையாள அட்டையின் முகத்திரையை
கிழித்துவிட்டு
இந்த வெற்றிடம் நிரம்பிய
ஆகச்சிறந்த பெருவெளியின்
நத்தை ஓடுகள்…
அப்போதுதான் பிறக்கிறேன்
முழுமையாக அறிகிறேன்
என் பெயர் புத்தனாம்

# அரூப நர்த்தனம்

செ.புனிதஜோதி

கோ.வசந்தகுமாரன் அவர்களின் அரூப நர்த்தனம் என்ற கவிதை நூல் சமீபத்தில் கிடைத்தது.தமிழ் அலை வெளியீடு..160 பக்கங்களை கொண்டுள்ளதால் நீண்டக் கவிதையென்றே நினைத்தேன்.அத்தனையும் குறுங்கவிதைகள். முகப்புபடம் ஏதோவொரு ஒளிக்கருவியில் சிக்கிய சிற்பமாய் செதுக்கப்பட்ட பெண்ணின் சிலை. இந்தப் படத்திற்கும் தலைப்பிற்கும் கவிதைக்கு தொடர்புகிறதா? என்றால் இல்லையென்றும்,ஆம் என்றும் சொல்லலாம்.

அரூபம் உருவமற்றது உணரக்கூடியது. எதனை அப்படி உணர்ந்தார் இக்கவிஞர். மனக்கிளைகளில் ஆடக்கூடிய

கண்டு,கேட்டு உண்டு,உச்சரித்த மொழியின் நர்த்தனத்தை

அபிநயம் பிடிக்கும் பெண்ணின் முத்திரைப்போல் விழிகளால் உணர்ந்து

மனதால் நிறுத்தி விரல்களுக்கு அவள் கொண்டுவரும் வித்தையைக் கவிஞனும்

மேற்கொள்கிறான்.

அவனுக்குள் ஆடும் உணர்வு நர்த்தனத்தை உள்ளார்ந்து நேசித்து கவனித்து பெண் சிற்பத்தைப்போல் அளவு எடுத்து செதுக்கியுள்ளார்.

ஒவ்வொரு தூண்டிலில் ஒருமீன் எனும்

கணக்கில் அளவான வார்த்தையைத் தேர்ந்தெடுத்து இந்த நர்த்தனத்தை கவிதைமேடையில் அரங்கேற்றியுள்ளார்.

எதை எப்படி சொல்லவேண்டும் என்ற கவிதை தட்பவெப்பத்தை உணர்ந்தவர்.

நவீன ஓவியத்தைப்போல் அல்லாமல்

பளிச்சென மின்னலடிக்கும் ஓவியத்தைப்போல் இவரின் சொல்லாட்சியிருக்கும்.ஐம்பெரும்பூதங்களை அளவெடுத்து வாழும் தன்மைகேற்ப

தன் கவிதையின் சொல்லில் நிறுத்திவைப்பவர். வரி சுமையின் கொடுமையை நன்கு உணர்ந்தவர் என்பதால் வாசகனுக்கு எப்போதும் தருவதில்லை அந்த சிரமத்தை. சொற்சிக்கனக்காரர் என்று இவரின் கவிதையின் வாயிலாக உணரமுடிகிறது.

கவிஞர் வசந்த குமாரன் அவர்கள் தன்னுரையில்

இவ்வறாக சொல்கிறார் கவிதை என்பது

தரையில் விழுந்த மீனைப்போல் துடிக்கவேண்டும் என்கிறார்.பழங்களை ஊறவைத்துச் சாராயம் காய்ச்சுவதைப்போல் இருக்கவேண்டும் என்கிறார். என்னடா இப்படி பில்டப் பண்ணுகிறாரே என்று பக்கங்களைப் புரட்டுகிறேன்.

நேர்த்தியான வடிவமைப்பு

பாலே நடனக்காரியின் கோட்டோவியத்தோடு தொடங்குகிறது

புத்தகமே கவிதையாகக் காட்சிப்படுகிறது இப்போது.

மயிலிறகைப்போல் வருடக்கூடியது தென்றலைப்போல் குளுமையைத் தரக்கூடியது. நெருப்பைப்போல் சுடர் விடக்கூடியது.படிக்கும் ஒவ்வொரு கணமும் நீங்களும் உணர்வீர்கள்.

இப்படியாக தொடங்குகிறார் ஒருகவிதையில்

தூண்டிலின்
இருமுனைகளிலும்
இரை

அது எப்படி ஒருமுனையில்தான் இரையிருக்கும் இருமுனையில் எப்படி

சிந்தனையைத் தூண்டுகிறார்.புழுவை உண்ணக்கூடிய

மீன் ஒருமுனையில்

மறுமுனையில் மீனை உண்ணக்கூடிய இரையாக நாமா?என்ற வினாவும்

விழியில் தொடங்கக் கூடியக் காதலை சொல்வதைப் போலவும் உணரமுடியும்.

மற்றொரு கவிதையில்

கடவுளாகப் பிறந்தேன்
பாவம் செய்து
பாவம் செய்து

மனிதனாகிவிட்டேன் என்கிறார்

எல்லோரும் கடவுளைப்போல் பிறக்கிறோம். சூது,வஞ்சனை,போட்டி,பொறாமை என்ற

தீய எண்ணங்களற்றவர்களாய் இருக்கிறோம்.

வளர,வளர எல்லாம் நயவஞ்சக சூழ்ச்சிகளைப் பெற்று மிருகத்தைப்போல் மாறிவிடுகிறோம்.அந்த மிருகம் தான் மனிதன் என்ற பெயரில் உலாவருகிறது.

என்பதை அனுபவப்பெற்றவர்கள் உணர்ந்த செய்தியை எளிதானச் சொற்களில்

விளக்கி விடுகிறார்.

உதிர்ந்து கிடக்கும் இறகை
மிதித்துவிடாதீர்கள்
ஒரு காலத்தில் அது
உயரத்தில் இருந்தது

என்கிறார்

இறகையா சொல்கிறார்? இல்லை என்பது

உங்களுக்கும் விளங்கும்.நன்கு வாழ்ந்தவரின் வாழ்க்கை, நம்மை தூக்கி வளர்ந்த பெரியோர்கள்,ஒருகாலத்தில் உச்சத்தில் இருந்த கவிஞர்கள் காலவோட்டத்தில் எல்லாம் மாறி சராசரி மனிதனாகக் கூட மதிக்காமல் இவர்கள் பெரிய மகானைப்போல் உணர்ந்து கொள்வதும் இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். எல்லோரும் மனிதர்கள் உங்கள் ஏளனப்பார்வையை

வீசாதீர்கள். என்ற மிகப்பெரிய செய்தியை எளிதாக நான்கு வரிகளில் ஒவ்வொருவருக்குள் மனிதத்தைக் கடத்தி விடுகிறார். இப்படி சிறு,சிறுகவிதைதான் வீச்சு பெரிதானவையாக விரிக்கின்றன.

வேருக்கும்
பூவுக்குமிடையே
ஓடுகிறது
ஓர் நதி

என்பார்

ஜென் பார்வையைப் போல் தோன்றும்

கவிஞர் பழனிபாரதி,வண்ணதாசன் அவர்களின் பல கவிதைகள் கண்முன்னே வந்துசெல்கின்றன.

மூன்றாம் பாலினத்தின்

முறையீடு

எனைப் புதைக்குமிடத்தில்

மரம் நடுங்கள்.

அதன் கிளைகளிலாவது

பூப்படைகிறேன்.

மூன்றாம் பாலினத்தினரின் எண்ணக்குமுறலை,ஆசையை கவிதையாக வடித்துள்ளார்.

தொலைவது நல்லது

தொலையுமிடத்தில்

ஒரு நதிக்கரையிருந்தால்

இன்னும் நல்லது என்கிறார்.

நம்மிடையே தொலைந்து போன நதியைப்பற்றியும். நம்நாகரீகம் நதிகரையில் தோன்றியதையும்,நம் விவசாயம்,கால்நடை வளர்ப்பு, மொழி

எல்லாம் நதிக்கரையில் பெற்றோம்.

நதியை இழக்கும் நேரத்தில் எல்லாம்

தொலைந்து போகும் என்பதை ஆணித்தரமாக கவிதையில் பதிவுசெய்கிறார்.

எளிய வரிகளில் மிகப்பெரிய விசயத்தை

நான்கு வரிகள் சொல்வதில் கவிஞர் கோ.வசந்தகுமாரனுக்குநிகர் அவர் தான் என்றே சொல்லவேண்டும்.

தேநீர் கவிதைகள் தொடங்கி காதல்,தத்துவம்,வி ழுமியங்கள்,இயற்கை,

வாழ்வியல்,அனுபவங்கள் எல்லாவற்றையும் சலிப்பற்ற முறையில்

எளிதாக வாசகனுக்கு கொண்டுசேர்த்துவிடுகிறார்.

அரூபநர்த்தனம் எல்லோர் மனதிலும்


மீனைப்போல் துடித்துக்கொண்டிருக்கிறது.பாலே நடனக்காரிப்போல் ஆடிக்கொண்டேயிருக்கிறது.வாசித்து முடித்த பின்னும்.

ஐ.தர்மசிங்

# சதி



எங்க தாத்தாவும்
அவங்க தாத்தாவும்
முகமுகமாக சந்தித்து கொள்வதேயில்லையாம்
அப்போது
தொலைவில் இருந்ததாம்
பள்ளிக்கூடம்
எங்க அப்பாவும்
அவங்க அப்பாவும்
புன்னகைத்துக் கொள்வார்களாம்
அப்போது
பக்கத்து ஊரில் இருந்ததாம்
பள்ளிக்கூடம்
நானும் அவனும்
வார்த்தைகளால் சந்தித்து
அளவளாவினோம்
அப்போது
அருகருகே இருந்தோம்
ஒரே வகுப்பறையில்...
எங்கள் மகிழ்ச்சியில்
குதூகலம் அடைந்தன விளையாட்டுகள்
இணைபிரியாமல் நகர்ந்தன
கல்லூரி நாட்கள்
உள்ளங்களை நெருங்க வைத்தன
உல்லாசப் பயணங்கள்
ஒரே இலையில் நட்பை பகிர்ந்தோம்
ஒரே பாயில் சோர்வை
தொலைத்தோம்
இருவர் வீட்டு விழாக்களிலும்
வியர்வை சிந்தினோம்
இருவர் வீட்டு சாவுகளிலும்
கண்ணீர் சிந்தினோம்
காலங்காலமாக தொடர்ந்த
களங்கமற்ற எங்கள் உறவால்
அறுந்து தொங்கியது
அதன் ஆணிவேர்
இப்போது
உயர் கல்வி பயிலும்
எனது மகனும்
அவனது மகனும்
புன்னகைத்துக் கொள்வதோடு
நிறுத்திக் கொள்கிறார்கள்
இருவர் பெயரையும்
தங்கள் இயக்கப் பதிவேடுகளில்
பதிவு செய்து
தனது சல்லி வேர்களால்
அவர்களை
தனித்தனியாக
சுற்றி வளைத்திருக்கிறது
சாதி எனும் சதி...
உருவமற்ற நிஜமே
உனக்கு ஒரு சாவு வராதா?



# கேள்வி

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

சுழன்றடிக்கும் காற்றில் பனையோலைகள் தலை விரித்து ஆடுவதை நிமிர்ந்து பார்த்துக் ;கொண்டிருந்தான் மாலவன். தனக்கு முன்னே பனையோலைக் கடகத்தில் நிறைந்திருந்த அவித்த பனங்கிழங்குகளை தெய்வானைப்பிள்ளையின் கைகள் மளமளவெனத் துப்புரவாக்கிக் கொண்டிருந்தன. முன் வாராந்தாவில், வாகாக தூணில் சாய்ந்தவண்ணம் அவள் கால்களை நீட்டி அமர்ந்திருந்தாள். காம்புச் சத்தகத்தால் கிழங்கின் தும்பை வார்ந்து மாப்பிடிப்பான அடிப்பாகத்தை வட்டம்வட்டமாகச் சீவிய பின்னர் சத்தகத்தின் காம்புப் பக்கத்தால் மிகுதிக்கிழங்கைப் பிரித்து, பீலியை நீக்கிவிட்டு,அடுத்த கிழங்கிற்கு கை பாய்ந்தது. வெயில் ஏறுமுன் சீவிக் காயவிட வேண்டும் என்ற இலக்கில் கைகள் பரபரத்தன. உதவிக்கு வராமல் பராக்குப் பார்க்கும் பேரனைக் காண சினம் மூண்டது தெய்வானைப்பிள்ளைக்கு.

"என்ன மேனை வானத்தைப் பார்க்கிறாய்?"

"பனை ஓலையைச் சுத்தி குளவி பறக்கிறமாதிரிக் கிடக்குது."

தெய்வானைப்பிள்ளை ஆய்ச்சி இருந்த இடத்திலிருந்து பார்க்க பனையோலைகள் தெரியவில்லை. மழை வரும்போன்றிருந்ததை அவள் அப்போதுதான் அவதானித்தாள்.

நேற்று பனம்பாத்தி கிண்டி கிழங்குகளை தோல் உரித்து தலை வால் வெட்டி அவிப்பதற்கு ஆயத்தம் செய்தபோது, "சத்தியமாய் என் ஆட்சி நீடிக்கும்" என்று உறுதியளிப்பது போல் சுட்டெரித்த சூரியபகவான் இன்று காலை முதல் கருமுகில்களிடையே மறைந்து மறைந்து விளையாடிக் கொண்டிருந்தான். இப்போது இப்படி அகாலத்தில் மழை வருவதும் அதனோடு சேர்ந்து சுழல்காற்று சோடிபோட்டு வருவதும் அடிக்கடி நிகழ்கிறது. இந்த நினைவு வந்ததும் ~கடவுளே,

இண்டைக்கு மழை வந்தால் இவ்வளவு கிழங்கும் பழுதாய்ப் போயிடுமே.. பிள்ளையாரே, இந்தப் பாடுபட்டு எடுத்த கிழங்கு. மழை வந்திடாமல் காப்பாத்தப்பா. உனக்கு விளக்கு வைக்க ஒரு போத்தல் எண்ணை வாங்கித் தருவன்.'' என பிள்ளையாருடன் பேரம் பேசினாள் ஆய்ச்சி.

மாலவன் உள்ளே போய் குளவி பறப்பதைக் கூறியதும் அப்பா, அம்மா, தங்கச்சி என்று குடும்பமே அங்கு கூடிவிட்டது.

ஆய்ச்சி மழையை எண்ணி கலவரப்பட்டாலும் அதுபற்றி அக்கறைப்பட அந்த வீட்டில் எவரும் இல்லை. இந்தக் காலத்தில் பனம்பண்டங்களை யார் விரும்புகிறார்கள்? வெளிநாட்டிலிருந்து இதே பொருளைப் பொதி செய்து அனுப்பினால் ஆவலாக வாங்குவார்கள்.;.

ஆய்ச்சியின் மனம் பழைய நினைவுகளுக்குத் தாவியது. அவளின் சிறு வயதில் பனங்கூடல்களுக்கு யார் முதலிலே போய் பனம் பழம் பொறுக்குவது என்று போட்டிபோட்டு காலைப் பொழுது விடியுமுன் ஓடிச்சென்று பொறுக்குவாரகள். பனம்பழங்களைப் பினைந்து களியை கறந்;தெடுத்து தடுக்கில் பரவி காயவைத்து பனாட்டுச் செய்வது அக்காவின் பொறுப்பு. அதற்கு முன், வீட்டினரின் பசியாறவும் பழங்கள் பயன்படும். பசுக்கள் இவர்களுடன் போட்டியிடுவது வழமை..

பனாட்டு மட்டுமே? பனங்காயப் பணியாரம், ஆலங்காய்ப் பிட்டு,முதலான பல வகை உணவுப் பண்டங்களுக்கு அது முக்கிய பொருளாக இருந்தது. களி கறந்த பின் பனங் கொட்டைகளை அடுக்கி மண்ணால் மூடி பாத்தி போடுவார்கள். அவை முளைவிடும்போது உருவாகும் பனங் கிழங்கைக் கிண்டி எடுத்துத்தான் ஒடியலாகவும் அவித்து புளுக்கொடியலாகவும் பாவித்தார்கள். ஆய்ச்சிக்கு அந்த உணவுகளை உண்ண வேண்டுமென்று மிகுந்த ஆசை. நிறைவேறாத ஆசை அவளிடமிருந்து ஒரு முனகலுடன் பெரு மூச்சாக வெளிப்பட்டது.

“வீட்டுக்குப் பக்கத்திலை பனை நிண்டால் உபத்திரவந்தானே? ஆற்ரை வீட்டிலையாவது பக்கத்திலை பனை வளர்த்துப் பாத்திருக்கிறியளே?''

மகள் காந்திமதி தன் காதுகளை வந்தடைய வேண்டும் என்பதற்காகவே கூறியதைக் கேட்டு தெய்வானைப்பிள்ளை ஆய்ச்சி சிரித்தாள்.

~வீட்டுக்குப் பக்கத்திலை பனை வளர்த்ததாம். பனை மற்ற மரங்கள் மாதிரியே? அதின்ரை ஆயுள் தெரியாமல் அவவின்ரை கதை. பனை, வீடு கட்டின பிறகு வளர்ந்திருந்தால் இந்தப் பெரிய பனை வளருவதற்கிடையில் பழம்வீடாகி இடிச்சுத் தள்ளப்பட்டிருக்கும். பனைக்குப் பக்கத்திலை இவை வீட்டைக் கட்டிப்போட்டு கதையைப் பாரன்.''

உள்ளெழுந்த நினைவு அவளைச் சிரிக்க வைத்தது. ஆய்ச்சியின் சிரிப்புக்குக் காரணம் தெரியாவிட்டாலும் அவர்களின் கோபத்தை அது உக்கிரமாக்கியது. ~காவோலையிலைதான் கூடிருக்கவேணும். அது விழுந்துதோ ஆபத்துத்தான்'' என்று மாலவன் பயங்காட்டவும் காந்திமதி தன்னுள் எழுந்த கோபம், பயம் எல்லாவற்றையும் மகன் மீது காட்டினாள். ~கதை சொல்லிக்கொண்டு நிக்கிறாய். போய் இதைச் சுடக்கூடிய ஆரையாவது கூட்டிக்கொண்டு வாவன்.'' குளவிக்கூட்டைச் சுட்டெரிக்க யாரையாவது கூட்டிவருவதற்காக ஈருருளியை எடுத்துக்கொண்டு மாலவன் புறப்பட்டான்.

ஆய்ச்சியின் மனம் மீண்டும் தன் சிறுபராயம் நோக்கி ஓடிச் சென்றது. இந்தக் காணி பனங்கூடலாயிருந்த பொழுதிற்கூட இங்கு குளவி கூடு கட்டுவது அரிது. இப்போது இந்தத் தனிப் பனையையே தேடிவருகிறது. கருங்குளவிக்கு கூடு கட்ட காவோலை இசைவானதுபோலும். அந்தக் காலத்திலை காவோலையைக் காண்பது அருமை. கல்லாலே கட்டின வீடுகளுக்கும் கூரைகள் ஓலைகளால் வேய்ந்தவைதான். வேலிகளும் பனையோலை, கிடுகு, மூரிமட்டை என வசதிக்கேற்ப அடைப்பார்கள். மாடுகளுக்கு உணவாக ஓலை கிழித்துப் போடுவார்கள். எங்காவது ஓலை வெட்டுவதாக அறிந்தால் அங்கே போய் தெய்வானைப்பிள்ளை, பெ;ட்டி இழைப்பதற்கு ஏற்ற குருத்தோலைகளைத் தேர்ந்தெடுப்பாள். குருத்தோலைகளிலும் முற்றல் கூடியது, குறைந்தது என வெவ்வேறு தரங்கள் உள்ளன. கூடிய முற்றலில் பாய்தான் இழைக்கலாம். அன்றைய பணப்பையான கொட்டைப்பெட்டி, விதம்விதமான பெட்டிகள் ஆகியவற்றை இழைப்பதில் தெய்வானைப்பிள்ளை திறமைசாலி. அதற்காகவே அவள் தேடித்திரிந்து ஓலை வாங்குவாள்.

பிளாஸ்ரிக்கும் பொலித்தீனும் அன்று பனம் பொருட்கள் உபயோகிக்கப்பட்ட இடங்களையே ஆக்கிரமித்துள்ளன. எவ்வளவு தேவைகளை பனம்பொருட்கள் பூர்த்தி செய்தன என்பதை நினைத்துப் பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கிறது. பனை தந்த பொருட்களை ஈடு செய்ய ஏதோ ஒன்று அல்ல பல வந்துதான் அதைப் பின்தள்ள வேண்டியிருந்தது. கடதாசி, காட்போட், பிளாஸ்ரிக், பொலித்தீன், கண்ணாடி இவ்வாறு பல வகை வகையாக வந்து, பனம் பொருட்களை அழித்தொழித்தன. அதுமட்டுமா? அவை இன்று தம்மைக் கண்டுபிடித்த மனிதகுலத்தையே அழித்துக்கொண்டிருக்கின்றன.

~குளவிக்கூடு எரிக்க ஒருதருமில்லையாம்.''

மாலவனின் அறிவிப்பு ஆய்ச்சியின் நினைவுத்

தொடரை அறுத்தது.

~நீங்கள் எரிக்கமாட்டீங்களே அண்ணை?''

தங்கை மாலதியின் வினா இது.

~சாதாரண குளவி இல்லையம்மா. இது கருங்குளவி. கடிச்சால் ஆபத்து. அதுவும் கூடு கலைந்து எல்லாக் குளவிகளும் வந்து கடிச்சால் சாகவேண்டியும் இருக்கும். அதாலைதான் பனை ஏறத் தெரிஞ்சவையே வரமாட்டம் எண்டு சொல்லுகினம்''

தந்தை சண்முகநாதன் கூறிய விளக்கத்தை விழி விரியக் கேட்டுக்கொண்டிருந்தாள் மாலதி.

~முருகேசனிட்டை கேட்டுப்பாத்தனியே? அவன் இதிலை விண்ணன். ஒருக்காப் போய்க் கேளடா. காத்தடிக்கிறதைப் பாத்தா காவோலை விழுந்திடும்போலை கிடக்குது.''

அம்மா சொல்லியது நடந்துவிடும் போன்றிருக்கவே மாலவன் முருகேசனைத் தேடி புறப்பட்டான்.

ஆய்ச்சியின் மனமோ அவளது அண்ணன் கதிரேசபிள்ளையிடம் போய் நின்றது. தெய்வானைப்பிள்ளையின் மூத்த அண்ணன் அவர். மரமேறுவதில் வல்லவர். மளமளவென்று அவர் பனையேறும் இலாவகத்தை எல்லோரும் வாய் பிளந்து நின்று பார்ப்பார்கள். பனங்கூடலிலே தவழ்ந்து வளர்ந்தவரல்லவா? அதனால் பனைகளில் ஊறி நிறைந்து தூங்கும் கள்ளும் கருப்பநீரும் கொண்ட முட்டிகள் அடிக்கடி காணாமற் போய்விடும்.நுங்குக் குலைகளை வெட்டிவந்து தங்கை, தம்பிகளுடன் சேர்ந்து சுவைப்பார். நுங்கின் மூள் பகுதியை சதக்கென சீவிவிட்டு நுங்குக் கண்ணுள் சுண்டுவிரலை நுழைத்து தோண்டி வாயை வைத்து உறிஞ்சி ருசிக்கும்போது அதன் சுவையே தனிதான். தங்கையும் தம்பிகளும் தம் பிஞ்சு விரல்களால் நுங்குடன் போராடுவதைப் பார்க்கும்போது அவருக்குச் சிரிப்பாக இருக்கும். நுங்கு மூளிலிருந்து பிரித்துப் போட்டிருக்கும் பணுவில்களுள் பெரிதாகப் பார்த்தெடுத்து அதற்குள் நுங்கைத் தோண்டி விட்டு அவர்களுக்குக் கொடுப்பார்.

நுங்குகளை சுவைத்து முடிந்ததும் அவற்றைச் சீவி மாடுகளுக்குப் போட்டு நுங்குக்குலை வெட்டிய தடயமே இல்லாமல் செய்துவிடுவார். ஆனால் ஒரு நாள் நுங்குக்குலை விழுந்த சத்தங் கேட்டு விரைந்து வந்த அப்புவிடம் அவர் பிடிபட்டுவிட்டார். அப்பு அண்ணையைப் பனையுடன் கட்டிவைத்து தன் கோபம் தீரும்வரை விளாசினார்.

~முருகேசனுக்கு வயது போனதாலை வேலையொண்டும் செய்ய, பிள்ளையள் விடுகிறேல்லையாம். பிள்ளையளாலையும் செய்யேலாதாம்''

ஆய்ச்சி நினைவுகளின் பிடியிலிருந்து விடுபட்டு மாலவன் சொல்லியதைக் கிரகிக்க முயன்றாள் ~அவையள் செய்த வேலைதானே?''

காந்திமதியின் கேள்வியில் குற்றம் காணும் தொனி கலந்து வந்தது.

~இது வேலை இல்லையம்மா. இது ஒரு கலை. இதுக்கு தனித்துவமான திறமை வேணும்.''

பேரன் கூறியது நூற்றுக்கு நூறு சரி என ஆய்ச்சி தனக்குள் நினைத்தக்கொண்டாள். இவனுடைய பூட்டன் இதை உணர்ந்திருந்தால் மாலவன் இப்படி ஓடித் திரியாமல் தானே இந்தக் குளவிக் கூட்டைச் சுட்டிருப்பான்.

~நீ இப்பிடித்தான் கதைப்பாய். வேலையோ கலையோ எதையெண்டாலும் செய்து குளவிக் கூட்டை இல்வாமல் செய்..''

காந்திமதியின் குரல் கோபத்துடன் ஒலித்தது. அம்மாவுடைய கோபத்தின் மூலவேரை மாலவன் ஊகித்து மனத்தினுள் சிரித்துக் கொண்டான்.

~நாலைஞ்சு கருங்குளவியள் பறக்கேக்கையே கவனிச்சிருந்தால் இப்பிடிக் கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லை. நாங்கள் ஆர் பனையை நிமிர்ந்து பார்க்கிறம்? இப்பிடி கஷ்டப்பட ஏலாது. நிக்கிற பனையளை தறிச்சு வித்துவிட்டால் சுகம்.''

சண்முகநாதன் சொல்லியதைக் கேட்டதும் தெய்வானைப்பிள்ளைக்கு கோபம் பீறிட்டது. அதனுடன் சேர்ந்து சொற்கள் சொரியத்தொடங்கின.

~இந்தக் காணி ஒரு பனங்கூடல். வீடு கட்ட, அது இதெண்டு முதலே கொஞ்சப் பனைகளைத் தறிச்சாச்சு. சண்டையோடை மிச்சமும் போச்சு. இதுக்குள்ளை வீட்டைக் கட்டிய பிறகு வடலிகள் முளைத்ததுமே மண்ணெண்ணை ஊத்தி அழிக்கிறீங்கள். இப்ப நிக்கிற ஐஞ்சு பனையளையும் தறிக்கவேணும் எண்டு சொல்லுறியள்..''

''அழிக்காமல் அதுகளை வளரவிட்டு மனிசர் கஷ்டப்படவே?''

சண்முகநாதனும் விடுவதாக இல்லை. ஆய்ச்சியும் பனையின் பக்க நியாயங்களை தயங்காமல் எடுத்துக் கூறினாள்.

''அதுகள் வந்து உங்களை கஷ்டப்படுத்துதுகளோ?''

~வீட்டு மூலைக்குள்ளையே இருக்கிறியள். ஊரிலை என்ன நடக்குதெண்டு ஏதும் தெரியுமே? பழங்காலத்தைப் போலையே இப்பவும் நடக்குது? பனையேற ஆரும் வருவினமே? அருமையாயக் கள்ளுச் சீவிக்கொண்டு இருக்கிற கொஞ்சப் பேரும் குறைஞ்சுகொண்டுவருகினம். பனையோலை, மட்டை எல்லாம் தேடுவாரில்லை.

வேலியள் மதில்களாகுது. பனைவடலியள் வளந்து மரமாகுமட்டும் சும்மா விடேலுமே? ஓலை வெட்டி, கங்கு பிரிச்சு சரியாயய் வளக்கவேணும். இதுகளைச் செய்ய ஆரிருக்கினம்? செய்விக்க செலவு என்னாகும் தெரியுமே?'' சண்முகநாதன் ஒரு பிரசங்கமே செய்து முடித்தார்.

~மா, பிலா எல்லாம் வைச்சு, வளத்து பழங்கள் என்னண்டு பிடுங்கிறீங்கள்? பனையிலையும் ஏறிச் செய்தாலென்ன?''

இரு பக்கங்களிலிருந்தும் கேள்விகள் மாறி மாறி அம்புகளாகப் பாய்ந்தன.

மாமியார்க் கிளவியிடம் இந்த சிந்தனை பிறந்தது அவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது மாலவனுக்கு அது வியப்பை ஏற்படுத்தவில்லை. அவளது சீரிய சிந்தனைகளால் வளப்படுத்தப்பட்டு அமம்மம்மாவின் மடியில் வளர்ந்தவன் அவன். அடிக்கடி அம்மம்மாவின் கதைகளில் கலந்து வந்து தரிசனம் தநத அவளது அண்ணன் கதிரேசபிள்ளையிடமிருந்து அவளுக்குக் கிடைத்த சீதனம் இது என மாலவன் புரிந்து வைத்திருந்தான்.அந்த அண்ணன் உரையாடலால் மட்டுமன்றி தான் வாசிக்கும் நூல்களை வாசிக்கக் கொடுத்தும் அம்மம்மாவை வித்தியாசமான ஒரு பெண்ணாக அக்காலத்திலேயே உருவாக்கியிருந்தார் என்பதை மாலவன் அறிந்திருந்தான்.

ஆய்ச்சி தனியாக கிழங்குகளை சீவி முடித்திருந்தாள். ஆனால் சூரியன் கிரணங்களை அனுப்ப மறுப்புத் தெரிவித்துக்கொண்டிருந்தான். தலைவாசல் கொட்டிலினுள் தலைநீட்டிய ஒளிக்கிரணங்களைத் தேடிப்பிடித்து, தட்டுச்சுளகினுள் பரவிவைத்திருந்த பனங்கிழங்குச் சீவலை வைத்துக் காயச் செய்யும் முயற்சியில் ஆய்ச்சி ஈடுபட்டிருந்தாள்.

''மாலவன் இருக்கிறானோ?''

''யார் தம்பி நீர்?''

''மாலவனோடை ஒண்டாய்ப் படிக்கிறனான்.''

ரமேஷ் வந்து அம்மாவுடன் கதைக்கிறான் என காதில் விழுந்த குரல்களிலிருந்து மாலவன் ஊகித்தான். உடனே எட்டிப்பார்த்து '' ரமேஷ், இங்கை வாடா'' என்று நண்பனைக் கூப்பிட்டான்.~என்னடா மச்சான், வீட்டை வந்தனியாம். என்ன பிரச்சனை? அம்மாவுக்கு அதைப்பற்றி சரியான விளக்கமில்லை.''

~இங்கை வந்து பார் மச்சான். இந்தப் பனையிலை குளவிக்கூடொண்டு.''

~இதேடா விஷயம்? பொழுதுபட எரிச்சுவிடுவமே?''

~நீ செய்வியோடா? ஒருதரும் செய்யமாட்டினமெண்டு உங்கடை வீட்டிலை சொல்லிச்சினம்?''

வியப்பு மாலவனின் குரலை ஆக்கிரமித்திருந்தது.

~நாங்கள் படிக்கவேணும். இந்த வேலையள் செய்யக்கூடாது. எண்டு அவை சொல்லுறது சரி. ஆனால் மச்சான், உன்ரை வீட்டிலை பிரச்சனையெண்டாலும் அதே சட்டம் எண்டுசொல்லமுடியுமே?''

மாலவனின் வாயை ரமேஷின் அன்பு அடைத்துவிட, கை ரமேஷை அணைத்துக்கொண்டது.

~வாடா கொஞ்ச ஆயத்தங்கள் செய்யவேணும். பழந்துணி, கம்பி, கொக்கத்தடிகள் இரண்டு'' ரமேஷ் சொல்லச்சொல்ல மாலவன் எடுத்துவந்தான்.

~ரமேஷ்அண்ணையா குளவிக் கூடு எரிக்கப்போறார்?'' என மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாய் ஓடிவந்த மாலதி ஒரு கோரிக்கையை முன்வைத்தாள்..

~மேஷ் அண்ணை, எங்கட அண்ணைக்கும் சொல்லிக்கொடுங்கோ. அடுத்தமுறை குளளவி கூடு கட்டினால் அண்ணையே அதை எரிக்கவேணும.''

~பழங்காலத்திலை எரிச்சமாதிரித்தான் எரிக்கப் போறியளோ?''

இவர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த தெய்வானைப்பிள்ளையின் வினா இது.

~ஓம் அம்மம்மா. வேறை என்ன செய்ய?''

''வயல் உழ, அரிவி வெட்ட,, சூடு மிதிக்க, இப்பிடி எத்தனையோ வேலையளை புதிய முறைகளால் செய்யேக்கை ஏன் பனைகள்சம்பந்தமாய் ஒண்டையும் புதுமுறையிலை செய்யிறேல்லை?''

''அம்மம்மா சொல்லுறது சரிதான். இதை நீங்கள் சொல்லுறதுதான் ஆச்சரியமாயிருக்குது..''

சொல்லியவாறே ரமேஷ், மாலவனைப் பார்த்து முறுவலித்தான்.

~உண்மைதான் அப்பன். என்ரை அண்ணை இப்பிடிக் கதைச்சதுதான் அவரின்ரை உயிரைக் கொண்டுபோச்சுது. அவரைப்போலை ஆக்கள் இருந்திருந்தால் யாழ்ப்பாணம் பனம்பொருள் ஏற்றுமதி செய்திருக்கும். ''

~இப்பவும் பனை வளர்க்கவும் அது சார்ந்த அபிவிருத்திக்குமென்று அரசாங்கம் தனிக் கவனமெடுக்குது..''

~வாயாலை சொல்லிறத்தாலையும் எழுதி வைக்கிறதாலையும் அபிவிருத்தி வராது தம்பி. செய்துகாட்டவேணும். அந்த விசயத்திலை மனசார ஈடுபாடு இருந்தால்தான் தன்னை அர்ப்பணிச்சு வேலை செய்வினம் கண்டியோ. கூலிக்கு மாரடிக்கிறவை மேலிடத்தைப் பேய்க் காட்ட, அறிக்கை அனுப்ப, ஏதோ செய்வினம். அபிவிருத்தி ஒண்டும் வராது.''

கிடைக்கிற சூரிய ஒளியை இயன்றவரை முழுமையாகப் பயன்படுத்தி எப்படியாவது சீவிய கிழங்கைக் காயவைப்பதற்காய் தட்டுச் சுளகை நகர்த்தியபடி ஆய்ச்சி கூறினாள்.

~இப்ப புது முறையிலை குளவி சுடவேணும் எண்டு சொல்லிறீங்களோ?''

ரமேஷ் தன் வேலையைத் தொடர்ந்தபடியே கேட்டான்.

~அதுமட்டுமில்லை மச்சான். அம்மம்மாவின்ரை ஆசைகள் எத்தினையோ. பனைகளை தோப்புகளாய் வளர்க்க வேணும். அதை வளர்க்க, ஓலை வெட்ட, கள்ளு, கருப்பணி சேகரிக்க, பனம்பொருட்கள் உற்பத்தி செய்ய, அவற்றை உலகளாவிய ரீதியிலை சந்தைப்படுத்த எண்டு எல்லாத்தையும் நவீன முறைகளிலை திட்டமிட்டுச் செய்ய வேணுமாம்.''

~அவ சொல்லுறது சரிதானே. பனை எங்களின்ரை அடையாளம். அதை அபிவிருத்தி செய்யிறது எங்களின்ரை கடமை..''

~ஏதோ ஆராய்ச்சியள் செய்யினம். புத்தாக்கம் செய்யினம். அதிலை நடக்கிற போட்டியளிலை பரிசெடுக்கினம். நீங்கள் செய்யிறேல்லையே?''

~இல்லை. இனித்தான் செய்வம்.''

~அந்த நேரம் நீங்களெண்டாலும் பனை வளத்தை பெருக்கிறது சம்பந்தமாய் யோசிச்சு செய்யுங்கோ''

~கட்டாயம் அம்மம்ம.க்.நான் போட்டு, இருட்டுப்பட வாறன் அம்மம்மா''

ரமேஷ் விடை பெற்றுப் புறப்பட்டான் ஆய்ச்சி புழுக்கொடியலில் கவனமானாள். மாலவனும் அம்மாவிடம் ஏதோ நொண்டிச்சாக்கு சொல்லிக்கொண்டு வெளியே சென்றான்.நேரம் நகர, மாலை நேரம் கடந்துகொண்டிருந்தது.~அம்மா, அம்மா'' என்று அலறியபடி மாலதிஓடி வந்தாள்.

~என்ன? என்ன நடந்தது?''

~காவோலை சரிஞ்சுபோச்சு.''

பயமும் பதற்றமுமாக அவளது உடலும் குரலும் நடுங்கின.

~சரிஞ்சதுதானே? விழேல்லைத்தானே. இன்னும் கொஞ்ச நேரத்திலை அந்தப் பெடியன் வந்து எரிச்சுப்போடுவான்.''

~கடவுளே, இப்பதானே கூடு கண்ணுக்குத் தெரியுது. ஒரு உரிக்காத தேங்காயளவு இருக்குமப்பா.''

மாலதியை தந்தை தேற்றிக்கொண்டிருக்கும்போதே தாய் பயத்தை மேலும் பெருக்கச் செய்தாள்.

~இதுக்குள்ளை இவ வேறை. என்ன கதைக்கிறதெண்டு தெரியாமல்...'' என சொல்லியவாறே திரும்பிய சண்முகநாதன் அநதக் கூட்டைக் கண்டு திகைத்துவிட்டார். ~சரியான பெரிய கூடுதான்.'' என தன்னை மறந்து கூறிவிட்டார். அந்தக் கணம் முதல் மூவரும் அந்த ஓலையையே பார்த்துக்கொண்டிருந்தனர். தந்தை பனைகளை தறிப்பது பற்றி யோசித்துக்கொண்டிருக்க, மகள் குளவியை அழிக்கும் முறையைப் பயிலவேண்டும் என தீர்மானித்துக்கொண்டாள். ரமேஷ் ஈருருளியில் வந்திறங்கவும் எல்லோருடைய மனங்களிலும் நிம்மதி பரவியது. ~வாடா, வாடா'' என்றவாறு மாலவன் அவனை எதிர்கொண்டான்.

~மண்ணெண்ணை வேணுமடா.''

~இந்தா. நீ சொன்ன எல்லாம் ரெடி''

~இன்னும் கொஞ்சம் இருண்டால்தான் நல்லது மச்சான். உங்கடை அம்மம்மா என்னை நல்லாய் சிந்திக்க வைச்சிட்டா.''

~ஒரு நாள் கதைச்சதோடை உனக்கு உப்படி என்டால் அவ வளர்த்த என்னைப் பற்றி யோசிச்சுப்பார்.''

ரமேஷ் கூறியதற்கு மாலவனின் பதில் இது.

~நான் இண்டைக்கு பிறேம் அண்ணையோடை இதைப்பற்றி கதைச்சனான். அவர் ~புதிய சிந்தனை| சங்கத்தின்ரை தலைவர். தங்களுடைய சங்கம் இதை செயல்படுத்த தேவையான முயற்சி எடுக்கிறதாய்ச் சொன்னவர். அம்மம்மாவின்ரை ஆசைகள் நிறைவேறும்.''

~அவவுக்குச் சொன்னால் சந்தோசப்படுவா. நாங்களும் தேவையான உதவியளைச் செய்வம். அவவுக்குச் சந்தோசம் கொடுக்கிற விசயம் மட்டுமில்லை. நூட்டுக்கே பயன் தருகிற ஒண்டு.''


மாலவன் மகிழ்வுடன் கூறினான்.

~நானும் உதவி செய்யப்போறன்.'' எனறவாறு மாலதி முன்செல்ல, ~பொம்பிளைப் பிள்ளையள் உந்த வேலையள் செய்யிறேல்லை'' எனக் கூறி காந்திமதி தடுத்தாள்.

~உங்களை அம்மம்மா இல்லாமல் அவவின்ரை அம்மாதான் வளத்திருக்கவேணும்''

~நீங்கள் சொல்லுறமாதிரித்தான் இருக்கவேணும் அண்ணை. இவ்வளவு நேரமும் உந்தக் குளவிக்கு எவ்வளவு பயந்தம். அதை அழிக்கிற முறையைத் தெரிஞ்சு வைச்சால் எவ்வளவு நல்லது. ஏனம்மா, பொம்பிளைப்பிள்ளை எண்டால் குளவி கடிக்காதே?''

மாலதியின் கேள்வி இது.



**மலர்மகள்**

# குறும்பாக்கள்

குளிர் அறையிலும்
ஒழுகும் வியர்வை
அப்பத்தா வயல்.

விசா பாஸ்போர்ட் இன்றி
வெளி நாட்டுப் பயணம்
மேகங்கள்.

துரத்தும் வறுமை
நாலு வினாடியில் நாற்பது படிகள்
பேப்பர் பையன்.

இரவுக் காவலாளி
தூக்கம் விரட்டும்
கடன்கள்.

சிரிக்கும் சுவர் கிறுக்கல்கள்
நினைவு படுத்தும்
ஊர் சென்ற பேத்தியை!



# மே 21, 2009
# கொடிய இரவு

**மிதயா கானவி**

ஆளையாள் இனம் காணமுடியாத கும்மிருட்டு, பெரிய மலைகளிலிருந்து உருளும் பாறாங்கல்லாய் பயங்கரமான மனிதர்களின் கர்ச்சனைகள் மனதில் ஆழமாய் இறங்கின.

அந்த சத்தங்களின் சிங்கள மொழியின் பொருள் நன்கு தெரியா விட்டாலும் அந்த ஒலிகளில் இருந்து வரும் வெப்பக் கீற்றுக்கள் உயிர்வரை சென்று சுட்டன.

எங்கிருக்கின்றோம்,

ஏன் பிடித்து வரப்பட்டோம் என்று தெரியாவிட்டாலும் இனி என்ன நடக்கப் போகிறது என ஊகிக்க முடிந்தது..

மரணபயம் அவர்களை அணுகவில்லை என்றாலும் ஒவ்வொரு அடிகளும் சாவை விட கொடூரமாக வலித்தன.

கண்களில் இருந்து கண்ணீர் வரவில்லை மாறாக இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது

கைகள் விலங்கிடப்பட்டு கிடந்தார்கள்.

“வவுனியா யோசப் முகாம்” என்ற செய்தி அவர்கள் காதில் நுளையவே,

முன்னர் அறிந்த அந்த வதை முகாமின் கொடூர நினைவுகள் அவளிற்கு தலையைப்பிய்த்தது.

“ஆமியிடம் மட்டும் பிடிபட்டு விடாதே தங்கச்சி அவனைக் கண்டாலும் நிற்காமல் ஓடுங்கள்” பிரசன்னா அண்ணா (மாவீரன்) சுகந்திரபுரத்தில் வைத்து சொல்லிச் சென்றதும் நினைவில் வந்து பல்குழலாய் வெடித்தன.

இப்போது என்ன செய்வது என்று எண்ணுவதற்கு எதுவுமில்லை

அவள் கைகள் கூட ஆறுதல் தர மறுத்தன.

அங்கு இருந்த நிமிடங்கள் எல்லாம் வருடங்களைப் போல் கொடூரமாய் கழிந்தன.

இரும்பு சப்பாத்துகளால் தலை முதல் கால் வரை ஏறி ஆள் மாறி, மாறி மிதித்தார்கள்.

பெரிய வெளிச்சத்தை முகங்களில் பாய்ச்சி மரநாய் கோழி பிடிப்பதைப் போல் ஆட்களை இனம் கண்டு ஒவ்வொருவராய் இழுத்துப் போனார்கள். இராணுவமும் இலங்கை புலனாய்வாளர்களும்..

பிடிக்கப்பட்ட எல்லோரும் போராளிகளாய் இருந்தவர்கள் என்று சொல்ல முடியாது முள்ளிவாய்க்கால் வரை பயணித்த தமிழ் பெண்களும் இருந்திருந்தார்கள்.

ஓவென கதறி ஆள இப்போது எந்த சக்தியும் இருக்கவில்லை இனி அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற நம்பிக்கை துளியளவும் இல்லை,

எந்த கேள்வியுமற்று அடித்து, உதைத்து பாலில் தொல்லைகளையும் மலிவாக செய்யத் தொடங்கி விட்ட அந்த இரவில் இலங்கை இராணுவ கொடூரர்களின் கட்டுப்பாடற்ற சித்திரவதைகளால் சிதைக்கப்பட்டு, துடிதுடித்துக் கொண்டிருந்தவர்களில் அருளும் ஒருத்தி

இனி கேட்பதற்கு யாரும் அங்கிருக்கவில்லை சிரிப்பும், கனைப்பும், கும்மாளமுமாய் சீருடைதரித்த மிருகங்கள் மனித வேட்டைகளை நடத்தி மகிழ்ந்த இரவொன்றின் கதை இது

அவள் பக்கத்தில் இருந்த பெண் ஒருத்தி அடி வாங்கி, வாங்கி திரும்ப, திரும்ப கதைத்தாள், கத்தினாள் இரக்கமற்ற இரும்பு கரங்கலோடு முரண்டு பிடித்தாள் “எல்லாம் முடிந்து போனபின் ஏன் அடிக்கிறான் தயவு செய்து விட்டு விடு எனது குழந்தை இப்போ தாய்ப்பாலுக்காக அழுது கொண்டிருக்கும்…

“ நான் போராளி இல்லை, நான் ஒர் சாமாணியப் பெண்” என்றவளை

“ நீயே ஒரு பன்னி வேண்டும் என்றால் சொல்லு

உன் பால் குடிக்க பன்றி குட்டிகளை விடுறன்” என்றான் ஒரு இராணுவ மிருகம் அரை குறை தமிழில்,

அந்த பெண் பதிலுக்கு திரும்ப கெஞ்சினாள் “ விட்டு விடு என் கணவரும் இறந்து விட்டான்”.

“விசாரித்து விட்டு உடனே விடுவதாக சொன்னதால் இரண்டு மாதக் குழந்தையை பக்கத்தில் கொடுத்து வந்தேன்.

என்னை ஏன் பிடித்தாய்” என்று கதறினாள்

எங்கள் எல்லா மனங்களையும் நாறாய் கிழித்தன அவளது கெஞ்சல்கள் அந்த அரக்க மனங்களை அசைக்கவேயில்லை,

எந்த நீதி தேவதையும் வான் இறங்கிவரவே இல்லை….

“இனி தமிழர்கள் எங்கள் அடிமைகள் நாங்கள் எது வேண்டும் மென்றாலும் செய்யலாம் பெரிய மாத்தையா எல்லாம் சொல்லியாச்சு” என்றான்

“நீ எதிர்த்து பேச முடியாது” என சப்பாத்து கால்களால் அவளது மார்பகங்களை மிதித்தான் வலிதாங்க முடியாது

ஓ வென கதறியவளது வாயினுள் குப்பைகளை திணித்து மகிழ்ந்தான்,

“ ஏய் கொட்டியாவை கூப்பிடு காப்பாற்ற வாறாங்களா என்று பார்ப்போம்”

அருளாலும் எழுந்து இருக்கவே முடியவில்லை கைகள் வலியின் மிகுதியால் சோர்வடைந்தன

நா வரண்டு தாகம் எடுத்து தவித்தது.

அருளிற்கு இரண்டு குழந்தைகள் அவர்களைப்பற்றி மனம் அப்போது நினைக்கவில்லை

“கடவுளே என்னை உடனே சுட்டு விடவேண்டும் “ என்று மனம் இரங்கி எல்லாக் கடவுளிடமும் வேண்டினாள்..

எட்டி உதைத்தார்கள்,

ஏறி மிதித்தார்கள் கேட்க யாருமற்று கலங்கி கிடந்தார்கள்.

தமிழில் உள்ள அத்தனை கேட்ட வார்த்தைகளையும் சொல்லி காறி முகத்தில்

துப்பினார்கள்.

முழுவதும் நனைத்தபின் முக்காடு எதற்கு என்று மரணத்தை எதிர்பார்த்து காத்திருந்தார்கள்.

மண்றாடினார்கள் மரணமே என்னை வந்து காப்பாற்றி விடு

உடம்பில் ஒரு ஒட்டு துணி மட்டும் உயிர், மானம் பறிக்கப்பட்டு,. கிழிக்கப்பட்டு கந்தலாய் கிடந்தது

காலை சூரிய உதயத்திற்கு முன் இந்த உயிர் பிரிய மண்டியிட்டுக்கிடந்தாள்.

இருள் முழுவதும் இரத்ததில் நனைந்து கொண்டது. ஆட்களை இனம் காணமுடியாவிட்டாலும் பெண்கள்தான் என அறியமுடிந்தது.

உயிர் பிரியும் வலியை விட கொடுமையானது உரிமைகள் பறிக்கப்பட்டதன் வலி ஆதனால் அருள் உணர்வுகள் சாவடிக்ககப்பட்டு உணர்ச்சியற்ற நிலையில் யடமாக கிடந்தாள்.

இழப்பதற்கு எதுவும் இல்லாத போது எதைப்பற்றி சிந்திப்பது. மிருகக்காட்சி சாலையில் மிருகங்களைப் பார்வையிடுவது போல வந்த கும்பல் ஒன்று பெரு வெளிச்சத்தைப் அருளின் முகத்தில் பாய்ச்சி உறுதிப்படுத்திய பின் எதையொ சிங்களத்தில் பேசி அவளை இழுத்து சென்றவர்கள்.

முன்பே வீங்கிப்போயிருந்த அவள் கன்னத்தில் தாறுமாறாய் அறைந்து விட்டு ஒரு வாகனத்தில் ஏற்றினார்கள்.

எல்லாம் முடிந்து விட்டதாக நினைத்தாள். இறுதி நிமிடங்களை எண்ணிக் கொண்டாள்.

அந்த வாகனத்தில் ஒட்டுனர் தன்னை சிஐடி என்று சொல்லிக்கொண்டான்

4 ஆம் மாடிக்கு விசாரனை என்றான். அருளிற்கு எதுவும் விளவில்லை.

சிங்கத்தின் வாயில் பிடிபட்ட புள்ளிமானிற்கு என்ன எதிர்பார்ப்பு இருக்க போகிறது....

எதுவும் அவளிற்கு புரிய வில்லை என்னை விசாரிக்க என்ன உள்ளது இனி

எனக் கேட்க மனம் பதைபதைத்தது ஆனாலும் கன்னத்தில அறைந்த முரட்டு கரங்கள் தந்த வலி இன்னும் காதில் விண் கூவியதால் மௌனமானாள்,.

அந்த எண்ண நிஷப்தத்தை அறுத்துப் போட்டது அந்த ஆண் குரல் இது வரை சிங்களத்தில் கத்திய அந்த குரல் “ என்னை தெரிகிறதா” என்றது சரளமான தமிழில்.

அந்த வார்த்தைகள்

அருளிற்கு பேர் அதிர்வாய் காதைப்பித்தது

ஆனால் மௌனம் கலைக்காது இருந்தாள்.

வாகனம் ஆமை வேகத்தில் குண்டும், குழியுமான பாதைகளால் சென்றது,

எந்த இடம் என தெரியவில்லை அருளிற்கு எதுவாக இருந்தாலும் என்ன விலங்கிடப்பட்ட கைகளுடன் தப்பிவிடவா முடியும் நடப்பதை கண்டு கொள்வோம்

என எண்ணி முடிக்கவும் வாகனம் ஒர் குளக்கரையில் நின்றது.

தன்னை சி ஐ டி எனக் கூறிக்கொண்டவன்

பின்னால் விலங்கிடப்பட்ட அவளது கை விலங்கை கழட்டி விட்டபின் எதுவும் பேசாமல்

ஒர் முழுச் சட்டையை கொடுத்து போடுமாறு சைகை செய்தான். அப்போதும் அருள் நினைத்தாள் தன்னை சுட்டு இந்த குளத்தில் போடப்போறான் ஆனாலும் கொஞ்சம் நல்லவன் தான் போல அம்மணமாக இல்லாமல் உடுப்பு தந்துள்ளான் அதுவே காணும்...... ஆனாலும்

சிறிது வினாடியில் வாகனம் மீண்டும் புறப்பட்டது

அப்போது அருளின் குழந்தையின் பெயர் சொல்லி விசாரித்தான்

அவளது கணவரையும், கேட்கவே தயக்கமாகவும்

உறுதியாகவும் தெரியாது என்றவளின் மனம் தடுமாறத் தொடங்கியது

யார் இவன் என்று புரியவில்லை ஆனாலும் பிள்ளையின் பெயர் சொல்லுமளவில் எம்முடன் நெருக்கமானவனா? என்ற எண்ணங்கள் பல் குழலாய் வெடித்து சிதறின.

“இன்னும் தெரியவில்லையா” இல்லை என்ற ஒற்றை சொல்லில் முடித்தாள்.

ஒரு பங்குனி வெயில் கொழுத்திக் கொண்டிருந்த நாளேன்றில் (2005 ஆம் ஆண்டு) நன்கு தெரிந்த ஒருவரின் வாகனத்தில் கிளிநொச்சியில் இருந்த அருளின் வீட்டிற்கு விருந்தாளியாக இன்றி நோயாளியாக வந்தான். சின்னம்மை (chicken pox) நோயுடன் உடல் முழுவதும் தொப்பளங்கள், கடுமையான காச்சல்,என நோயின் வலியால் துடித்து கொண்டிருந்தவனை காட்டி “இவனை இரகசியமாக, பாதுகாப்பாக வீட்டில் வைத்து பராமரித்து மாறியவுடன் தகவல் தருமாறு சொல்லி சென்றார்,.

அவனின் உடல் நிலை மோசமாக மாறியது

அருள் மருத்துவ துறையை சேர்ந்தவள் என்பதால் நுணுக்கமாகவும், ஒரு தாயைப் போலும பதிணனந்து நாட்களாக வீட்டில் வைத்து பராமரித்து நன்கு தேற்றி புது தெம்புடன் அனுப்பி வைத்தவன் தான் இவன் என்ற உண்மை தெரித்த போது மனம் எரிமலையாய் பிழந்தது.

இப்போது அவன் கம்மிய குரலில் சொன்னான் “நான் உங்களை பல நூறு பெண்புலிகளை கைது செய்திருக்கும் இடத்தில் விடப்போகிறேன் அங்கு தான் உங்களிற்கு இப்போ பாதுகாப்பு நீங்கள் எனக்கு செய்த அளவிற்கு என்னால் எதையும் செய்ய முடியவில்லை மன்னித்து விடுங்கள். புதிதாக போகுமிடத்திற்கு இங்கிருந்து வந்த தகவல் எதையும் சொல்லி விடாதீர்கள்’ என சொல்லிச் சென்றான்.

அருள் பம்பைமடு பெண்கள் முகாமில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்தவர்களை விடுவிக்கப்பட்டபோது அவளும் வெளியில் வந்தாள். ஆனாலும்

இன்று உயிரிருந்தும் உறக்கமற்றவளாக வாழ்கின்றாள்.

எண்ணற்ற விடைதெரியா கேள்விகள் அவள் மனதில்

யார் இவன்?

இன்றும் அவனது முகம் நினைவில்லை,

பெயர் சரியாக தெரியாது.

அவன் நல்லவனா?

நல்லவனாக இருந்தால் என்னை மட்டும் ஏன் காப்பாற்ற நினைத்தான். அத்தனை அலறல் குரல்களும் இவன் இதயத்தை உருக்க வில்லையா?

அல்லது அவனின் கையறுநிலையா?

எனக்கு மட்டும் செஞ்சோற்று கடன் தீர்த்தானா?

உறவுகளிற்கு என்ன ஆனது இன்னும் எப்படி எல்லாம் வதைத்தார்கள்.

உயிருடன் திரும்பினார்களா? அல்லது வேறு கொண்று புதைத்தானா, காணாமல் ஆக்கப்பட்டார்களா?.

யாரிடமும் பகிர்ந்து விட முடியாத வலிகள் வேதனையை விட வேறெதையும் தந்து விடப்படவில்லை என்று தெரிந்தும் சேமித்து கொள்கிறாள் ஏனெனில் இந்த உண்மைகளை நாம் கூறினால் அன்றி யார் அறிவார்.

(அருள் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

நன்றி, )

பிரான்சிஸ் திமோதிஸ், இலங்கை

# மீண்டெழுதல்

அச்சமுறும் நிகழ்வொன்று
எங்கள் கண்முன்னே தெரிகிறது.
கனவுகளைப் புரிந்து கொள்ளாத
ஈக்கள் மொய்க்கும் இச் சட்டத்தின்
நடுவே
கிழிந்த கந்தல் துணிகளை
போர்த்திக்கொண்டு
பரிதவித்துக் கிடக்கிறோம்.
இங்கே;
வானிருந்து பொழிகின்ற ஒவ்வொரு
மழைத்துளியும்
வறுமையாய் வந்து விழுகிறது.
பூக்கள் மலர்தலில் மெலிதலையும்,
பறவைகள் ஊணின்றி மடிதலையும்
காண்கிறோம்.
கத்தியின்றி ரத்தமின்றி மரணம் நிகழும்
ஓர்
போர்க்களத்தில் வாழ்கிறோம்.
தீப்பிடித்து எரியும் ஓர்
தேசத்தின் மடியில்
சுடப்பட்டுக்கிடக்கிறோம்.
எத்தியோப்பிய காற்று
இதயத்தின் கழுத்தை நெரிப்பதாக
தினமொரு
வலியை உந்துகிறது மூளை.
ஓ… வயிறு ஒட்டிய சோமாலிய
சிசுக்களே..!
இதோ… மீண்டும்;
நீங்கள் பிறக்கும் காலம்
தோன்றப்போகிறது.
இப்படி சுதந்திரத்தின் பின்
எல்லா தேர்தல்களிலும் வாக்களித்து
விழித்த கண்ணோடு நாங்கள்
காத்திருக்கும் வேளையில்…
ஏழையின்;
கதவு மூலையில் புதிதாய் பூவொன்று
முளைக்கிறது.

சிவதர்சனி இராகவன்

# முள்ளிவாய்க்கால் முற்றுப்புள்ளியா ... இல்லை!!



வற்றாத கண்ணீர் ஊற்றாய்
இன்னும்இந்த நொடி வரை
அந்த வார்த்தை
செவிகளில் விழுந்திட
உயிர் வலிக்க
உணர்வுகள் மேலிட
துரோகங்களின் வலி கொல்ல
ஏன் ஏன் இப்படி?
நாம் என்ன செய்தோம்
நமக்கேன் இந்த தண்டனை!!
ஏதுமறியாப் பிஞ்சுகள்
நெஞ்சின் அழுகுரல்
எப்படி செவி விட்டு விலகும்!!
இது பழிவாங்கல் அல்ல அப்பட்டமான
துரோகம் ..
இன அழிப்பு
இதனை மறைத்து
எதை எழுதத் துணிகிறது எதிரி படை!!
முள்ளி வாய்க்கால்
வெறும் நினைவுச் சின்னமாய் மட்டும்
தமிழர் நெஞ்சங்களில்
தங்கிவிடப் போகிறதா?
அல்ல அல்ல அது
உச்சக்கட்ட துரோகம்
பெரும் கொலைக்களம்,
மறுக்க மறக்க முடியா
வெறித்தன செயல்
ஒன்றா இரண்டா
அணிசேர்ந்த வஞ்சக நாடுகளின் நெஞ்சத்தில்
ஈரமற்ற ஈனத்தனமான படுகொலை!!
பத்தல்ல பதின் நான்கல்ல பல்லாயிரம்
ஆண்டுகள் கடந்தாலும்
பாலகர் பாவையர் மூத்தவர் களத்தில் நின்றவர்
துரோகத்தால் வெந்தவர் என அத்தனை
தமிழ் பூக்களின் உள்ளத்திலும் உள் நுழைந்து
உட்கார்ந்து இருக்கப்போகும் நினைவுகள்!
விடுதலை கேட்ட
இனமொன்று மண்ணில் புதைக்கப்பட்ட நாள்
இது
கண்ணில் கனல் ஏற்றி
கயமை கொல்ல சென்ற மறவர் வஞ்சிக்கப்பட்ட
நாள்!
நந்திக்கடலில் சிந்திய குருதி இன்னும்
உறைந்திருக்கும் கரிய நாள்!
ஆனந்தபுரத்தில் ஆனந்தம் அழித்து
அரங்கேற்றிய அரக்கத்தனத்தின் அடையாள நாள்!
வஞ்சகம் வென்றிட
தஞ்சமானவர் தறித்து வீழ்த்தப்பட்ட நாள்!
கூட்டுச் சதியும் குவிந்த
பிணங்களுமாய்
கதறிய குழந்தைகளும்
காற்றில் கரைந்த பிண வாடையும் பரந்த நாள்!
இன்னும் அழுதென்ன இலாபம்
அதை மறந்து கிடக்க
முடியா சோகம்
நீதிக்கு அலையும் எம் எஞ்சிய இனத்தின் தீரம்
தீராது தீராது ஒரு நீதி கிட்டாது மடியாது
எம்மினத்தின் சுதந்திர வேட்கை!!
அது வரை முள்ளிவாய்க்கால் மறையாது சிதையாது
எம்மில் உறைந்தே கிடக்கும்!! உணர்வாய்
உணருவாய்....


# முந்தைய இதழ்கள்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்